8697

ஹெக்டர் கொப்பேகடுவ
கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

# வருடாந்த அறிக்கை 2009

ஹெக்டர் கொப்பேகடுவ
கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
114, விஜேராம மாவத்தை
கொழும்பு 7

869

03 JAN 2011

# வருடாந்த அறிக்கை
# 2009

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
114, விஜேராம மாவத்தை
கொழும்பு 7

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| வருடாந்த அறிக்கை - 2009 | 1-2 |
| ஆளுனர் சபை | 2-3 |
| கண்ணோட்டம் | 4-5 |
| கமத்தொழில் கொள்கை, கருத்திட்ட ஆய்வுப் பிரிவு | 6-25 |
| சூழல் நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு | 25-32 |
| சந்தைப்படுத்தல், உணவு கொள்கை கம-வியாபாரப் பிரிவு | 32-42 |
| மனித வளங்கள் நிறுவனரீதிசார் அபிவிருத்திப் பிரிவு | 42-46 |
| புள்ளிவிபர, தரவு படியமைத்தல் அலகு | 46-51 |
| 2009 டிசம்பர் 31இல் உள்ளவாறு பதவியணியினர் நிலை | 51 |
| பதவியணியினரின் முன்னேற்றம் | 52 |
| கணக்குகள் | 53-63 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 64-74 |

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி
பயிற்சி நிறுவகம்,
114, விஜேராம மாவத்தை,
கொழும்பு 07.
17.08.2010

கௌரவ கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்
கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு
"கொவிஜன மந்திரய"
80/5 ரஜமல்வத்த வீதி
பத்தரமுல்ல

**வருடாந்த அறிக்கையும், கணக்காயப்பட்ட கணக்குகளும் - 2009**

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின் பிரகாரம் ஆளுனர் சபையின் சார்பில் 2009 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் ஆவணங்களை நான் சமர்ப்பிக்கின்றேன்.

(1) வருடாந்த அறிக்கை
(2) வருமானம், செலவினத்தின் கணக்காயப்பட்ட கூற்று
(3) கணக்காயப்பட்ட ஐந்தொகை
(4) கணக்குகள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் செய்யப்பட்ட அவதானிப்புகள்

தங்கள் விசுவாசமுள்ள

தலைவர்
ஆளுனர் சபை

# வருடாந்த அறிக்கை - 2009

1972இன் 5ஆம் இலக்க கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் கீழ் 1972இன் நியதியாக்க உறுப்பொன்றாக ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம் (ஹெ.க.ஆ.ப.நி.) தாபிக்கப்பட்டது. இது கமநல அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சின் கீழ் நியதியாக்க உறுப்பொன்றாகத் தொழிற்படுகின்றது. கமநல மற்றும் கிராமியத் துறையின் கொள்கை முனைப்பிலான ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் தேவைகளை மேம்படுத்துவதற்காக பிரதானமாகத் தாபிக்கப்பட்டது. அது 1972இல் நாட்டில் கமநல ஆராய்ச்சியின் முன்னோடியொன்றாகத் தாபிக்கப்பட்டது முதல் சமூக-பொருளாதார ஆராய்ச்சியையும், பயிற்சியையும் நடத்துவதிலும், கமநலத் துறை அபிவிருத்திக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்காக தகவலை வழங்குவதிலும் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட வளமிக்க அனுபவங்களை ஹெ.க.ஆ.ப.நி. கொண்டுள்ளது.

**கடப்பாடு**

மேற்படி சட்டத்தின் பிரிவு 3(1)இன் ஏற்பாடுகளின் கீழ், நிறுவகத்தின் பொதுவான கடப்பாட்டிலான நோக்கங்கள் வருமாறு:

i. கமநல ஆராய்ச்சியில் பேணுதல், உதவியளித்தல், ஊக்கமளித்தல் அத்துடன் ஒத்துழைத்தல்;

ii. அரசாங்கத் திணைக்களங்கள், உள்ளூராட்சிச் சபைகள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், மற்றும் வேறு நிறுவனங்கள் ஆகியவற்றினால் பொறுப்பேற்கப்பட்ட கமநல ஆராய்ச்சியை ஒருங்கிணைத்தல்;

iii. கமத்தொழிலின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் நிறுவனரீதியான காரணிகள் தொடர்பில் ஆய்வுகளையும், ஆராய்ச்சியையும் மேற்கொள்ளுதல்;

iv. கமத்தொழில் நோக்கங்களுக்காக காணியின் பொருளாதார உபயோகம் தொடர்பில் ஆய்வுகளையும், ஆராய்ச்சியையும் மற்றும் கற்கைகளையும் பொறுப்பேற்றல்;

v. கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பில் சமூக-பொருளாதார ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்;

vi. கமநல ஆராய்ச்சி தொடர்பாக பயிற்சி வசதிகளையும், திட்டங்களையும் ஒன்றில் தனியாக, அல்லது இலங்கையில், அல்லது வெளிநாடுகளில் உள்ள வேறு நிறுவனங்களுடன் இணைந்து வழங்குதல் அல்லது அமுல்செய்தல். அத்துடன் இவை தொடர்பில் டிப்ளோமாக்கள், பட்டங்கள், பரிசுகள், அதிவிசேட சித்திகள் ஆகியவற்றை வழங்குதல்.

vii. உள்ளூர், பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் மகாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றுக்கு ஆதரவளித்தலும், நடத்துதலும்;

viii. ஆசிய நாடுகளின் பிராந்தியத் தேவைகளுக்கு சேவையாற்றுவதற்காக அவற்றின் ஒத்துழைப்புடன் கமநலக் கட்டமைப்பின் பிரச்சனைகள் தொடர்பில் இத்தகைய ஆராய்ச்சியை மேற்கொள்ளுதலும், கமநலப் பிரச்சனைகள் மீது தகவலைச் சேகரிப்பதற்கும், பரப்புவதற்கும் நிலையமொன்றை வழங்குதலும்;

ix. இத்தகைய ஆராய்ச்சியை விசேட மேற்கோளுடன் இலங்கைக்கும், பொதுவாக ஆசிய நாடுகளுக்கும் கமநல அபிவிருத்தியுடனும், நவீனமயப்படுத்தலுடனும் தொடர்பான பிரச்சனைகளுக்கு தொடர்புபடுத்தல்.

**நோக்கு**

நிலைத்திக்கத்தக்க கமநல மற்றும் கிராமிய அபிவிருத்திக்கு அறிவைத் தோற்றுவிப்பதற்கும், பரப்புவதற்கும் தலைமைப் பதவியை வகித்தல்.

**செயற்பணி**

ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகளை நடத்துவதன் மூலம் கமநல மற்றும் கிராமியத் துறையைப் பலப்படுத்துதல்

**குறிக்கோள்கள்**

i. கமநல பிரச்சனைகள் தொடர்பில் சமூக-பொருளாதார ஆராய்ச்சியில் திறமையின் நிலையமொன்றாக விளங்குதல்;

ii. அரசாங்க, வியாபார மற்றும் ஆராய்ச்சி சனசமூகங்களில் திட்டமிடலாளர்களுடனும், கொள்கை வகுப்போருடனும் நெருக்கமாக இணைந்திருத்தல்;

iii. அறிவைத் தோற்றுவிப்பதன் மூலமும், நேர காலத்திற்கு பரப்புவதன் மூலமும் கொள்கை நடைமுறையை அதிகளவு செயற்றிறனாக்குதல்;

iv. தேசிய கொள்கைப் பிரச்சனைகள் மீது சுதந்திரமான மதிப்பீடுகளை வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு அறிவித்தல்;

v. அதன் பணியாளரின் ஆற்றலளவுகளிலும், நிறுவனத்தின் அறிவுத் தளத்திலும் மூலதனமிடுவதன் மூலம் சமூக-பொருளாதார கொள்கைக்கான ஆற்றலளவைப் பலப்படுத்துதல்;

vi. பயிற்சியின் ஊடாக கிராமிய அபிவிருத்திப் பங்குதாரர்களின் ஆற்றலளவை அதிகரித்தல்.

## ஆளுனர் சபை

| | | |
|---|---|---|
| திரு.ஜே.ரஞ்சித் விஜேதிலக்க | தலைவர் | செயலாளர், கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு (2009 ஜூன் வரை) |
| திரு.எஸ்.அமரசேகர | தலைவர் | செயலாளர், கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு (2009 செப்ரெம்பர் முதல்) |
| திரு.வி.கே.நாணயக்கார | பணிப்பாளர் | பணிப்பாளர், ஹெ.க.ஆ.ப.நி. (06.08.2009 வரை) |
| பேராசிரியர் ரஞ்ஜித் பிரேமலால் டீ சில்வா | பணிப்பாளர் | பணிப்பாளர், ஹெ.க.ஆ.ப.நி. (07.09.2009 முதல்) |
| திரு.டபிள்யு.எம்.ஜயதிலக்க, | சபை உறுப்பினர் | மேலதிகச் செயலாளர், (காணிகள்), காணி அபிவிருத்தி அமைச்சு |
| திரு.எம்.பி.ஹேவாவிதாரன | -அதே- | உதவிப் பணிப்பாளர், தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களம் |

| | | |
|---|---|---|
| திருமதி பிம்பா குணதிலக்க | -அதே- | பணிப்பாளர், தேசத்தைக் கட்டியெழுப்புதல் அமைச்சு |
| திரு.ஜி.டி.டபிள்யு.ஜயவர்தன | -அதே- | மேலதிகச் செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு |
| திருமதி மாலினி பீரிஸ் | -அதே- | செயலாளர், உயர் கல்வி அமைச்சு |
| திருமதி கமலா உயன்வத்த | -அதே- | மேலதிகச் செயலாளர், கமத்தொழில் அமைச்சு |
| திரு.சாம் எதிரிசூரிய | -அதே- | மேலதிகச் செயலாளர், வர்த்தக அமைச்சு |
| திரு. கே.எல்.டீ சில்வா | -அதே- | சிரேஷ்ட பொருளியலாளர், இலங்கை மத்திய வங்கி (2009 பெப்ரவரி வரை) |
| பேராசிரியர் புத்தி மாரம்பே | -அதே- | கமத்தொழில் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி சி.குடாகமகே | -அதே- | கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் (12.06.2009 வரை) |
| கலாநிதி (திருமதி) ஜினாதரி டீ சொயிஸா | -அதே- | கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் (12.06.2009 முதல்) |
| திரு.எஸ்.டி.எ.பீ.பொரலஸ்ஸ | -அதே- | காணி ஆணையாளர் நாயகம் |
| திரு.ரவீந்திர ஹேவாவிதாரன | -அதே- | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் |
| திரு.எச்.பி.எஸ்.சோமசிறி | -அதே- | நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் |
| திரு.எ.பி.ஜி.கித்சிறி | -அதே- | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் |
| திரு.எ.எம்.குணவர்தன பண்டா | செயலாளர் | பதிவாளர்/ஹெ.க.ஆ.ப.நி. |

# கண்ணோட்டம்

மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது, 19 ஆராய்ச்சிக் கருத்திட்டங்களில் 14 முடிவடைந்தன; முன்மொழிவின் தயாரிப்புக் கட்டத்தில் ஒன்று கைவிடப்பட்டதுடன், வேறு அவசர கடப்பாடுகளின் காரணமாக நான்கு ஆய்வுகள் முடிக்கப்படவில்லை. முடிக்கப்பட்ட ஆய்வுகளில், *அபி வவமு-ரட்ட ஹதமு* தேசிய உணவு உற்பத்தித் திட்டம்; கைவிடப்பட்ட நெற்காணிகள், சேதன உரத்தைப் பிரசித்தப்படுத்தல் மற்றும் பிளாஸ்டிக் கூடைகளின் உபயோகம் ஆகியன தொடர்பான பிரச்சனைகளை மூன்று ஆய்வுகள் கையாண்டன. ஈர வலயத்தில் நடத்தப்பட்ட கைவிடப்பட்ட நெற்காணிகள் மீதான ஆய்வானது அழிவடைந்துள்ள கால்வாய்களின் காரணமாக நீரைப் பெறுவதற்கான இயலாமை போன்ற நீர் தொடர்பான பிரச்சனையாக விளங்கின என்பதுடன், இது நெற் காணிகளை கைவிடுவதற்கு பங்களித்தது எனக் கண்டறிந்ததுடன், ஈர வலயத்தில் அணைக்கட்டுக்களையும், கால்வாய்களையும் புனரமைப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஆய்வு சிபார்சு செய்தது. சேதன உரம் சம்பந்தமாக, பயிற்றுவிக்கப்பட்ட 90 சதவீதத்திற்கு மேற்பட்ட கமக்காரர்கள் உரத்தை உற்பத்தி செய்கிறார்கள், வேறுபட்ட பயிர்களுக்கு சிபார்சு செய்யப்பட்ட சேதன உரத்தின் சரியான தொகையின் உபயோகம் பற்றி பெருமளவு கமக்காரர்கள் உறுதியற்றிருக்கின்றனர் எனக் கண்டறியப்பட்டது. கமநல அபிவிருத்திக்கு நிலைய மட்டத்தில் செய்துகாட்டல் பாத்திகள் அமைக்கப்பட வேண்டுமெனவும், உர உற்பத்தியாளர்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஊக்குவிப்புகள் வழங்கப்பட வேண்டுமெனவும் ஆய்வு சிபார்சு செய்தது. பிளாஸ்டிக் கூடைகளின் உபயோகம் மீதான ஆய்வானது கமக்காரர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட கூடைகளில் 45 சதவீதம் மட்டுமே பிரதானமாக ஏற்றி இறக்குபவர்களின் தயக்கத்தின் காரணமாக பழ, மரக்கறி ஏற்றி இறக்கலுக்கு கமக்காரர்களினால் பயன்படுத்தப்பட்டன எனக் கண்டறியப்பட்டது. வர்த்தகர்களுடன் கூடைகளைப் பரிமாறுவதற்கு கமக்காரர்கள் இணங்கவில்லை என வர்த்தகர்கள் அறிவித்தனர். பழங்களையும், மரக்கறிகளையும் ஏற்றி இறக்குவதற்கு வர்த்தகர்கள் பிளாஸ்டிக் கூடைகளை பரந்தளவில் பயன்படுத்தினார்கள். இக் காரணத்திற்காகவே கொள்வனவு செய்யப்பட்ட கூடைகளில் 73 சதவீதமானவை பயன்படுத்தப்பட்டன என ஆய்வு கண்டறிந்தது. பிளாஸ்டிக் கூடைகளின் உபயோகத்தை முன்னேற்றுவதற்கு கமக்காரர்களை ஒழுங்குபடுத்துவதன் மூலமும், பின்னோக்கியதும், முன்னோக்கியதுமான தொடர்புகளை விருத்தி செய்வதன் மூலமும் ஒன்றிணைந்த விநியோக முறைமை தாபிக்கப்பட வேண்டும் என சிபார்சு செய்யப்படுகின்றது.

மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட *கிரி வீதுரு* திட்டத்தின் (பால் கோப்பைத் திட்டம்) அமுலாக்கத்தினதும், சாதனைகளினதும் அமுலாக்கத்தின் தற்போதைய நிலையை மதிப்பிடுவதற்காக மதிப்பாய்வுத் திட்டமொன்று பொறுப்பேற்கப்பட்டது. 92 சதவீதத்தினர் நிர்ணயிக்கப்பட்ட வயது எல்லைக்குள் இருப்பதாகவும், 20 சதவீதத்தினர் பாலை சௌகரியமாகப் பெறுவதாகவும், 57 சதவீதத்தினர் காலை 10.00 மணிக்கு முன்னர் பாலை நுகர்வதாகவும், 30 சதவீதத்தினர் நாளாந்த அடிப்படையொன்றில் 200 மி.லீ. பாலைப் பெறுவதாகவும் கண்டறியப்பட்டது. சகல பங்காளர்களுக்கும் சௌகரியத்தை உறுதிப்படுத்துமுகமாக, இத்திட்டத்தை நிறுவனரீதிப்படுத்துவதற்கான அவசியத்தை ஆய்வு சிபார்சு செய்தது. நெற் கமக்காரர்களின் சேமநலனை உறுதிப்படுத்துவதற்காக, கமக்காரர்களின் பெறுகைகளினதும், கொடுப்பனவுகளினதும் விகிதமான வர்த்தகத்தின் நியதிகளைக் கணக்கிடுவதற்காக ஆய்வொன்று பொறுப்பேற்கப்பட்டது. காலப்போக்கில் கமக்காரர்களின் சேமநலன் சீர்கேடடைந்துள்ளதாகவும், ஆனால், உர மான்யத்துடனும், நெல்லின் உத்தரவாத விலையின் துரித அதிகரிப்புடனும் ஓரளவுக்கு அது கணிக்கப்பட்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டது.

ஆராய்ச்சிக்கு மேலதிகமாக, மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது, 10 பயிற்சித் திட்டங்களை நடத்துவதன் மூலம் 190க்கு மேற்பட்ட பங்கெடுப்பாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள். இவற்றில், வறுமை நோக்கிலான கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் ஈட்டப்பட்ட அறிவையும், அனுபவத்தையும் பரிமாறுவதை இலக்காகக் கொண்ட வறுமையைத் தணிப்பது மீதான பயிற்சித் திட்டம் பொதுநலவரசு செயலகத்தினால் நிதிப்படுத்தப்பட்டது. உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் திட்டமிடல் மீதான தீர்மானமெடுத்தலில் அறிவை மேம்படுத்துவது மீதான நோக்குடனான சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு பயிற்சித் திட்டங்களுக்காக விஸ்தரிப்பு பணியாளரிடமிருந்து உயர்வான கிராக்கியொன்று இருந்தது. இரு திட்டங்கள் திட்டமிடப்பட்ட

போதிலும், ஆகுசெலவு பரிமாறிக் கொள்ளும் அணுகுமுறையொன்றை ஏற்றுக்கொள்வதன் மூலம், 5 திட்டங்கள் நடத்தப்பட்டன.

1970களின் பிற்பகுதியிலிருந்து கிரமமான செயற்பாடொன்றாக விளங்கிய பங்காளர்களுக்கான சந்தைத் தகவலின் ஏற்பாடு கிரமமான வாராந்த/மாதாந்த திரட்டுக்களை வெளியிடுவதன் மூலமும், ஊடகங்களுக்கு நாளாந்த விலைகளை அனுப்புவதன் மூலமும், நிறுவகத்தின் இணையதளத்தின் மீது நாளாந்த விலைகளைப் புதுப்பிப்பதன் மூலமும் தொடர்கின்றது. மேலதிகமாக, ஜனாதிபதி செயலகத்தின் கீழ் வரும் உணவுக் கொள்வனவு, கண்காணித்தல் அலகுக்கு பண்டங்களின் விலைகள் கிரமமாக அனுப்பப்படுகின்றன. அத்துடன், பின்வருவன மீது வேண்டுகோளின் பேரில் விசேட சந்தை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன: ஜனாதிபதி செயலகத்திற்கு உள்ளூர் பதப்படுத்தல் கைத்தொழில்களுக்கும், உணவகங்களுக்கும் தக்காளியின் தேவைகள்; கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சுக்கு எள்ளு, உழுந்து, சோளம் மற்றும் இஞ்சி ஆகியன மீதான நிலையியல் அறிக்கை.

கமத்தொழில், கமநல சேவைகள் அமைச்சு, வர்த்தக, கூட்டுறவு அமைச்சு, வளிமண்டலவியல் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, மற்றும் நீர்ப்பாசன முகாமைத்துவத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு விசேட குழு பெரும்போக நெற்செய்கை மீதான காலநிலை மாற்றத்தைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டது. குழு கிரமமாகக் கூடியதுடன், காலநிலை மாற்றம் மீதான மறுதலையிலான தாக்கத்தைத் தணிப்பதற்காக அவசியமான சிபார்சுகள் வழங்கப்பட்டன.

2009 ஜூன் 22-28 வரை "தேசிய உணவு வாரத்தைக்" குறிப்பதற்காக, சுதந்திரத்தின் பின் பண்ணைப் பொருளாதாரத்தின் சாதனைகளையும், தோல்விகளையும் முனைவுபடுத்துவதற்காக ஊடக மகாநாடொன்றை நிறுவகம் ஒழுங்கு செய்ததுடன், *கொவிஜனதா* சஞ்சிகையின் விசேட இதழொன்றையும் வெளியிட்டது.

நிறுவகத்தின் இன்டர்நெற் ஆகுசெலவைக் குறைப்பதற்கு விசேட கவனமொன்று செலுத்தப்பட்டது. *i*power உடன் SLT இணைப்பினைப் பதிலீடு செய்வதன் மூலம் மட்டுப்படுத்தப்படாத இணையதள இடம் போன்ற நன்மைகளை மேம்படுத்திய அதேவேளை ஆகுசெலவைக் கணிசமானளவு குறைக்கக்கூடியதாக இருந்தது.

சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்களின் பற்றாக்குறை நிறுவகத்தினால் முகம் கொடுக்கப்பட்ட பாரிய பிரச்சனையொன்றாகும். மதிப்புரையின் கீழுள்ள ஆண்டில், 5 சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்கள் நிறுவகத்தை விட்டுச் சென்றார்கள். ஆராய்ச்சியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆனால், சிரேஷ்ட தரங்களுக்கு ஒருவருமே தகைமையைப் பெற்றிருக்கவில்லை. ஆகக்குறைந்த தரத்திற்கு ஐந்து ஆராய்ச்சியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டார்கள். ஆண்டின் இறுதியில் ஊழியர்கோப்பில் உள்ள 46இல் 31ஆக மொத்த ஆராய்ச்சிப் பணியாளர் விளங்கினர்.

2009ஆம் ஆண்டின் போது நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் இனிவரவுள்ள பக்கங்களில் சுருக்கப்பட்டுள்ளன.

**பேராசிரியர் ரஞ்ஜித் பிரேமலால் டி சில்வா**
**பணிப்பாளர்**

## கமத்தொழில் கொள்கை, கருத்திட்ட மதிப்பாய்வுப் பிரிவு

### முடிக்கப்பட்ட ஆய்வுகள்

**1. இலங்கையில் நெல் துறையில் வர்த்தகத்தின் நியதிகள்**

**ஆராய்ச்சிக் குழாம்:** செல்வி எம்.டபிள்யு.எ.சி.எஸ்.விஜேதுங்க - ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியம்

பண்ணை உற்பத்திகளுக்காக பெறப்பட்ட விலைகளின்தும், பண்ணை உற்பத்திகளுக்கும், பாவனையாளர் பொருட்களுக்கும் கொடுப்பனவாகிய விலைகளினதும் விகிதமொன்றான வர்த்தகத்தின் நியதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் நெற் கமக்காரர்களின் சேமநலனை இந்த ஆய்வு பரிசீலிக்கின்றது. 1990-2008ஐக் கொண்ட காலத்தை அடக்கி அனுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய நான்கு பாரிய நெல் உற்பத்திசெய்யும் மாவட்டங்களின் நெல்லினதும், உள்ளீடுகளினதும் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பாவனையாளர் உற்பத்திகளினதும் விலைகள் மீதான இரண்டாம்நிலைத் தரவு அப்பியாசத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.

**குறிப்பான நோக்கங்கள்**

i. நெல்லின் விலையிலும், உள்ளீடுகளின் விலைகளிலும் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பாவனையாளர் பண்டங்களிலும் போக்குகளைப் பரீட்சித்தல்.

ii. உள்ளீடுகளினதும், மற்றும் வேறு பாவனையாளர் பண்டங்களினதும் விலைகளுடன் ஒப்பிட்டு நெல்லின் விலைகளின் நடத்தையிலான முறையை உறுதிப்படுத்தல்.

iii. நெல் பண்ணைத் துறை பொருளாதாரம் மீது விலை நகர்வுகளில் இம் மாற்றங்களின் தாக்கங்களை ஆய்தல்.

**முடிவுகள்**

i. 1990-2005 காலத்தின் போது நெல் விலை அதிகரிப்பின் வீதம் மிகவும் மெதுவானதாகும். எனினும், 2007இன் இறுதியை நோக்கி, உலகளாவிய உணவு நெருக்கடிநிலையுடன் விரைவான வீதமொன்றில் நெல்லின் விலைகள் உயர்வடைந்துள்ளன. தள ஆண்டுடன் (1990) ஒப்பிடுகையில், நான்கு மடங்கால் உற்பத்தியாளர் விலைக் காட்டி அதிகரித்துள்ளது.

ii. இக்காலத்தின் போது உற்பத்தியாளர் விலைகளும். உள்ளீடு விலைகளும் அதிகரித்துள்ள போதிலும், உள்ளீடு விலை அதிகரிப்புகளின் வீதத்துடன் பண்ணையிலான விலைகள் ஈடானவை அல்ல (உற்பத்தியாளர் விலை அதிகரிப்பினை விட உள்ளீடு விலைகள் இரு மடங்கால் அதிகரித்துள்ளன). எனவே, நெல் துறையில் வர்த்தகத்தின் நியதிகளை வீழ்ச்சியுறுவதை அது விளைவித்துள்ளது. 2008இல், தமது நெல்லுக்கு உயர்வான விலைகளைக் கமக்காரர்கள் பெற்றதன் காரணமாக, இது திட்டமாக மாற்றமடைந்தது.

iii. மொத்த ஆகுசெலவுக்கு சரீரஉழைப்பு ஆகுசெலவின் பங்களிப்பு 50% ஆகும். இது உயர் மட்டத்திலான இயந்திரவாக்கத்தின் காரணமாக ஹம்பாந்தோட்டையில் 36%க்கு குறைவடைந்துள்ளது. 1990உடன் ஒப்பிடுகையில், உள்ளீடுகள் மத்தியில், ஆகக்கூடுதலான அதிகரிப்பினை (ஏழு மடங்கு) வேதனத்தின் வீதம் பதிவுசெய்ததுடன், அதை இயந்திராதிகளும், கம-இரசாயனங்களும் (ஆறு மடங்கு) தொடர்கின்றன.

iv. 2008இல் வர்த்தகத்தின் நியதிகள் பெரும் போகத்தில் 0.79ஐ அடைந்ததுடன் (2007உடன் ஒப்பிடுகையில் 69% அதிகரிப்பு) சிறு போகத்தில் இது 0.72 ஆகும் (2007 உடன் ஒப்பிடுகையில்

37% அதிகரிப்பு). இவையே முறையே 1992இனதும், 1993இனதும் பின்னர் வர்த்தகப் பெறுமதிகளின் ஆகக்கூடுதலாகப் பதிவுசெய்யப்பட்ட தவணைகளாகும். வர்த்தகத்தின் நியதிகளின் பெறுமதி 1ஐக் கொண்ட தள ஆண்டு (1990இல்) பெறுமதியை இன்னுமே ஒரு போதும் மீறவில்லை அல்லது அப் பெறுமதியை இதுவரையாவது அடையவில்லை.

v. பாவனையாளர் பண்டங்களுடன் அதாவது பாண், பால்மாவு மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில், வர்த்தகத்தின் நியதிகள் ஆயப்பட்ட காலத்தின் போது சீர்கேடடைந்துள்ளன. இது நெற் கமக்காரர்களின் கொள்வனவு சக்தியிலும், வாழ்க்கைத் தரங்களிலும் வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

**விதந்துரைப்புகள்**

i. சரீரத்தொழில் பற்றாக்குறை பிரச்சனைக்கும், இணைந்துள்ள உயர் வேதன வீதங்களுக்கும் தீர்வொன்றாக நெற் செய்கையில் சரீரத்தொழில் மீதப்படுத்தல் பொறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

ii. இலகுவானதும், குறைந்ததுமான வட்டியிலான சந்தைப்படுத்தல் கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் உயர்வான விலையொன்றில் விற்பனை செய்வதற்கு இயலுமானவரை நெல்லை இருப்பில் வைத்திருப்பதற்கு உள்ளூர் நெல் கமக்காரர்களுக்கு ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பது அரசாங்கத்திற்கு அவசியமானதாகும்.

iii. உயர்வான விலையொன்றைக் கொண்டிருப்பதற்கு கமக்காரர்களுக்கு நெல்லின் தரத்தை முன்னேற்றுவது அவசியப்பட்ட ஒரு விடயமாகும்.

## 2. இலங்கையின் ஈர வலயத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற் காணிகளின் வீழ்ச்சி

**ஆராய்ச்சிக் குழாம்:** திரு.எஸ்.அபாசிங்க - இணைப்பாளர்
திரு.என்.எஸ்.பீ.அபாகந்த - இணை-ஆராய்ச்சியாளர்
திருமதி எச்.எம்.எஸ்.ஜே.எம். ஹிட்டிஹாமு - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

முழு அளவில், நெற் செய்கையில் ஒரு சிறந்த செயற்றிறனை நாடு சாதித்தது. ஆனால், வருடாந்த செய்கையின் விஸ்தீரணம் வீழ்ச்சியடைகின்ற ஈர வலயத்தில் சூழ்நிலை அப்படியல்ல. அவ் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக கொள்கை விதந்துரைப்புகளை வழங்கும் நோக்கத்துடன் கடந்த வருடங்களின் போது இலங்கையின் ஈர வலயத்தில் நெற் காணியின் செய்கை பண்ணப்பட்ட பகுதியின் வீழ்ச்சிக்கான காரணங்களைப் பரிசீலிப்பது மீது ஆய்வின் பிரதான கவனம் செலுத்தப்பட்டது. தற்காலிகமாக செய்கை பண்ணப்படாத அல்லது கைவிடப்பட்ட நெற்காணிகளின் உரிமையாளர்களான கமக்காரர்களின் கேள்விக்கொத்து அளவீடு மீது ஆய்வு அடிப்படையைக் கொண்டிருந்தது.

**குறிப்பான நோக்கங்கள்**

i. காலப்போக்கில் ஈர வலயத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற் காணியின் விஸ்தீரணத்தில் மாற்றத்தை மதிப்பிடுதல்.

ii. ஈர வலயத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்காணிகளின் விஸ்தீரணத்தில் வீழ்ச்சிக்கு பங்களிக்கின்ற காரணங்களை அடையாளங் காணுதல்.

iii. கைவிடப்பட்ட நெற் காணியின் பயனுறுதிவாய்ந்த உபயோகத்தை ஊக்குவிக்கும் பொருத்தமான கொள்கை நடவடிக்கைகளை முன்மொழிதல்

**முடிவுகள்**

i. ஈர வலயத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்காணிப் பகுதி 1995க்கும், 2007க்கும் இடையில் 31.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. ஈர வலயத்தில் நெற்காணியின் விஸ்தீரணத்தில் வீழ்ச்சியானது இரு வகைகளைக் கொண்டதாகும். அவை: நெற் காணிகளைக் கைவிடுதல் மற்றும் தற்காலிகமாக அவற்றை நிறுத்திவைத்தல். காலத்திற்குக் காலம் இச் சம்பவங்களின் கீழ் விஸ்தீரணம் மாறுபாடடைந்துள்ளது. 1998இல், 12,074 ஹெக். கொண்ட விஸ்தீரணம் கைவிடப்பட்ட அதேவேளை 2008இல் 37,128 ஹெக். கொண்ட விஸ்தீரணம் கைவிடப்பட்டுள்ளது.

ii. சில கருப்பொருள்களின் கீழ் வகுதிப்படுத்தப்படக்கூடியவாறு, நெற் காணிகளில் குறைப்பான காரணங்கள் வருமாறு: (1) நீர் தொடர்பான பிரச்சனைகள் (2) காலநிலை தொடர்பான மட்டுப்படுத்தல்கள் (3) உயர் உற்பத்திச் செலவினம் மற்றும் குறைந்த இலாபம் (4) கமக்காரரினால் நெற்காணிகளின் செய்கையின் கட்டுப்பாட்டின் இழப்பு (5) நெற் காணிகளுக்கும், வேறு காரணங்களுக்கும் அடைதல் மேலான கட்டுப்பாட்டின் இழப்பு.

iii. அளவீட்டிலிருந்து கண்கூடானதாக, தனித்ததொரு காரணத்திற்கு சாட்டப்படக்கூடிய இலகுவான நிகழ்வாக நெற்காணியின் குறைப்பு விளங்கவில்லை. இது பல் எண்ணிக்கையிலான காரணங்களின் விளைவாகும். எழுபத்திரண்டு சதவீதக் கமக்காரர்களின் பிரகாரம், மேலே சொல்லப்பட்ட நான்குக்கு மேற்பட்ட காரணங்களின் நிமித்தம் செய்கை பண்ணப்படாத காணிகளை அவர்கள் கொண்டுள்ளார்கள்.

iv. தெரிவுசெய்யப்பட்ட மாதிரிக் கமக்காரர்களில் 73 சதவீதத்தினரால் குறிப்பிடப்பட்டவாறு, நீர் தொடர்பான பிரச்சனைகளே பெருமளவு நிலவுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட மொத்தமான மாதிரிக் கமக்காரர்களில், நீரின்மையானது கமக்காரர்களில் 67 சதவீதத்தைப் பாதித்துள்ளதாகவும், வடிகாலமைப்புப் பிரச்சனைகள் 57 சதவீதத்தைப் பாதித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

v. வரட்சிகள், நிலச்சரிவுகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் வண்டல்படிவு போன்ற காலநிலை தொடர்பான பிரச்சனைகளாகத் தோன்றுகின்ற இரண்டாவது பிரசித்தமான பிரச்சனை அளவீட்டுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாதிரி கமக்காரர்களில் 68 சதவீதத்தினரால் குறிப்பிடப்பட்டவாறு தமது நீர் களஞ்சியப்படுத்தல் ஆற்றலளவுகளைக் குறைக்கின்றது. உற்பத்தியின் உயர்வான ஆகுசெலவு செய்கை பண்ணப்பட்ட நெற்காணிகளின் குறைப்புக்கான இன்னொரு காரணியாகும். அயல்புற வயல்கள் செய்கை பண்ணப்படாததன் காரணமாக 'யாய'வில் தமது சொந்த வயல்களைச் செய்கை பண்ணுவதில் கஷ்டங்களை ஐம்பத்திமூன்று சதவீதத்தைக் கொண்ட கமக்காரர்கள் அனுபவித்துள்ளனர். 29 சதவீதத்தைக் கொண்ட கமக்காரர்களின் நெற்காணிகளுக்கான அடைதலைத் தடுத்துள்ளது. நெற்காணிகளின் செய்கையை தடுத்த ஏனைய காரணிகள் மத்தியில் விலங்குகளின் காரணமாக பயிர் இழப்புக்கள், எலிக் காய்ச்சலுக்கு பாதிக்கப்படுவோமோ என்ற அச்சம், சாதகமற்ற மண் குணவியல்புகள், சரீரஉழைப்பினதும், விதை நெல்லினதும் பற்றாக்குறை, சட்டபூர்வ காணி உரித்துரிமைப் பிரச்சனைகள் மற்றும் காணி உரிமையாளரின் தொழில் ஆகியன விளங்குகின்றன.

vi. நெற்காணிகளின் விஸ்தீரணத்தின் குறைப்பும், இதற்காக மேற்படி காணிகளின் பிரயோகத்தன்மையின் மட்டமும் இடஞ்சார்ந்தரீதியில் வேறுபடுகின்றன. ஈர வலயத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்காணிப் பகுதியின் விஸ்தீரணத்தை அதிகரிப்பதற்கு வகுத்தமைக்கப்படுவதற்கும், கிட்டிய நுண்ணாய்வின் கீழ் அமுலாக்கத்தை வைத்திருப்பதற்கும் அமைவிடம் குறிப்பான மூலோபாயங்களை வேண்டுகின்றது.

**விதந்துரைப்புகள்**

i. பின்வருமாறு ஆய்வு விதந்துரைக்கின்றது: 'யாயா' மட்டத்தில் தொழிற்பாட்டிலான பிரச்சனைகளைப் பகுப்பாய்வதற்கும், ஒவ்வொரு கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர் (ARPA) பிரிவுக்கு அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு அதிகாரங்களை ஒதுக்குதல்; பிரதேச உத்தியோகத்தர்களினதும், கமத்தொழில் போதனாசிரியரினதும் அவசியமான வழிகாட்டலுடனும், அறிவுறுத்தல்களுடனும் மேற்படி நடைமுறையில் ARPAஇன் தீவிரமான சம்பந்தத்தை மேம்படுத்துதல்.

ii. மேற்படி திட்டமிடல் நடைமுறையில் சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொரு பங்காளரின் நேரடித் திணைக்களங்களினால் உரிய நிதிசார் மற்றும் வேறு ஆதரவுகளை வழங்குதல் அத்துடன் நேரடித் திணைக்களத்தினால் கிட்டிய மேற்பார்வையினதும், கண்காணித்தலினதும் கீழ் அபிவிருத்தித் திட்டங்களின் அமுலாக்கல்.

iii. பெருமளவு ஈர வலய மாவட்டங்களில் பாரியதொரு மட்டுப்படுத்தல்களாக நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு கால்வாய்கள் தொடர்பான பிரச்சனைகள் கண்டறியப்படுவதனால், வடிகாலமைப்பு, கால்வாய் முகாமைத்துவத்திற்கு நிறுவனரீதியிலான ஒழுங்குகள் மீதான விசேட நோக்குடன் சிறிய நீர்ப்பாசன கால்வாய் வலைப்பின்னலைப் பராமரிப்பதற்கு போதியளவு நிதியங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என விதந்துரைக்கப்படுகின்றது.

## 3. இலங்கையில் கமத்தொழில் மற்றும் கமநல உருமாற்றம்

**ஆராய்ச்சிக் குழாம்:** கலாநிதி தனவர்தன கமகே - இணைப்பாளர்
செல்வி எம்.கே.நதீகா தமயந்தி - இணை ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

**நோக்கங்கள்**

பின்வருமாறு மூன்று பாரிய நோக்கங்களை ஆய்வு கொண்டுள்ளது:

i. இலங்கையில் சிறு உடமையாளர் பண்ணைத் துறையில் தோன்றும் நிலைமைகளினதும், அவற்றுடன் இணைந்துள்ள காரணிகளினதும் பாரிய சமூக மற்றும் பொருளாதாரப் பரிமாணங்களைப் புறவரை செய்தல்.
   அ) துறையில் சமூக நிலைமைகள்
   ஆ) காணி ஆட்சிச் சூழ்நிலை
   இ) நெல் தொடர்பில் தொழில் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட நெல்-சாராத பயிர்களின் இலாபத்தன்மை
   ஈ) பயிர் உற்பத்தித்திறனிலும், பண்ணைக் குடித்தன வருமானத்திலும் பாசன நீர் போன்ற பௌதீக உட்கட்டமைப்பின் செல்வாக்கு.
   உ) பலதரப்பட்ட கைமாற்றங்களின் அமைப்பின் மீது தீவிரமான பண்ணைக் குடித்தனங்கள் தங்கியுள்ள விஸ்தீரணத்தின் மதிப்பீடு
   ஊ) பண்ணை மக்கள் மூப்படைதல் போன்ற துறையில் தோன்றுகின்ற பிரச்சனைகள்

ii. சிறு பண்ணைத் துறையின் முன்னேற்றத்திற்கு தோன்றுகின்ற சூழ்நிலையின் தாக்கத்தைப் பகுப்பாய்தல்

iii. சிறு உடமையாளர் பண்ணைத் துறையின் முன்னேற்றத்திற்கு எதிர்காலத்தில் கவனத்திற்கெடுக்கப்படுவதற்காக பிரச்சனைகளின் முன்னுரிமையைப் புதுப்பித்தல்.

**முடிவுகள்**

i. கமநல மக்கள் மத்தியில் படிப்பறிவு வீதமானது, பால்நிலை, அமைவிடம், நீர்ப்பாசனத்திற்கான அடைதல் ஆகியவற்றைப் பொறுத்தளவில் கல்வியின் மட்டத்தில் சில வேறுபாடுகள் காணப்பட முடியும் என்ற போதிலும், பண்ணைக் குடித்தனத்தினால் பாடசாலை செல்லும் ஆண்டுகளின் எண்ணிக்கை காலப்போக்கில் அதிகரித்துள்ளது.

ii. பயிர் உற்பத்தி முறைமையில், இயந்திரவாக்கம், பயிர் பன்னிலையாக்கம் (நெல்லிலிருந்து நெல் சாராத பணப் பயிர்கள் வரை) மற்றும் புதிய உற்பத்தி தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியனவற்றை நோக்கி குறிப்பிட்ட போக்கொன்றை ஆய்வு வெளிப்படுத்தியது.

iii. நீர்ப்பாசன ஆட்சியினால் நெல் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட சரீரத்தொழில் வித்தியாசமாக விளங்கியது. மானாவாரிப் பகுதிகளில் நெற்செய்கைக்கு ஆகக்கூடுதலான சரீரத்தொழில் தேவை (42 ஆள் நாட்கள்) அறிக்கையிடப்பட்டதுடன், பாரிய நீர்ப்பாசனப் பகுதிகளில் ஆகக்குறைந்தது (22 ஆள் நாட்கள்) அறிக்கையிடப்பட்டது.

iv. மாவட்டம், நீர்ப்பாசனத்தின் வகை மற்றும் ஓரளவுக்கு பருவம் ஆகியவற்றினால் நெல்லின் சராசரி விளைச்சல் வித்தியாசமடைந்தது. சராசரி விளைச்சலின் வித்தியாசம் பாரிய மற்றும் மானாவாரிப் பகுதிகளுக்கு இடையில் ஏக்கருக்கு 600 கிலோ கிராமுக்கு மேற்பட்டதாகும்.

v. உற்பத்தியின் ஆகுசெலவின் பங்கானது சரீரத்தொழிலினாலும், இயந்திரங்களினாலும் முறையே 53.2 சதவீதம் மற்றும் 19.3 சதவீதம் ஆகும்.

vi. முழு அளவில், மொத்த மாதிரிக் குடித்தன வருமானத்தின் 81 சதவீதம் கமத்தொழிலில் இருந்து வந்த அதே நேரம், மீதியானது பண்ணை சாரா தொழிலில் இருந்தே வந்தது.

**விதந்துரைப்புகள்**

i. பண்ணைக் குடும்பங்களின் வருமானங்களை அதிகரிப்பதற்கு அவசியப்பட்ட செயற்பாடொன்றே பயிர் பன்னிலையாக்கமாகும். விசேடமாக கமக்கிணறுகள், நீர்ப்பாசனப் பம்பிகள் மற்றும் விஸ்தரிப்பு போன்ற சில வசதிகளை வழங்குவதன் மூலம் வேறு உணவுப் பயிர்களுடன் பன்னிலையாக்குவதற்காக மானாவாரி நெற் கமக்காரர்கள் மேம்படுத்தப்பட வேண்டும்.

ii. மானாவாரி நிலைமையின் கீழ் வேறு உணவுப் பயிர்களைச் செய்கை பண்ணும் மேட்டு நிலக் கமக்காரர்கள் இதே வழியில் உதவப்பட முடியும்.

iii. பெருமளவு வயதான மக்களை இலங்கையின் மக்கள் கொண்டிருப்பதால், வயதானவர்களைக் கவனத்திற்கெடுப்பதற்காக திட்டமிடப்பட்ட திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அவசியமான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

## 4. புல் எலியவின் மீள்-ஆய்வு

| | | |
|---|---|---|
| **ஆராய்ச்சி குழாம்:** | பேராசிரியர் எ.ஜே.வீரமுந்த | - ஆலோசகர் |
| | செல்வி எம்.கே.நதீகா தமயந்தி | - இணை-ஆராய்ச்சியாளர் |
| | செல்வி இந்திக பத்திரண | - இணைப்பாளர் |

மான்ய முறையொன்றிலிருந்து வர்த்தகமயப்படுத்தலின் சில மாவட்டத்தினால் சித்தரிக்கப்பட்ட ஒன்றினால் கமத்தொழிலின் மாறும் முறையை அல்லது வேறு விதமாகச் சொல்வதென்றால், சிறு குடியானவனிலிருந்து கமக்காரர் என கிராமவாசியின் நிலையில் மாற்றமொன்றைச் சம்பந்தப்படுத்தும் நடைமுறையின் சோதனையொன்றே ஆய்வாகும். பொருளாதாரம் அல்லது தொழில்நுட்பம் மீது

மட்டுமன்றி, ஆனால் மாற்ற நடைமுறையின் சமூக மற்றும் கலாசாரப் பரிமாணங்களின் மீது நோக்கினைக் கொண்டிருப்பதன் மூலம் கமநல மாற்றத்தைச் சோதிப்பதற்காக இது முற்றுமுழுதான விடய ஆய்வொன்றை ஏற்றுக்கொண்டது. இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள உலர் வலய, குள-அடிப்படையிலான கமத்தொழில் சனசமூகமொன்றான புல் எலியவில் ஆய்வு நடத்தப்பட்டது. இரு காரணங்களுக்காக கிராமம் தெரிவுசெய்யப்பட்டது. முதலாவதாக, குறிப்பாக கடந்த தசாப்தத்தின் போது வர்த்தக மேட்டுநிலக் கமத்தொழிலின் பாரிய அளவிலான ஏற்றுக்கொள்ளலிலிருந்து விளைகின்ற விஸ்தாரமான சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கு அது உடன்பட்டுள்ளது. இரண்டாவதாக, அரை நூற்றாண்டுக்கு முன்னர் நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளையிட்டு மனித இயல்வல்லுனர் காலஞ்சென்ற பேராசிரியர் எட்மன்ட் லீச்சினால் எழுதப்பட்ட கிராமத்தின் முன்னைய வரலாறு பூரணமானதும், சிறந்ததுமான வரலாற்றினை வழங்கியதுடன், இவ்வாறாக அது முதல் இடம்பெற்றுள்ள கமநல உருமாற்றத்தை மதிப்பாய்வதற்கான சௌகரியமானதும், நம்பகமானதுமான அடிமட்டமொன்றாக சேவையாற்றியது.

**குறிப்பான நோக்கங்கள்**

i. விசேடமாக சமூக-பொருளாதார ஒழுங்கில் பாரிய-அளவிலான மாற்றத்தினால் தாக்கத்தினைக் கொண்டுள்ள கிராமிய சமூகத்தின் தொடர்பொன்றில் சமூக மாற்றம் இடம்பெறும் வழிகளை அடையாளங் காணுதல்;

ii. உறவை வரையறுப்பதற்கு தரங்களினதும், பெறுமதிகளினதும் அடிப்படை மீள் கட்டமைப்புக்கு கமநல ஒழுங்கில் என்ன அளவுக்கு மாற்றங்கள் இட்டுச்சென்றுள்ளன என்பதை நிர்ணயித்தல் மற்றும் புதிய சமூக ஒழுங்கில் காணி ஆட்சியையும், உறவையும் கிராமிய ஒழுங்கு விதிகளினதும், தரங்களினதும் என புதிய முறைகள் தோன்றியுள்ளன என்பதை எடுத்துக் காட்டுதல்;

iii. வீதிகளைத் திறத்தல், வெகுஜன தொடர்பாடல்களின் அறிமுகம், திருந்திய போக்குவரத்து முறைமைகள் மற்றும் மிகவும் முக்கியமாக சந்தை நிலையங்களை அமைத்தல் போன்ற அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட முன்னேற்றங்கள் ஊடாக தூண்டப்பட்ட சமூக கட்டமைப்புகளில் எவ்வாறு மாற்றங்கள் கிராமவாசிகளின் பொருளாதார மற்றும் சமூகத் தரத்தை மாற்றின என்பதை அடையாளங் காணுதல்; மற்றும்

iv. தள்ளுதல் காரணிகளாக செயற்படுகின்ற சனத்தொகையின் அதிகரிப்பின் ஊடாக குடித்தொகையியல் மாற்றம் போன்ற "உள்ளக" இயக்கிகளின் வகிபங்கினை விபரித்தல்.

**முடிவுகள்**

i. தள்ளுதல் மற்றும் இழுத்தல் காரணிகளை வர்த்தக கமத்தொழிலை ஏற்றுக்கொள்வதற்கான பிரதான ஊக்குவிப்புக்கள் கொண்டுள்ளன. அரிசிக் கமத்தொழிலில் குறைந்த உற்பத்தித்திறனுக்கும், உடமைகளின் துண்டாக்குதலை விளைவித்த அதிகரித்துவரும் சனத்தொகைக்கும் கடந்த இரு தசாப்தங்களின் போது போதியளவு மழைவீழ்ச்சியின்மையின் காரணமாக நீரின் குறைவடையும் விநியோகங்களை முன்னையது உள்ளடக்கியிருந்தது. மேட்டுநிலச் செய்கையினால் குடித்தனங்களுக்கு உயர்வான வருமானங்களையும், நவீன வீடமைப்பு, வசதிகள், மற்றும் குடித்தனச் சொத்துக்கள் ஆகியவற்றினால் பிரதிநிதிப்படுத்தப்பட்ட திருந்திய வாழ்க்கைத் தரத்தையும் இழுவைக் காரணிகள் பிரதிநிதிப்படுத்தின. இவ்வாறாக, புல் எலியவில் கமநல மாற்றத்தின் இயக்கிகள் வேறு கிராமிய சனசமூகங்களில் காணப்பட்டவற்றுக்கு ஒத்தவையாகும்.

ii. அதேவேளை, அபிவிருத்தியின் நேர்மரபுவழிசாராத நடைமுறையொன்றை விட ஒரு விதமான பின்னூட்டல் அல்லது சுற்றொன்று கண்கூடாக விளங்கின. அதாவது வர்த்தக முயற்சிகளில் இருந்து மேலதிகமான பணத்தை மக்கள் ஈட்டினர் என்று மட்டுமின்றி, ஆனால், மாற்ற நடைமுறையை மேலும் துரிதப்படுத்துகின்ற கமக்கிணறுகள், டிரக்டர்கள் மற்றும் நீர் பம்பிகள்

ஆகிய அமைப்பில் புதிய கமத்தொழில் தொழில்நுட்பத்தைக் கொள்வனவு செய்வதற்கு சம்பாத்தியங்களின் சிலவற்றை மீள் முதலீடு செய்தனர். எனினும், குறிப்பாக சனசமூகத்தின் குறைந்த சிறப்புரிமையைக் கொண்ட பகுதியினருக்கு மான்யத்தின் ஒரேயொரு வழிவகையான அரிசிச் செய்கையின் பெறுமதியையும், முக்கியத்துவத்தையும் அற்றுப்போகச் செய்வதில் வர்த்தகமயகப்படுத்தப்பட்ட மேட்டுநிலச் செய்கையை ஏற்றுக்கொள்தல் நிச்சயமாக விளைவிக்கவில்லை.

iii. சந்தேகத்திற்கிடமின்றி, கட்டுப்பாட்டிலான கிராம குடியேற்றத்தின் இன்மையும் மற்றும் ஓரளவு நகரப் பகுதிகளில் காணப்படுகின்றவாறு நாடா வகையிலான வீடமைப்பு முன்னேற்றங்களினால் அதன் பதிலீடு ஆகியன உட்பட பாரம்பரிய சமூக மற்றும் பொருளாதார ஒழுங்கின் ஒருங்கிணைப்பின்மையின் நடைமுறையொன்றுக்கு கமநல மாற்றங்களின் மொத்தம் இட்டுச் சென்றுள்ளது. இதேபோல, முன்னைய காலங்களில் ஒரு தொகையிலான அடையாளம் காணப்பட்ட கிராமியச் சனசமூகங்களுக்கு மட்டுப்பட்டிருந்த 'வாரிசு' என அறியப்பட்ட சமூகத் தாபனத்தின் பாரம்பரிய அலகு சீர்குலைவு அடைந்துள்ளதுடன், நகரப் பகுதிகளையும், வேறு இனத்துவக் குழுக்களின் ஒரு சில மக்களையும் கூட உள்ளடக்குவதற்கான திருமண வலைப்பின்னலின் விஸ்தரிப்புகளினால் பதிலீடு செய்யப்பட்டுள்ளன.

iv. எனினும், உறவினதும், காணி ஆட்சியினதும் சில அம்சங்கள் மாற்றத்திற்கு தாக்குப்பிடித்துள்ளதுடன், இவை கலவைக் குழுக்களாக லீச் குறிப்பிட்டுள்ள வித்தியாசமான வதிவிட குழுக்களின் உறுப்புரிமை மீதான அடிப்படையில் புராண நெல் வயலினதும், உறவு இணைப்புக்களினதும் பௌதீக தளக்கோலத்தை உள்ளடக்குகின்றன. காணி மற்றும் நீர் ஆகியன தொடர்பில் செயலாற்றும் இடம் மீதான ஒழுங்குகள் பற்றி பேசுகின்ற வெறுமனே வழியொன்றாக உறவை அவர் கண்ட அதேவேளை கடைசியிலான உளதாம்தன்மை மட்டுமே சனசமூகத்தின் பௌதீக அடித்தளம் விளங்கியது என்ற நோக்கினை பேராசிரியர் லீச் முன்கூட்டியே கூறியதனால் தத்துவவியல்ரீதியான நோக்குநிலையில் இம் முடிவு முக்கியமானதாகும்.

v. தீவிரமான மாற்றங்கள் ஊடாக விடயதான ஒழுங்கு சென்றுள்ள போதிலும், குறிப்பாக மக்களின் தனித்த சனசமூகமொன்றுக்குச் சொந்தமாகின்ற கருத்துக்களின் ராஜ்யங்களின் இயல்பினை ஒழுங்கிலேயே தொடர்ந்தும் இருந்துள்ளது என்பதையே இந்த ஆய்வு காட்டுகின்றது. சனசமூகத்தைச் சார்ந்திருக்காத மக்களுக்கு எவ்வழியிலும் காணி ஒதுக்கப்படக்கூடாது என்பதையே இந்த ஆய்வு காட்டுகின்றது. சனசமூகத்தைச் சார்ந்திருக்காத மக்களுக்கு எவ்வழியிலும் காணி ஒதுக்கப்படக்கூடாது என்பதையே புல் எலிய மக்கள் பின்பற்ற வேண்டும் என்பதே இத்தகையதொரு வழக்கமாகும். கமநல ஒழுங்கில் மாற்றங்களினால் முக்கியமாக்குகின்ற சமூகப் பிரிவுகள் இருந்த போதிலும் புல் எலிய மக்களை ஒன்றாக இணைப்பதில் பிணைப்பினைக் கொண்டுள்ள அரிசியின் மூலாதாரச் சின்னத்தைச் சுற்றி மையங்கொண்டுள்ள வருடாந்த கொண்டாட்டங்கள் ஊடாக சடங்கிலான ராஜ்யத்தில் இது நகல்படுத்தப்பட்டுள்ளது.

vi. இறுதியாக, அரசாங்கத் தலையீடு அவசியம் எனக் கருதப்படுகின்ற பெருமளவு துறைகளை ஆய்வு அடையாளங்கண்டுள்ளது. மண் வளத்தின் சாத்தியமான இழப்பு, மிதமிஞ்சிய நீர்ப்பாசனத்தின் காரணமாக அதிகரிக்கப்பட்ட உவர் மட்டம், கம இரசாயனங்களின் கட்டுப்படுத்தப்படாத உபயோகத்தின் காரணமாக சுகாதாரத்திற்கும், சூழலுக்கும் அபாயங்கள், மற்றும் நிலத்தடி நீர் வழங்கலின் உத்தேசமான அற்றுப்போதல் போன்ற முக்கியமான கமநல பிரச்சனைகளைக் கவனத்திற்கு எடுப்பதற்கான அவசியம் முனைவுபடுத்தப்பட்டுள்ளது. பிராந்திய மட்டத்தில் மூலோபாயத் திட்டமிடல் நடைமுறையொன்று, சந்தை இடத்தில் தேக்கங்களினதும், கணிசமானளவு குறைந்த விலைகளினதும் பிரச்சனையைத் தவிர்த்துக் கொள்ளுமுகமாக உள்ளூர் சந்தைகளுக்கு கமத்தொழில் உற்பத்தியின் விநியோகத்தை சிறந்த வகையில் கட்டுப்படுத்துமுகமாக பொறுப்பேற்கப்படுவது அவசியமானதாகும். இறுதியாக, சராசரி பயிர்ச்செய்கை குடித்தனத்திற்கு இறுதியான பயன்படுத்தும் நிலையை நெற் செய்கை பிரதிநிதிப்படுத்துவதனால், நீரினதும், அதிகரித்த மண் வளத்தினதும் மீது தங்கியிருத்தலை

குறைக்கின்ற புதிய கமத்தொழில் நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான அவசியம் ஆய்வில் வலியுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**விதந்துரைப்புகள்**

i. மிதமிஞ்சிய நீர்ப்பாசனத்தின் காரணமாக மண் வளத்தின் சாத்தியமான இழப்பு மற்றும் அதிகரித்த உவர் மட்டம், கம இரசாயனங்களின் கட்டுப்படுத்தப்படாத உபயோகத்தின் காரணமாக சுகாதாரத்தினதும், சூழலினதும் அபாயங்கள், மற்றும் நிலத்தடி நீர் வளங்களின் உத்தேசமான அற்றுப்போதல் போன்ற முக்கியமான கமநலப் பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுப்பது அவசியமானதாகும்.

ii. பிராந்திய மட்டத்தில் மூலோபாயத் திட்டமிடல் நடைமுறையொன்று, சந்தை இடத்தில் தேக்கங்களினதும், கணிசமானளவு குறைந்த விலைகளினதும் பிரச்சனையைத் தவிர்த்துக் கொள்ளுமுகமாக உள்ளூர் சந்தைகளுக்கு கமத்தொழில் உற்பத்தியின் விநியோகத்தை சிறந்த வகையில் கட்டுப்படுத்துமுகமாக பொறுப்பேற்கப்படுவது அவசியமானதாகும்.

iii. சராசரி பயிர்ச்செய்கை குடித்தனத்திற்கு இறுதியான பயன்படுத்தும் நிலையை நெல் செய்கை பிரதிநிதிப்படுத்துவதனால், நீரினதும், அதிகரித்த மண் வளத்தினதும் மீது தங்கியிருத்தலை குறைக்கின்ற புதிய கமத்தொழில் நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான அவசியம் ஆய்வில் வலியுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## 5. சேதன உர உபயோகத்தில் பிரச்சனைகள் மற்றும் மட்டுப்படுத்தல்கள்

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி எச்.எம்.எஸ்.ஜே.ஹிட்டிஹாமு - இணைப்பாளர்
திரு.எஸ்.அபாசிங்க - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

*அபி வவமு - ரட்ட நகமு* உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் சேதன உரத்தின் உபயோகத்தை மேம்படுத்துவதற்காக கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு முயற்சித்துள்ளது. அவற்றின் உபயோகத்ததில் உள்ள பிரச்சனைகளையும், மட்டுப்படுத்தல்களையும் பரீட்சிப்பதற்கான விசேட வலியுறுத்தலுடன் இந்த சேதன உர மேம்படுத்தல் திட்டத்தின் செயற்றிறனை பரீட்சிப்பதற்காக இவ்வாய்வு நடத்தப்பட்டது.

**திட்டமான நோக்கங்கள்**

i. சேதன உரத்தின் பயிற்சித் திட்டங்கள் ஊடாக ஈட்டப்பட்ட கமக்காரர்களின் அறிவையும், சேதன உரத்தின் உபயோகத்தை நோக்கி தமது மனப்பாங்கினையும் கண்டறிதல்.

ii. சேதன உரத்தின் உபயோகத்தின் மட்டத்தை ஆய்தல்.

iii. சேதன உரத்தைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட முறைகளை அடையாளங்காணுதல்.

iv. சேதன உரத்தின் உபயோகத்தில் பிரச்சனைகளையும், மட்டுப்படுத்தல்களையும் அடையாளங்காணுதல் அத்துடன் சேதன உரத்தின் உபயோகத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான சிபார்சுகளை வழங்குதல்.

**முடிவுகள்**

i. பயிற்றுவிக்கப்பட்ட கமக்காரர்களின் 94.2 சதவீதத்தினர் சேதன உரத்தைப் பயன்படுத்துகின்றனர் என்பதை ஆய்வின் முடிவு காட்டுகின்றது. ‘வல’, ‘கொட’, உயிர் வேலி, புழு கலவைப்

பசளை மற்றும் புழு கழுவுதல் போன்ற கலவைப் பசளையை உற்பத்தி செய்வதற்கு வேறுபட்ட முறைகளைப் பயன்படுத்துகின்றனர். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'கொட' முறையே கலவைப் பசளை உரத்தைப் பயன்படுத்துவதற்கான மிகவும் பிரசித்தமான முறையாகும்.

ii. தமது பயிர்ச்செய்கைகளுக்கு மட்டும் மாதிரிக் கமக்காரர்களின் 3 சதவீதத்தினர் மட்டுமே சேதன உரத்தைப் பயன்படுத்தினர் என ஆய்வு காட்டுகின்றது. மீதியான 97 சதவீதத்தைக் கொண்ட கமக்காரர்கள் சேதன மற்றும் அசேதன உரங்களை பயன்படுத்தினார்கள்.

iii. கமநல சேவை நிலையங்களிலிருந்து பயிற்சியைப் பெற்ற கமக்காரர்கள் அவை தமக்கு மிகவும் பயனுள்ளவையாக உணர்ந்தனர். ஆனால், தமது அயல்புறங்களிலிருந்து விலங்கு பசளையைக் கண்டறிவதில் உள்ள கஷ்டங்களின் காரணமாக கலவைப் பசளையின் தயாரிப்பு ஓரளவுக்கு கஷ்டமானது எனவும் உணர்ந்தார்கள்.

iv. மேலும் வேறுபட்ட பயிர்களுக்கு விதந்துரைக்கப்பட்ட சேதன உரத்தின் தோதான தொகை பற்றி பெருமளவு கமக்காரர்கள் அறிந்துவைத்திருக்கவில்லை.

v. உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் மீதே சேதன உரத்தின் தரம் தங்கியுள்ளது. எனவே, சரியான தொகையிலான பாவனை ஒரு பிரச்சனைக்குரியதாகும்.

vi. உள்ளூர் மட்டத்தில் கிட்டுகின்ற செய்துகாட்டல் காட்டிகளின் எண்ணிக்கை சேதன உரத்தை மேம்படுத்துவதற்கு போதுமானதல்ல என ஆய்வு கண்டறிந்தது.

**விதந்துரைப்புகள்**

i. வேறுபட்ட பயிர்களுக்கு சேதன உரத்தின் சரியான அளவுகளைப் பயன்படுத்துவது மீது கமக்காரர்கள் வழிகாட்டப்பட வேண்டுமென ஆய்வு விதந்துரைக்கின்றது.

ii. சேதன உரத்தின் முன்கூட்டிய உபயோகத்தில் கமக்காரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு கமநல அபிவிருத்தி நிலையங்களில் கிட்டுகின்ற செய்துகாட்டல் பாத்திகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

iii. அரசாங்கத்தின் அசேதன உர மான்யம் வழங்கப்படும் போது சேதன உரத்தை தயாரிக்கும் கமக்காரர்களுக்கு விருப்புரிமையை வழங்குதல்

iv. அசேதன உரத்தின் பயன்பாட்டினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

v. ஊடகங்கள் ஊடாக விழிப்பியல் திட்டங்களை நடத்துவதுடன், வெற்றிகரமான சேதன உர கமக்காரர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

## 6. கமத்தொழிலில் பெண்களின் இடஞ்சார்ந்த மற்றும் லௌகீக மாறல்

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி ஷாமினி கே.குமார - இணைப்பாளர்
திருமதி பி.ரேணுகா வீரக்கொடி - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

கடந்த சில தசாப்தங்களாக கட்டமைப்புரீதியில் பொருளாதாரம் மாறுநிலையிலுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியை நோக்கி கமத்தொழில் துறையில் இது தெளிவான கண்கூடானதாகும். இந்த மாறுநிலையின் முக்கிய ஊறுபடத்தக்க குழுக்களில் ஒன்றாக ஆசிய சமூகங்களில் உள்ள பெண்கள் விளங்குகின்றார்கள் என கண்டறியப்பட்டுள்ளது (FAO, 1988). பாரம்பரியரீதியாக

பெண்களின் வாழ்க்கை முறை, உற்பத்தித்திறன் மற்றும் இனப்பெருக்கத் துறைகள் அத்துடன் கிராமிய சமூகங்களினுள் சனசமூகத் துறைகள் ஆகியவற்றில் உள்ள முத்தரப்பு வகிபங்குகள் மீதான அடிப்படையில் மாற்றமடைந்துள்ளது. பெண்கள் மீது இந்த மாறுநிலை என்ன ஆதிக்கத்தை செலுத்தியுள்ளது என்பதையும் இலங்கையின் சனத்தொகையில் 40.5 சதவீதத்தை கொண்டுள்ள கிராமிய துறையில் அவர்களது முத்தரப்பு வகிபங்கினையும் இட்டு இக் கேள்வி எழுப்பப்படுகின்றது (இலங்கை மத்திய வங்கி, 2008). பெண்களின், விசேடமாக கமநல சனசமூகங்களில் உள்ள பெண்களின் வாழ்க்கை மீது சொல்லப்பட்ட மாறுநிலையின் தாக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு ஆழமான ஆய்வுகள் இன்மையின் காரணமாக தகவல் இடைவெளியொன்று நிலவுகின்றது. இந்த தகவலுடனேயே கிராமியத் துறையில் உள்ள பெண்களுக்கான நியாயமான அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கையையும், திட்டத்தையும் வகுத்தமைப்பதன் மூலமே இது உருவாக்கப்பட முடியும். எனவே, கமநல சனசமூகங்களில் உள்ள பெண்களின் வாழ்க்கை முறைகள் மீது சொல்லப்பட்ட மாறுநிலையின் தாக்கம் மீது விரிவான தகவலைத் தோற்றுவிப்பதற்கு இந்த ஆய்வு முயல்கின்றது.

**நோக்கங்கள்**

அவர்களது முத்தரப்பு வகிபங்கில் உள்ள மாற்றங்களை வேறுபடுத்துவதன் மூலமும், அவர்கள் முகங்கொடுக்கும் சவால்களையும், வாய்ப்புக்களையும் அடையாளம் காண்பதன் மூலமும் இறுதியாக கிராமிய அபிவிருத்தியினுள் மேலும் பெண்களை பிரதான நீரோட்டப்படுத்துவதற்கான பொருத்தமான விதந்துரைப்புகளைச் செய்வதன் மூலமும், உலர் வலயத்திலுள்ள கமநல சமூகங்களில் பெண்களின் வகிபங்கின் லௌகீக மாறல்களை இந்த ஆய்வு ஆராய்ந்தது.

**முடிவுகள்**

i. பன்னிலையிலான கமநல சனசமூகங்களில் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மாறல்கள் உள்ளன. இது சனசமூகங்களில் இடம்பெற்றுள்ள உருமாற்றத்தின் முன்னேற்ற வேகம் சாட்டப்படுகின்றது.

ii. சுதந்திரத்தின் பின்னர் ஆரம்பச் சந்ததிகளின் போது உற்பத்தித்திறனிலான வகிபங்கொன்றிலிருந்து தற்போதைய நாளிலுள்ள சனசமூக வகிபங்கினை நோக்கி நகர்வதில் பெண்களின் முத்தரப்பு வகிபங்கில் மாற்றங்கள் பெருமளவு காரணிகளுக்கு சாட்டப்பட முடியும் என்பதுடன், கமத்தொழிலுக்கான சரீரத்தொழிலின் பங்களிப்பு நிறைவேற்றப்பட்ட பணிகள், உள்ளூர் வேலைக்காக அதிகளவு நேரம், தீர்மானமெடுத்தலினதும், முகாமைத்துவத்தினதும் நடைமுறையில் சிறந்த பேரம் பேசுதல் சக்தி, தகவல் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு வெளிப்படுத்தல், மற்றும் சனசமூகப் பணியில் அதிகரித்த பங்கெடுப்பு ஆகிய ஒரு தொகையிலான துறைகளில் இது அவதானிக்கத்தக்கதாகும்.

iii. பெண்கள் மீதான அபிவிருத்தி தலையீடுகளின் தாக்கங்கள் முற்றுமுழுதாக குறிப்பிடத்தக்கதல்ல. ஆனால், தமது சனசமூகங்களில் இன்றைய பெண்களினால் ஆற்றப்படும் முத்தரப்பு வகிபங்குகளை கணக்குக்கு எடுக்கையில் அபிவிருத்தி நடைமுறைகளை மீள் கட்டமைப்பது அவசியமானதொன்றாகும்.

iv. அபிவிருத்தியில் பங்காளர்களாக அவர்களின் அதிகரித்த ஒருங்கிணைப்பினதும், அங்கீகாரத்தினதும் ஊடாக பலப்படுத்தப்படக்கூடியதாக சமூகங்களில் பெண்களின் இடம் விளங்கும் வகையில் ஆண்களினதும், பெண்களினதும் சமத்துவத்தையும், அதிகாரமளிப்பினையும் மாற்ற அணுகுமுறைகள் நாடுவது அவசியமானதாகும்.

**விதந்துரைப்புகள்**

பின்வருவன ஊடாக பெண்களின் பன்னிலையான பகுதிகளுக்கு வாழ்வாதார வாய்ப்புக்களை மேம்படுத்துவது அவசியமானதாகும்.

i. அவசியமானவிடத்தும், சாத்தியமானவிடத்தும் கமத்தொழில் நடவடிக்கைகளுக்கு உள்ளீடுகளுக்கான அடைதலை அதிகரித்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், அவசியங்களைக் கவனத்திற்கெடுத்தல் மற்றும் பண்ணைக்குப் புறம்பான வருமானம் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளின் இடைவெளிகளை நிரப்புதல், பால்நிலை உறவுகளுடன் இணங்குகின்ற குடிசைக் கைத்தொழில்களை மேம்படுத்துதல் அத்துடன் நிலைத்திருத்தல் கிராமிய அபிவிருத்தியின் வழிவகைகளாக அவற்றைப் பாதுகாத்தல்.

ii. குடித்தன மட்டத்தில் வாழ்வாதாரம் சார்ந்த அபிவிருத்தி அணுகுமுறைகள் மீது அதிகளவு வலியுறுத்தலை முன்வைத்தல்.

iii. பொருளாதார அதிகாரமளிப்பு கருத்திட்டங்களுக்கு உரிய ஒருங்கிணைப்பையும், ஆதரவையும் நீடித்தல்.

iv. சனசமூக அடிப்படையிலான தாபனங்கள் ஊடாக வறிய பெண்களுக்கான செயல்திட்டங்கள்.

## 7. இலங்கையில் SRI பயிர்ச்செய்கையின் தற்போதைய நிலை

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி எச்.எம்.எஸ்.ஜே.ஹிட்டிஹாமு - இணைப்பாளர்
திருமதி எம்.டி.சுசீலா லூர்து - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

**நோக்கம்**

இலங்கையில் SRI பயிர்ச்செய்கையின் தற்போதைய நிலைமையை ஆய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

**குறிப்பான நோக்கங்கள்**

i. இலங்கையில் SRI கமக்காரர்களின் சமூக-பொருளாதார நிலைமையை ஆய்தல்.

ii. SRI கமக்காரர்களினால் அனுசரிக்கப்படும் பயிர்ச் செய்கை நடைமுறைகளை ஆய்வு செய்தல்.

iii. SRI பயிர்ச்செய்கையின் உற்பத்தியின் ஆகுசெலவைக் கணக்கிடுதல்.

iv. நாட்டில் SRI முறையின் விஸ்தரிப்பில் உள்ள பிரச்சனைகளையும், மட்டுப்படுத்தல்களையும் ஆய்வு செய்தல்.

v. இலங்கையில் SRI பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதை நோக்கி அவசியமான கொள்கை வழிகாட்டல்களை வழங்குதல்.

SRI முறையிலான பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் முக்கியமாக உள்ள மூன்று மாவட்டங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட மாவட்டங்களிலுள்ள நான்கு கமநல சேவை நிலையப் பகுதிகளிலிருந்து 90 SRI கமக்காரர்களும், 60 SRI சாராத கமக்காரர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

**முடிவுகள்**

i. SRI பயிர்ச்செய்கையில் தமது சம்பந்தத்திற்கு மேலதிகமாக, தமது வருமானம் ஈட்டுதலுக்காக வேறு நடவடிக்கைகளில் (பண்ணை சாராத 71 சதவீதம் மற்றும் பண்ணைக்குப் புறம்பான 26 சதவீதம்) பெரும்பாலான SRI கமக்காரர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. இந்த பயிர்ச்செய்கை முறை அதிகளவு நேரத்தை எடுப்பதாக SRI கமக்காரர்கள்

தெரிவித்தார்கள். இது தமது வேறு பொருளாதார நடவடிக்கைகளின் நேர தேவைகள் மீது அதிகளவு தலையிடுகின்றது எனவும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ii. அளவீட்டுத் தரவுகளில் வெளிப்படுத்தப்பட்டவாறு பெருமளவு SRI கமக்காரர்கள் அ.சா.தாபனங்களினால் வழங்கப்படும் உள்ளீடுகள் மீது தங்கியுள்ளனர். தமது நடவடிக்கைகளை அ.சா.தாபனங்கள் இடைநிறுத்திய போது சில புதுமாற்றத்திலான கமக்காரர்கள் (13 சதவீதம்) புறநீங்கலாக, SRI பயிர்ச்செய்கை முறையின் வழக்கத்தை ஏனையோர் கைவிட்டார்கள். உதாரணமொன்றாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள படகிரியவில் உள்ள மேர்ஸிகோ என அழைக்கப்பட்ட அ.சா.தாபனமொன்று SRI பயிர்ச்செய்கை வழக்கத்திற்காக உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் 150 கமக்காரர்களுக்கு உதவியளித்தது. அ.சா.தாபனத்தின் உள்ளீடுகளின் ஆதரவின் மீளப்பெறுதல்களின் பின்னர், இந்தப் பயிர்ச் செய்கை முறைக்கு 50 கீழ்ப்படியாத கமக்காரர்கள் தொடர்ந்தார்கள்.

iii. SRI முறையை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தலையீடு குறைந்தபட்சமானதாகும். எனவே, இந்த முறையை நோக்கிய கமக்காரர்களின் மனப்பாங்கு மறுதலையானதாகும். அரசாங்க உத்தியோகத்தர்களுடன் ஒன்றாக அ.சா.தாபன உத்தியோகத்தர்கள் பணியாற்றிய பகுதிகளில் ஏனைய பகுதிகளை விட சிறந்த பதிலிறுப்புக்கள் இருந்தன.

**விதந்துரைப்புகள்**

சூழல் நிலைத்திருக்கும் தன்மையின் கருத்து நோக்கிலிருந்து SRI முறையிலான பயிர்ச் செய்கை முக்கியமானது என்பதனால் இம் முறையானது விதை நெல்லின் உற்பத்தியை அதிகரித்தல் போன்ற சாத்தியமான வழிகள் ஊடாக ஊக்கமளிக்கப்பட வேண்டும். இது சிறந்த விதைகளை தயாரிப்பதற்கான வாய்ப்பினை வழங்குதல் அத்துடன் பண்ணை உற்பத்திக்கு உறுதிப்படுத்தப்பட்ட சிறந்த சந்தைகளை வழங்குதல் ஆகிய இரு நன்மைகளை ஈட்டும்.

களைபிடுங்குதலுக்கும், நாற்று நடுதலுக்கும் சரீரத்தொழில் மீதப்படுத்தல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி பிரசித்தப்படுத்துவதன் மூலம் சரீரத்தொழிலின் அதிக தேவைப்பாட்டைக் குறைப்பதற்கான தீர்வொன்றாக விளங்கும்.

## 8. குறைந்த வருமான குடும்பங்களில் 24 மாதங்களுக்கு மேற்பட்டதும் 60 மாதங்களுக்கு குறைந்ததுமான வயது வகுதியிலுள்ள போஷாக்கற்ற சிறுவர்களுக்கு ஒரு கோப்பை பாலை வழங்குவதற்கான திட்டத்தை மதிப்பிடுதல்

**ஆராய்ச்சிக் குழாம்:** பேராசிரியர் ரஞ்சித் பிரேமலால் டீ சில்வா - இணைப்பாளர்
திருமதி பி.ஆர்.வீரக்கொடி - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் அதிகாரமளிப்பு அமைச்சு

**நோக்கங்கள்**

பால் கோப்பைத் திட்டத்தின் துரித மதிப்பீடொன்றை மேற்கொள்வதுடன், எதிர்கால அமுலாக்கல் நடைமுறையை வெற்றிகரமாக்குவதற்கு உதவுகின்ற பொருத்தமான விதந்துரைப்புகளைச் செய்தல்.

**முடிவுகள்**

i. ஆய்வு அமைவிடங்களில் உள்ள 48 சதவீதத்தைக் கொண்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதில் ஆய்வு அமைவிடங்களில் உள்ள மொத்த எண்ணிக்கையிலான போஷாக்கற்ற சிறுவர்களின் 45 சதவீதத்தினர் நன்மைகளைப் பெறுகின்றனர்.

ii. 24 முதல் 60 மாதங்கள் வரையிலான வயது மூலப்பிரமாணத்தைப் பொறுத்தளவில் 92 சதவீதத்திலான எண்ணிக்கையைக் கொண்ட பயனாளிகள் தகுதியைக் கொண்டுள்ளதுடன், மீதி 8 சதவீதம் தகுதியைக் கொண்டிருக்கவில்லை.

iii. பயனாளிகளுக்கான பாலின் பங்கீடு பின்வருமாறு பெருமளவு அமைப்புக்களை எடுக்கின்றது: பங்கீட்டு நிலையத்திலிருந்து உடன் அல்லது கொதிக்க வைக்கப்பட்ட பாலைச் சேகரித்தல். பயனாளிகளின் வதிவிடத்திற்கு அல்லது அருகிலுள்ள இடமொன்றுக்கு உடன் அல்லது கொதிக்க வைக்கப்பட்ட பாலை விநியோகித்தல். பங்கீட்டு நிலையத்தில் பயனாளிகளினால் கொதிக்க வைக்கப்பட்ட பாலைக் குடித்தல், மற்றும் பாச்சர் செய்யப்பட்ட பாலின் ஏற்பாடு. பயனாளிகளின் வதிவிடத்திற்கு அல்லது அவர்களுக்கு சௌகரியமான அருகிலுள்ள இடத்திற்கு பால் விநியோகிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், இந் நன்மையை பயனாளிகளின் 20 சதவீதத்தினர் மட்டுமே அனுபவிக்கின்றார்கள்.

iv. மாதிரியில் பயனாளிகளில் 57 சதவீதத்தினர் காலை பத்து மணிக்கு முன்னரேயே பாலைக் குடிக்கின்றார்கள். ஆனால், பயனாளிகளில் 81 சதவீதத்தினர் காலை பத்து மணிக்கு முன்னர் பாலைப் பெறுகின்றார்கள். மாதமொன்றுக்கு ஆகக்குறைந்தது 25 நாட்களுக்கு நாளொன்றுக்கு 200 மில்லி லீற்றர் கொண்ட பால் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், இந்த நன்மையை 30 சதவீதத்திலான பயனாளிகள் மட்டுமே அனுபவிக்கின்றார்கள். இவ்வாறாக, பால் விநியோக நடைமுறை பெருமளவு முரண்தன்மைகளை எதிர்நோக்குகின்றது.

v. இத்திட்டத்திற்கு பாற்பண்ணைக் கமக்காரர்கள் பாலை விநியோகித்தல் இரு வகைகளைக் கொண்டதாகும். பெரும்பான்மையினர் (72 சதவீதம்) உற்பத்தியிலும், பங்கீட்டிலும் சம்பந்தப்பட்டுள்ளனர். கிராம மட்ட உத்தியோகத்தர்களினால் அடையாளம் காணப்படும் பங்கீட்டாளர் ஒருவருக்கு பாலை மீதியுள்ளவர்கள் மட்டும் விநியோகிக்கின்றார்கள் என்பதுடன், பயனாளிகளுக்கு பாலை விநியோகிக்கின்றார்கள். பால் விநியோகஸ்தர்களில் அண்ணளவாக 61 சதவீதத்தினர் சிறிய அளவிலான பாற்பண்ணை கமக்காரர்கள் என்பதுடன், அவர்கள் நாளொன்றுக்கு 5 லீற்றருக்கும் குறைவான பாலை விநியோகிக்கின்றார்கள். அத்துடன் அளவீட்டு நேரத்தின் போது 34 சதவீதத்தைக் கொண்ட பாற்பண்ணைக் கமக்காரர்கள் ஒரு பால் எடுக்கும் பசுவை மட்டுமே கொண்டிருந்தார்கள் என்பதுடன், அவர்களில் 10 சதவீதத்தைக் கொண்ட கமக்காரர்கள் தமது மந்தைகளில் ஒரேயொரு பசுவையே கொண்டிருந்தார்கள். ஆண்டு முழுவதும் பாலின் நிலையான விநியோகமொன்றை இந்த விநியோகஸ்தர்கள் விநியோகிப்பார்களா என்ற சந்தேகத்தை இது எழுப்புகின்றது.

vi. ஆயப்பட்ட பிரதேச செயலகங்களினுள் மொத்த உற்பத்தியில் 0.2 சதவீதத்திலிருந்து 11 சதவீதம் வரையில் வேறுபடும் பால் கோப்பைத் திட்டத்திற்கு பாலின் விநியோகம் விளங்குகின்றது. ஆய்வு அமைவிடங்களில் பாற்பண்ணைக் கமக்காரர்களின் அந்தஸ்தை உயர்த்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதற்கு சான்று எதுவும் கண்டறியப்படவில்லை.

vii. பால் கோப்பை திட்டத்தின் போஷாக்கு அம்சங்களை நிரூபிப்பதற்கு விஞ்ஞானரீதியான சான்று இல்லாத போதிலும், நன்மைகளைப் பெற்ற பின்னர் தமது நிறையை பயனாளிகள் ஈட்டிவிட்டதாக உத்தியோகத்தர்களும், பெற்றோரும் நம்புகின்றனர்.

viii. பணத்தை மீள்நிரப்புதலில் தாமதம், பாலின் பங்கீட்டில் கஷ்டங்கள், அவர்களை ஊக்குவிப்பதற்கான ஊக்கங்கள் இன்மை, குறைந்த பால் விலைகள் மற்றும் பெருமளவு நிருவாகத் தீர்மானங்கள் தொடர்பிலான பிரச்சனைகள் ஆகியனவே பாற்பண்ணைக் கமக்காரர்களினால் முனைவுபடுத்தப்பட்ட பெருமளவு பிரச்சனைகளாகும். பணத்தை மீள் நிரப்புதல், பாலுக்கான உயர்ந்த விலை மற்றும் பால் பங்கீட்டின் திருத்தியமைக்கப்பட்ட வழிவகைகளை அறிமுகப்படுத்தல்கள் ஆகியனவே அவர்களின் ஆலோசனைகளின் மத்தியில் விளங்குகின்றன.

ix. பாலின் விநியோகத்தில் மட்டும் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் பாலின் பங்கீட்டிலும், மேற்பார்வையின்மையிலும் எதிர்நோக்கப்பட்ட கஷ்டங்களை முனைவுபடுத்தினார்கள். உத்தியோகத்தர்களுக்கும், பால் விநியோகஸ்தர்களுக்கும் மற்றும் பயனாளிகளுக்கும் இடையிலான பங்காளர்களாக திட்டம் வெற்றியளிப்பதைச் செய்வதற்காக பலதரப்பட்ட ஆலோசனைகளை அவர்கள் கொண்டுள்ளார்கள். பாற்பண்ணைக் கமக்காரர்களுக்கு ஊக்குவிப்புக்களின் ஏற்பாடு பாலுக்கான உயர்வான விலை, பயனாளிகளுக்கான விழிப்பியல் திட்டங்கள், பண மீள் நிரப்பலில் தாமதங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல், அவசியமானவிடத்து நிருவாக சம்பந்தங்கள் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியனவே அவற்றின் மத்தியில் விளங்குகின்றன.

x. பால் கோப்பைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வேளையில் பெருமளவு கஷ்டங்களை கிராம மட்ட உத்தியோகத்தர்கள் அனுபவிக்கின்றார்கள். போதியளவு உயர் தரத்திலான பாலை விநியோகிக்கக்கூடிய பொருத்தமான பாற்பண்ணைக் கமக்காரர்கள்/அத்துடன் பங்கீட்டாளர்களைக் கண்டறிதல், பயனாளிகளைத் தெரிவுசெய்வதில் பிரச்சனைகள், மேற்பார்வையின் மட்டுப்படுத்தல்கள் விழிப்பியலின் குறைவு/இன்மை மற்றும் வேறுபட்ட பங்காளர்கள் மத்தியில் அக்கறை மற்றும் பாலுக்கான மோசமான விலைகள் ஆகியனவே உத்தியோகத்தர்களினால் முன்வைக்கப்படும் பிரச்சனைகளாகும். உயர்ந்த மட்டத்திலான தலையீட்டினை வேண்டுகின்ற பிரச்சனைகளில் சில பிரச்சனைகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமென அவர்கள் சுட்டிச்சொன்னார்கள். பால் பங்கீட்டுக் கஷ்டங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக பலதரப்பட்ட மாற்றுவழிகள் முன்மொழியப்பட்டுள்ளன. மேற்பார்வைக்கான ஒரு பொறிமுறை, சகல பங்காளர்களுக்கான விழிப்பியல் திட்டங்கள், பாலுக்கான உயர்வான விலைகள் ஆகியனவே திட்டத்தை மேம்படுத்துவதற்கான ஏனைய ஆலோசனைகளாகும்.

xi. குறைந்த தரத்திலான பாலைப் பெறுவதின் காரணமாக திட்டத்தில் இணைந்து கொள்வதில் கஷ்டங்களுக்கு பயனாளிகள் முகங்கொடுத்துள்ளார்கள்.

**விதந்துரைப்புகள்**

i. திட்டத்தின் பதிவை வைத்திருத்தலும், தொடர்ச்சியான மேற்பார்வையும் அத்தியாவசியமான செயற்பாடொன்றாகும். இது பால் கோப்பைத் திட்டத்தின் விளைவினை அளவிடுவதற்கு உதவும்.

ii. முன்னோடி அடிப்படையொன்றில் முன்பள்ளிகள் ஊடாகத் திட்டத்தை அமுல்படுத்தல்.

iii. திட்டத்திற்கு உதவியளிக்கின்ற பாற்பண்ணைக் கமக்காரர்களுக்கு ஊக்கமளிப்பதற்கான ஒரு திட்டம்.

iv. பாலின் விலையை அதிகரித்தல்

v. சகல பங்காளர்களை விழிப்படையச் செய்வதற்கான நடவடிக்கைகள்.

## 9. இலங்கையில் வறுமைசார்ந்த கொள்கையை வகுத்தமைத்தலையிட்டு கலந்தாய்வு

**ஆராய்ச்சிக் குழாம்:**

| | |
|---|---|
| திரு ஜே.கே.எம்.டி.சந்திரசிறி | - இணைப்பாளர் |
| திரு எம்.எம்.எம்.அஹியார் | - இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி சி.பி.ஹதுருசிங்க | - இணை-ஆராய்ச்சியாளர் |
| கலாநிதி பி.எ.சமரதுங்க | - உசாலர் (IPS) |

**நிதிப்படுத்தலின் மூலம்:** FAO

இலங்கையில் தமது வாழ்வாதாரத்திற்காக நாட்டிலுள்ள பெரும்பான்மையிலான மக்கள் தங்கியுள்ள கிராமிய கமத்தொழில் துறையை இதுவரை பின்பற்றப்பட்ட பெருமளவு அபிவிருத்திக் கொள்கைகள் நன்கு கவனத்திற்கெடுக்கவில்லை. எனவே, அத்துறையில் வறுமை மிகவும் உயர்வானதாகும். இப் பிரச்சனையைக் கவனத்திற்கெடுக்குமுகமாக FAOஇடமிருந்து தொழில்நுட்ப மற்றும் நிதிசார் ஆதரவுடன் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் (ஹெ.க.ஆ.ப.நி.) வறிய கமக்காரர்களை அதிகாரமளிக்கும் விசேட நோக்குடன் அவர்களது வறுமை சார்ந்த தொலைநோக்கிலிருந்து கிட்டுகின்ற அரசாங்கக் கொள்கைகளைப் பகுப்பாய்தல் மீது இவ்வாய்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆய்வின் கீழ் சந்தைப்படுத்தல் மற்றும் ஆதரவு சேவைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் மற்றும் சிறு உடமையாளர் பயிர்ச் செய்கைத் துறை, கால்நடைத் துறை மற்றும் மீன்பிடித் துறை ஆகியவற்றை உள்ளடக்கி அதிகாரமளிப்புக்கும் மற்றும் வாழ்வாதார மேம்படுத்தலுக்கும் நிறுவனரீதியான அபிவிருத்தி ஆகிய மூன்று பாரிய துணைக் கருப்பொருளின் நோக்கெல்லையின் கீழ் வரும் கொள்கைகள் மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**நோக்கங்கள்**

i. மேற்கோளிலான பகுதிகளில் கிட்டுகின்ற கொள்கைகளை மதிப்புரைத்தல்.

ii. வறிய கமக்காரர்கள் மீது கொள்கைத் தாக்கத்தை மதிப்பிடுதல் மற்றும் வறுமையான கமக்காரர்களை அதிகாரமளிப்பது தொடர்பில் உள்ளவற்றின் ஏதாவது இடைவெளிகளை அடையாளம் காணுதல்.

iii. கொள்கைப் பகுப்பாய்வின் முடிவுகளை ஆவணப்படுத்தல் மற்றும் கொள்கைகளின் அதிக வறுமைசார்பினை உறுதிப்படுத்துவதற்காக இக் கொள்கை பகுப்பாய்வின் விதந்துரைப்புக்கள் மீதான அடிப்படையில் புதிய கொள்கைகளை வகுத்தமைப்பதற்கு அல்லது நடைமுறையிலான கொள்கைகளைத் திருத்தியமைப்பதற்கு கொள்கை வகுப்போரை கூருணர்வுப்படுத்தல்.

**முடிவுகள்**

i. 1935இன் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்துடன் இலங்கையில் வறுமை சார்ந்த கமத்தொழில் அபிவிருத்தி ஆரம்பித்ததுடன், காணியற்ற வறியவர்களுக்கு இலவசமாகப் பங்கிடப்பட்ட காணி, நீர் மற்றும் சில வேறு வசதிகள் ஆகியவற்றுடன் ஒரு தொடரான கமக்காரர் குடியேற்றத் திட்டங்களைத் தாபிப்பதற்கு இட்டுச் சென்ற இது வறுமைசார்ந்த கொள்கையொன்று என்பதில் சந்தேகமில்லை என கருதப்பட முடியும். ஆனால், நீர்ப்பாசன பகுதிகளின் அபிவிருத்திக்கு மூலவள ஒதுக்கீட்டின் விகிதாசாரமற்ற பங்கு தற்போதைய விநியோக குறைநிரப்பல் கொள்கையில் பாரிய இடைவெளியொன்றாகும்.

ii. நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவத்தின் (1999இல் மேற்படி காணிக் கொள்கையின் திருத்தத்தின் பின்னர் ஆரம்பித்த) மீதான தற்போதைய கொள்கை பெருமளவு வறுமைசார்ந்த அம்சங்களைக் கொண்டுள்ளது. கொள்கையின் கீழ் நீர்ப்பாசன முறைமையின் செயற்பாட்டினுள்ளும், முகாமைத்துவத்தினுள்ளும் பயனாளிகளின் பங்கெடுப்பைப் பெறுதல் கமக்காரர்களுக்கான குரலொன்றை வழங்குகின்றது. இது இருந்த போதிலும், கமக்காரர் நிருவாகத்திலான முறைமையின் கீழ் நீர்ப்பாசன முறைமை பராமரிப்பு நடவடிக்கைகளின் செயற்றிறன் நிலைத்திருத்தல் செயற்பாட்டினையும், முகாமைத்துவத்தையும் உறுதிப்படுத்துவதற்கு தாபிக்கப்பட்ட பராமரிப்பு தரங்கள் இன்மை, நியாயமான தன்மையொன்றில் மூலவளங்களை ஒன்றுதிரட்டுவதற்கு அவசியமான வழிகாட்டல்கள் இன்மை, கமக்காரர்களின் நீர் முகாமைத்துவ அனுபவமின்மை மற்றும் சனசமூகங்களில் அரசியல் மற்றும் வேறு பிளவுகள் ஆகியவற்றின் காரணமாக திருப்திகரமான மட்டத்தில் இல்லை.

iii. நடைமுறையிலானதும், உறுதியாக வளர்ச்சியுறுவதுமான பாசன நீருக்கு பயனுறுதிவாய்ந்ததாக பதிலிறுப்பதற்கு கொள்கைகளின் உத்தேசமான வகிபங்குக்கு உரிய கவனத்தை நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவக் கொள்கைகளில் உள்ள ஒரு இடைவெளி செலுத்தவில்லை. சுமார் 120 சதவீதம் கொண்ட நடைமுறையிலான பயிர்ச்செய்கையின் தீவிரத்தன்மையானது மேம்படுத்தலுக்கான அதிகளவு இடத்தை கொண்டுள்ளதுடன், பயிர்ச்செய்கை முறைமைகளில் மேம்படுத்தல்களுடன் சேர்த்து அதிக செயற்றிறனான நீர் முகாமைத்துவத்தின் ஊடாக இதைச் சாத்தியப்படச் செய்ய முடியும்.

iv. மொத்த நீர் ஒதுக்கீட்டின் பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுப்பதற்கான பொருத்தமான பொறிமுறையொன்று இன்மையானது சூழ்நிலை மோசமாக வருவதற்கு முன்னர் கவனத்திற்கெடுப்பதற்கு அவசியமான ஓர் இடைவெளியாகும்.

v. நிலத்தடி நீர் அற்றுப்போவதை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உண்மையிலேயே ஒரு வறுமை சார்ந்த அபிவிருத்தி மூலோபாயம் என்ற போதிலும், அதை அமுல்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகளுடன் தோதான அமைப்பில்லை; உதாரணம் விதிகளையும், ஒழுங்குவிதிகளையும் 'கசற்'படுத்தாமல் இருத்தல்.

vi. அரிசி உற்பத்தி *யாயா* திட்டத்தின் கருத்துரு ஒரு வறுமைசார்ந்த கொள்கையாகும். ஏனெனில், அவசியமான தொழில்நுட்பத் தகவலையும், வேறு சேவைகளையும் தனிப்பட்டரீதியில் அடைவதற்கு வறுமையான கமக்காரர்களினால் முடியாது என்பதனால், இந்த ஒருங்கிணைக்கப்பட்ட சேவை ஏற்பாட்டிலிருந்து அவர்கள் நன்மையடைகின்றார்கள். ஆனால், பாரிய எண்ணிக்கையிலான அமைவிடங்களில் இதை நகல்படுத்துவதற்கு போதிய மூலவளங்களை திணைக்களம் கொண்டிருக்கவில்லை.

vii. 1987இல் அதிகாரத்தின் பரவலாக்கத்தினால் பின்தொடரப்பட்ட பரந்தளவிலான விஸ்தரிப்பு முறைமையின் சீர்குலைவினால் இலங்கை கமத்தொழில் கொள்கையின் வறுமைசார் சிறப்பியல்பு கடுமையாகப் பலவீனப்பட்டுள்ளது.

viii. ஒவ்வொரு கமநல அபிவிருத்தி நிலையத்திலும் தாபிக்கப்பட்ட கமக்காரர் வங்கியூடாக தமது கடன் தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு வறுமையான கமக்காரர்களை இயலச் செய்யும் வழியில் கடன் கொள்கை செயற்படுத்தப்படுகின்ற போதிலும், ஒவ்வொரு கமக்காரர் வங்கியிலும் கிட்டுகின்ற நிதியங்களின் கொள்ளளவை மீறுகின்றதாக கமத்தொழில் கடனின் உயர்வான கிராக்கி போன்ற சில நடைமுறையிலான பிரச்சனைகள் அதிலிருந்து நன்மையை அடைவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட கமக்காரர்களுக்கு மட்டுமே அனுமதித்துள்ளது.

ix. வறுமைசார்ந்த கொள்கையொன்றாக கால்நடைத் துறையில் தம்மை அதிகாரமளிப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக தமது சொந்த தாபனரீதியான வலைப்பின்னல்களை அமைப்பதற்கு பாற்பண்ணைக் கமக்காரர்கள் ஊக்கமளிக்கப்பட்ட போதிலும், பதப்படுத்துவதிலும், சந்தைப்படுத்துவதிலும் இந்த கூட்டுறவுச் சங்கங்களின் சம்பந்தம் துறைக்கு நன்மைகளை பயனுறுதிவாய்ந்ததாக வழங்குவதற்கு போதுமானதல்ல.

x. மீன்பிடித் துறை சம்பந்தமாக நடைமுறையிலான மீன்பிடிக் குழுவின் கொள்கையின் விளைவு முழுமையான விதத்தில் திருப்திகரமானதல்ல என்பதுடன், பெருமளவு மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் சுறுசுறுப்பற்றவை என்பதுடன், இது வசதிகளிலிருந்து நன்மையடைவதற்கு ஏழை மீனவர்களுக்கு கஷ்டங்களை விளைவிக்கின்றது.

**விதந்துரைப்புகள்**

i. புதிய தொழில்நுட்பங்களை வேகமாகப் பரப்புவதற்கும், புரிந்துகொள்வதற்கும் வசதியளிப்பதற்காக விஸ்தரிப்புடனான ஆராய்ச்சியை இணைக்கும் நிறுவனரீதியான அமைப்பு மாற்றப்பட வேண்டும். மத்திய அரசாங்கத்தின் கீழ் ஆராய்ச்சிப் பணிக்கும், மாகாண

நிருவாகத்தின் கீழான விஸ்தரிப்பு பணிக்கும் இடையிலான பயனுறுதிவாய்ந்த இணைப்பொன்று அத்தியாவசியமாகும்.

ii. பிந்திய தொழில்நுட்பத்திற்கும் மற்றும் சந்தைத் தகவலுக்கும் கமக்காரர்களையும், விஸ்தரிப்புப் பணியாளர்களையும் இணைக்கின்ற தகவல்தொழில்நுட்ப அடிப்படையிலான கிராமிய விஸ்தரிப்பு வலைப்பின்னல்களை தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

iii. ஒரு துளி நீருக்கு அதிகளவு பயிர்களை உற்பத்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்காக சேதன வழக்கங்களுக்கும், பண்ணையிலான நீர் முகாமைத்துவத்திற்கும் மற்றும் விஸ்தரிப்பு சேவைகளுக்கும் இடையில் பயனுறுதிவாய்ந்த ஒருங்கிணைப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

iv. மேன்மிகையொன்றை உற்பத்தி செய்யும் போது ஆதாயமற்ற விலைகளுடன் சிறிய கமக்காரர்கள் முகங்கொடுக்கும் பிரச்சனையைச் சமாளிப்பதற்கு ஒளிவுமறைவற்ற பொறிமுறைகள் ஊடாக அமுல்படுத்தப்படும் ஒவ்வொரு பயிருக்கும், உற்பத்திக்குமான அடையாளம் காணப்பட்டதும், பொருத்தமானதுமான சந்தைப்படுத்தல் மூலோபாயங்கள் இருக்க வேண்டும்.

v. சிறிய ஏற்றுமதி பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள வறிய கமக்காரர்களுக்கு உதவுவதற்காக சனசமூக அடிப்படையிலான தாபனங்கள் ஊடாக அமுல்படுத்தப்படும் கொத்தணி கிராம அபிவிருத்தித் திட்டத்தை உயர்த்துவதற்கான அவசியமொன்றுள்ளது.

## 10. இலங்கையில் மரக்கறி, பழ சந்தைப்படுத்தலின் பிளாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்துவதில் தாக்கம்

**ஆராய்ச்சிக் குழாம்:** திரு.ஜே.கே.எம்.டி.சந்திரசிறி - இணைப்பாளர்
திரு.எஸ்.அபாசிங்க - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

*அபி வவமு ரட்ட நகமு* திட்டத்தின் கீழ் மரக்கறிகளினதும், பழங்களினதும் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களைக் குறைக்குமுகமாக அரைவாசி ஆகுசெலவில் (மானியத்திலான வீதம்) வேறுபட்ட சந்தை உபயோகிப்பாளர் மத்தியில் 300,000 பிளாஸ்டிக் கூடைகளைப் பங்கிடுவதென எதிர்பார்க்கப்படுகின்றது. இக் கருத்திட்டத்தில் அனுராதபுரத்திலுள்ள அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் சம்பந்தப்பட்டுள்ளது. பலதரப்பட்ட உபயோகிப்பாளர்களினால் பன்னிலையான பிளாஸ்டிக் கூடைகளை ஏற்றுக்கொள்ளுதல் அறுவடைக்குப் பிந்திய இழப்பின் குறைப்பு மீதான அவற்றின் தாக்கம், பண்ணையிலான விலை மற்றும் உற்பத்தியின் தரம் ஆகியன அறியப்படவில்லை. இத்திசையின் மீது இந்த ஆய்வு நோக்கினைக் கொண்டுள்ளது.

### ஆய்வு நோக்கங்கள்

பிளாஸ்டிக் கூடைகளின் உபயோகத்தையும், நாட்டில் பழ, மரக்கறி சந்தைப்படுத்தல் மீது அதன் தாக்கத்தையும் மதிப்பாய்வதே ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

குறிப்பான நோக்கங்கள் வருமாறு:

i. விநியோகச் சங்கிலியிலும், வேறுபட்ட மாவட்டங்களிலும் வேறுபட்ட பங்காளர்கள் மத்தியில் பிளாஸ்டிக் கூடைகளின் பங்கீட்டினை மதிப்பாய்தல்.

ii. கொள்வனவு செய்யப்பட்ட பிளாஸ்டிக் கூடைகள் எந்த நோக்கத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டன என்பதைச் சோதிப்பதுடன், காரணங்களைக் கீழ்கோடிடுதல்.

iii. பிளாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்தி சந்தை வழிகளை அடையாளம் காணுவதுடன், அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களினதும், உற்பத்திகளின் தரத்தினதும் மற்றும் உற்பத்தியாளர் விலையினதும் மீது அவற்றைப் பயன்படுத்துவதன் தாக்கத்தை அளவிடுதல்.

iv. மரக்கறி, பழ சந்தைப்படுத்தலுக்கு பிளாஸ்டிக் கூடைகளின் சிறந்த உபயோகத்திற்கான சிபார்சுகளைச் செய்தல்.

**முடிவுகள்**

i. 2006 ஜனவரியிலிருந்து 2008 டிசம்பர் வரையிலான காலத்தின் போது வேறுபட்ட மாவட்டங்களில் வேறுபட்ட பங்காளர் மத்தியில் சுமார் 43,000 பிளாஸ்டிக் கூடைகள் பங்கிடப்பட்டுள்ளன. இத்தொகையில் முறையே 47.4, 7.4, 2.8, 2.6 மற்றும் 1.5 சதவீதங்கள் உற்பத்தியாளர்களினதும், மொத்த விற்பனையாளர்களினதும் சில்லறை வியாபாரிகளினதும், சேகரிப்பாளர்களினதும் மற்றும் ஏற்றி இறக்குவோரினதும் மத்தியில் பங்கிடப்பட்டுள்ளன. இணைந்த உபயோகிப்பாளரின் பகுதியின் மத்தியில் 27 சதவீதத்திற்கு மேற்பட்டவை பங்கிடப்பட்டுள்ளன. பங்கிடப்பட்ட கூடைகளின் உரிமையாளர்கள் உள்ள முக்கியமான மாவட்டங்களாக அனுராதபுரம் (18.9 சதவீதம்), பதுளை (25 சதவீதம்), நுவரெலியா (20.2 சதவீதம்) மற்றும் கம்பஹா (11.6 சதவீதம்) ஆகியன விளங்குகின்றன.

ii. மரக்கறிகளினதும், பழங்களினதும் பொதிப்படுத்தலுக்கும், ஏற்றி இறக்குதலுக்கும் பிளாஸ்டிக் கூடைகள் மிகவும் மட்டுப்பட்ட விதத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளன.

iii. உற்பத்தியாளர் மட்டத்திலிருந்து பாவனையாளர் மட்டம் வரை மரக்கறிகளையும், பழங்களையும் ஏற்றி இறக்குவதற்கு கூடைகளைப் பயன்படுத்தும் சந்தை வழிமுறைகளின் மட்டுப்படுத்த எண்ணிக்கை சந்தை பங்காளர்களின் குறிப்பான குழுவினால் கையாளப்படுகின்றது. தமது விற்பனைக்கூடங்கள் ஊடாக உள்ளூர் பாவனையாளர்களுக்கு கம-உற்பத்திகளை விநியோகிக்கும் சுப்பர் மார்க்கட்டுகள் (கார்கில்ஸ் மற்றும் கீல்ஸ் போன்ற), பொருளாதார மையங்களில் வர்த்தக விற்பனைக்கூடங்களைக் கொண்டுள்ள மொத்த வியாபாரிகள் மற்றும் உல்லாசப் பயண ஹொட்டேல்களுக்கு உற்பத்திகளை விநியோகிக்கும் மொத்த வியாபாரிகள் மற்றும் கம உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் சம்பந்தப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியன இவற்றின் மத்தியில் விளங்குகின்றன.

iv. உத்தேசமான நோக்கத்திற்கு கூடைகளைப் பயன்படுத்துவதற்கு உற்பத்தியாளர்கள் தயாராக இருந்த போதிலும், பின்வருவனவற்றை உள்ளடக்கும் ஒரு தொகை காரணங்களினால் அது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது: கூடைகளில் தமது உற்பத்திகளை ஏற்றியிறக்குவதற்கு அதிகளவு இடத்தின் தேவைக்கிணங்க பொலி-சாக்குப் பைகளுடன் ஒப்பிடுகையில் கூடைகளின் உற்பத்திகளின் மிகவும் மட்டுப்படுத்த தொகையை பொதிப்படுத்துவதன் சாத்தியம், மற்றும் கூடைகளில் சாமான்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் போக்குவரத்துச் செலவினதும், மேலதிக செலவினங்களினதும் அதிகரிப்பு மற்றும் கூடைகளில் உற்பத்திகளை ஏற்றி இறக்குவதற்கு நிராகரிப்பதன் மூலம் ஏற்றி இறக்குவோர்களினால் கூடைகளின் உபயோகத்தை அதைரியப்படுத்தல்.

v. உற்பத்தியாளரிடமிருந்து பாவனையாளர் மட்டம் வரை பழங்களையும், மரக்கறிகளையும் ஏற்றி இறக்குவதற்கு பாரிய அளவில் பிளாஸ்டிக் கூடைகள் பயன்படுத்தப்படாத போதிலும், தமது பண்ணை உற்பத்திகளை அறுவடை செய்வதற்கும், பண்ணையிலிருந்து வீட்டுக்கு உற்பத்தியை ஏற்றி இறக்குவதற்கும் அவற்றைப் பெருமளவு கமக்காரர்கள் பயன்படுத்து கின்றார்கள்.

vi. 'வசந்தி கருணயவின்' நோக்கத்திற்காக நுவரெலியாவுக்கு தமது பண்ணையிலிருந்து விதை வெங்காயங்களை ஏற்றி இறக்குவதற்கும், அவற்றை மீள ஏற்றி இறக்குவதற்கும் மகாவலி 'எச்' பகுதியிலும், தம்புள்ளையிலும் உள்ள பெரிய வெங்காயக் கமக்காரர்களினால் பிளாஸ்டிக்

கூடைகள் நோக்கமின்றியும், பாரியளவிலும் பயன்படுத்தப்படுகின்றன. அந்நோக்கத்திற்காக கூடைகளைப் பயன்படுத்துவது விதை வெங்காயங்களுக்கு குறைந்த சேதத்தைப் பராமரிக்கலாம் என கமக்காரர்கள் உணர்கின்றார்கள்.

vii. நுவரெலியாவிலும், பதுளையிலும் உள்ள உருளைக்கிழங்கு கமக்காரர்கள் விதை உருளைக் கிழங்கை பொதிப்படுத்துவதற்கு கூடைகளைப் பயன்படுத்துகின்றார்கள். கூடைகளினுள் கிட்டுகின்ற சிறந்த காற்றோட்ட வசதிகளின் காரணமாக சொல்லப்பட்ட நோக்கத்திற்கு கூடைகள் மிகவும் பொருத்தமானவை என்பதே அக் கமக்காரர்களின் மனவுணர்வாகும்.

viii. சந்தை வழிமுறைகளில் பிளாஸ்டிக் கூடைகள் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படும் போது அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் மிகக்குறைவாக இருப்பதுடன் (5 சதவீதத்திற்கும் குறைவாக) உற்பத்திகளின் தரம் மிக உயர்வானது, அத்துடன் உயர்வான விலையொன்றைக் கொண்டிருப்பதன் மூலம் கமக்காரர்களும் நன்மையடைகின்றார்கள். இம் முறையின் கீழ் சந்தைக்கு மட்டுப்படுத்தப்பட்ட தொகையிலான உற்பத்திகள் வருவதன் காரணமாக சந்தையில் பழங்களினதும், மரக்கறிகளினதும் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களிலும், தரத்திலும் மற்றும் விலையிலும் பயனுறுதிவாய்ந்த மாற்றத்தை செய்வது சாத்தியமற்றதாகும்.

**விதந்துரைப்புகள்**

i. ஒன்றிணைக்கப்பட்ட விநியோக சங்கிலி முறைமையுடன் பிளாஸ்டிக் கூடைகள் பிரசித்தப்படுத்தப்பட முடியும் என ஆய்வு முடிக்கின்றது. கமக்காரர்களை ஒழுங்குபடுத்துதல், பின்னோக்கியதும், முன்னோக்கியதுமான இணைப்புக்களைத் தாபித்தல் மற்றும் பொதிப்படுத்தல் நிலையங்கள், பண்ணை வீதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் பொருத்தமான பாரவண்டிகளைப் பயன்படுத்துவதை வசதிப்படுத்துதல் ஆகியனவற்றின் ஊடாக ஒன்றிணைக்கப்பட்ட விநியோக சங்கிலி முறைமை தாபிக்கப்பட வேண்டும்.

ii. விரைவாக கடன் வசதிகளை வழங்குவதன் மூலமும், சலுகையிலான வட்டி வீதங்களின் மூலமும் தோதான ஏற்றி இறக்கலை வசதிப்படுத்துவதற்காக பாரவண்டிகளையும், லொறிகளையும் கொள்வனவு செய்வதற்காக சேகரிப்பாளர்களை அரசாங்கம் வசதிப்படுத்த வேண்டும்.

iii. திட்டத்தின் உத்தேசமான நோக்கங்களைச் சாதிப்பதற்கு அவசியமான விழிப்பியலை உருவாக்குதல், வியாபார முயற்சியை விருத்தி செய்தல் மற்றும் குழுவை அமைத்தல் போன்ற ஒரு தொடரான பயிற்சித் திட்டங்கள் அவசியமானவையாகும்.

**நடைமுறையிலான ஆய்வுகள்**

**1. சிறு உடமை கமத்தொழில் துறையில் தொழில்நுட்பக் கைமாற்றத்தின் நிலை: வட மத்திய மாகாணத்தின் விடயம்**

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி பி.ரேணுகா வீரக்கொடி - இணைப்பாளர்
திருமதி ஷாமினி கே.குமார - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

கமத்தொழிலில் உலகளாவிய போட்டித்தன்மைக்கான அடித்தளத்தை பொருத்தமான தொழில்நுட்பமும், தகவலையும் பரப்புதலும், ஏற்றுக்கொள்ளுதலும் வழங்குகின்றது. இது இருவழி தொடர்பாடல் ஒன்றினால் சித்தரிக்கப்படுகின்ற ஒரு சுற்றிலான நடைமுறையாகும். முடிவான உபயோகிப்பாளர்களுக்கு புதியதும், புது மாற்றத்திலானதுமான அறிவும், தொழில்நுட்பங்களும் தன்மயமாக்கப்பட்டு, மதிப்பாயப்பட்டு, கைமாற்றப்படுவதுடன், களமட்டத்தில் அதன் செயற்றிறமையின் பின்னூட்டலொன்று புது மாற்றத்தை மேற்கொள்பவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. நாட்டில் சிறு

உடமையாளர் கமத்தொழில் துறையில் பயனுறுதிவாய்ந்த தொழில்நுட்ப கைமாற்ற நடைமுறையொன்றைக் கட்டுப்படுத்தியுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நடைமுறையிலான பன்னிலையிலான விஸ்தரிப்பு முகாமைத்துவ முறைமைகள் பௌதீக மற்றும் மனித மூலவளங்கள் போதியளவு இன்மை, கமக்காரர்களினதும், மற்றும் கள மட்ட விஸ்தரிப்பு முகவர்களினதும் மனப்பாங்கிலானதும், நடத்தையிலானதுமான அம்சங்கள் ஆகியன நடைமுறையை பலவீனப்படுத்தியுள்ளன. மேலதிகமாக அடிமட்டத்தில் விஸ்தரிப்புப் பணியின் நுண்மட்ட சூழ்நிலையை ஆய்வதற்கு கிட்டிய அண்மையில் பெரிதுமே முயற்சிகள் இருக்கவில்லை. தொழில்நுட்ப கைமாற்ற நடைமுறை தொடர்பிலான முக்கிய தகவலில் பாரிய வெற்றிடமொன்றை இது உருவாக்கியுள்ளது. இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் மாகாணத்தினதும், மாகாணங்களுக்கிடையிலானதும் மற்றும் மகாவலி விஸ்தரிப்பு முறையினதும் மூன்று பாரிய முகாமைத்துவ முறைமைகளின் கீழ் நடைமுறையிலான அரச துறை விஸ்தரிப்பினை இவ்வாய்வு ஆராய்கின்றது.

**நோக்கம்**

இலங்கையின் சிறு உடமை கமத்தொழில் துறையில் தொழில்நுட்ப கைமாற்ற நடைமுறையின் தற்போதைய நிலையையும், செயற்றிறனையும் மதிப்பிடுதல்.

**குறிப்பான நோக்கங்கள்**

i. சிறு பண்ணைத் துறையில் ஒவ்வொரு விஸ்தரிப்பு முகாமைத்துவ முறைமையின் கீழ் தொழில்நுட்பக் கைமாற்றத்தினதும், தகவலைப் பரப்புதலினதும் தற்போதைய நிலையை மதிப்பிடுதல்

ii. ஆராய்ச்சிக்கும், விஸ்தரிப்புக்கும் இடையிலான ஒருங்கிணைப்பினைப் பலப்படுத்துகின்ற அதேவேளை, தொழில்நுட்ப கைமாற்றத் தடைகளை வெற்றிகொள்வதற்கு உதவுகின்ற செயற்படுகின்ற நடவடிக்கைகளைச் சுட்டிச்சொல்லுதல்.

iii. ஆய்வு காலத்தில் வெற்றியடைந்துள்ள நகல்படுத்தக்கூடிய விஸ்தரிப்பு முயற்சிகளை அங்கீகரித்தல்

ஆய்வின் கீழ் தரவு சேகரிப்பு முடிக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட காலத்தின் போது தரவு படியமைத்தலும், அறிக்கை எழுதுதலும் பொறுப்பேற்கப்பட்டிருந்தன.

## சூழல், நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

**முடிக்கப்பட்ட செயற்பாடுகள்**

**1. இலங்கையின் அணைக்கட்டு முறைமை: நில்வள ஆற்று வடிநிலத்தில் ஒரு சமூகப் பொருளாதார பகுப்பாய்வு**

**ஆராய்ச்சிக் குழாம்:** திருமதி ஜி.ஜி.டீ.எல்.டபிள்யு.சமரசிங்க - இணைப்பாளர்
திரு.எம்.எ.சி.சிதத் பண்டார - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

நெற்செய்கைக்கு சிறு நீர்ப்பாசன திட்டங்களின் பங்களிப்பு செய்கை பண்ணப்பட்ட காணியின் சுமார் 24.5 சதவீதமாகும் (DCS, 2008). 200 ஏக்கர்களுக்கும் குறைவான கட்டுப்பாட்டுப் பகுதியை கொண்டுள்ள சிறிய நீர்ப்பாசன திட்டங்களின் வகுதிகளினுள் வருகின்ற சிறிய குளங்கள் மீதான பெருமளவு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இக் கருப்பொருளின் மீது பாரிய எண்ணிக்கையிலான வெளியீடுகள் உள்ளன. சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளினாலும்,

ஆராய்ச்சியாளர்களினாலும் கடந்த காலத்தில் அணைக்கட்டு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு செலுத்தப்பட்ட கவனம் மிகவும் மட்டுப்பட்டதாகும். சிறிய அணைக்கட்டு-அடிப்படையிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் மீது ஒரு சில ஆராய்ச்சிகள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. பள்ள நாட்டு ஈர வலயத்தில் சிறிய அணைக்கட்டுத் திட்டங்களின் உயர்வான அடர்த்தி மாத்தறை மாவட்டத்தில் நில்வள ஆற்று வடிநிலத்தினுள் காணப்படுகின்றது. பொருளாதாரப் பரவலாக்கம், மக்களின் வாழ்வாதாரக் குணவியல்புகள் மற்றும் நில்வள ஆற்றுப் படுக்கையில் அணைக்கட்டு-அடிப்படையிலான கமத்தொழிலுடன் இணைந்துள்ள வேறு பிரச்சனைகள் சம்பந்தப்பட்டுள்ள நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்கு இவ்வாய்வு திட்டமிடப்பட்டது.

பெரும் போகத்தின் போதும், சிறு போகத்தின் போதும் அணைக்கட்டு முறைமைகளின் தன்மையையும், பாசன நீர் விநியோகத்தையும் அடையாளம் காண்பதற்கு ஆய்வுசெய்வதும் அணைக்கட்டு முறைமைகளிலிருந்து நன்மையடைகின்ற கமக்காரர் குடும்பங்களின் பொருளாதாரப் பரவலாக்கத்தையும், வாழ்வாதாரங்களையும் புரிந்துகொள்வதற்கு அணைக்கட்டு பாசனத்திலான பகுதிகளில் நடைமுறையிலான காணி உபயோக மாதிரியையும், பயிர்ச்செய்கை முறைகளையும் ஆய்வதுமே பிரதான நோக்கமாகும்.

பெரும்பான்மையான குடித்தனங்களின் மொத்த வருடாந்த வருமானத்தின் 10 சதவீதத்தை விட குறைவாகவே ஆய்வுப் பகுதியில் அணைக்கட்டுப் பாசனத்திலான நெற்செய்கையிலிருந்து பொருளாதாரப் பங்களிப்பு மிகவும் சிறியது என்பதை ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. தெரிவுசெய்யப்பட்ட துணை-நீர்ப்பிடி நிலப் பகுதிகளில் ரூபா 100,000.00 முதல் ரூபா 250,000.00 கொண்ட வருடாந்த வருமான குழுவில் குடித்தனங்களின் பெரும்பான்மை உள்ளதுடன், மொத்த வருமானத்தில் 75 சதவீதத்திற்கு மேற்பட்டது பண்ணை சாரா நடவடிக்கைகளிலிருந்தே ஈட்டப்படுகின்றது.

ஆய்வுப்பகுதியில் கைவிடப்பட்ட அணைக்கட்டு முறைமைகளில் சுமார் 20 முதல் 30 சதவீதம் வரையிலுள்ளது. அணைக்கட்டு கட்டுப்பாட்டுப் பகுதியில் பாசன நெற் காணிகளை கைவிட்டமையும், சில அணைக்கட்டு முறைமைகள் தோதான முறையில் இடப்படாததுமே இந்த அணைக்கட்டு முறைமைகளைக் கைவிடுவதற்கான பாரிய காரணங்கள் என அளவீட்டு முடிவுகள் குறிப்பிடுகின்றன. அணைக்கட்டு முறைமைகளின் பராமரிப்பு முறைமையானரீதியில் கடைப்பிடிக்கவில்லை. சம்பந்தப்பட்ட பகுதிகளில் அநேகமாக சகல கமக்காரர்களுமே கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்களாவர். அரசாங்க அனுசரணையிலான மானிய உரத் திட்டத்தைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட கமக்காரர் தாபனங்களின் அங்கீகாரத்தை கமக்காரர் தாபனங்களின் சகல உறுப்பினர்களும் கொண்டிருக்க வேண்டும் என்பது ஒரு தேவையாகும்.

நடு நில்வள துணை நீர்ப்பிடி நிலத்தில் மொத்தச் செய்கையிலான காணி விஸ்தீரணத்தில் சுமார் 65 சதவீதத்தையும், ஊருபொக்க கங்கை துணை நீர்ப்பிடி நிலத்தில் 41 சதவீதத்தையும் நெல் கொண்டுள்ளது. பிரதானமாக வீட்டுப் பாவனை நோக்கத்திற்காகவே நெல் செய்கை பண்ணப்படுகின்றது. குறைந்த தாழ்நில நெல்லின் பயிர்ச்செய்கை தீவிரம் நடு நில்வள மற்றும் ஊருபொக்க கங்கை துணை நீர்ப்பிடி நிலங்களில் முறையே 1.86 மற்றும் 1.77 கொண்ட பயிர்ச் செய்கை தீவிர பெறுமதிகளுடன் ஆய்வுப் பகுதியில் கணிசமானளவு உயர்வானதாகும். ஆய்வுப் பகுதியில் சராசரி நெல் விளைச்சல் ஏக்கருக்கு 34 புசலுக்கும், 54 புசலுக்கும் இடைப்பட்டதாகும். (0.29 மெ.தொ./ஹெக். முதல் 0.45 மெ.தொ./ஹெக். வரை) சராசரி நெல் விளைச்சலின் பெறுமதிகள் உலர் வலயப் பகுதிகளை விட ஒப்பீட்டுரீதியில் குறைவானவையாகும். நடு நில்வள துணை நீர்ப்பிடி நிலத்தில் குடும்ப சரீரத்தொழிலின் ஆகுசெலவு உட்பட ஏக்கர் ஒன்றுக்கான நெற் செய்கையின் ஆகுசெலவு சுமார் ரூபா 38,912 என்பதுடன், இது ஊருபொக்க துணை நீர்ப்பிடி நிலத்தில் ரூபா 39,326 ஆகும். நடு நில்வள துணை நீர்ப்பிடி நிலத்தில் குடும்ப சரீரதொழில் உட்பட மொத்த ஆகுசெலவின் சுமார் 51 சதவீதமே சரீரத்தொழில் ஆகுசெலவு என்பதுடன், இது ஊருபொக்க துணை நீர்ப்பிடி நிலத்தில் சுமார் 45 சதவீதமாகும். நடு நில்வளவில் ஒரு ஏக்கர் நெல்லை செய்கை பண்ணுவதற்கு தேவைப்படும் சரீரத்தொழில் நாட்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 37 என்பதுடன், இது ஊருபொக்க துணை நீர்ப்பிடி நிலத்தில் 32 ஆகும். களைக் கட்டுப்பாட்டுக்கும், பூச்சியினதும், நோய்களினதும் முகாமைத்துவத்திற்கும் நடு நில்வள துணை

நீர்ப்பிடி நிலத்தில் மொத்த உற்பத்தி ஆகுசெலவில் சுமார் 16 சதவீதம் தேவைப்படுகின்ற அதேவேளை, ஊருபொக்க துணை நீர்ப்பிடி நிலத்தில் 10 சதவீதம் ஆகும்.

ஆய்வுப் பகுதியில் சிக்கலான காணி ஆட்சி முறைமையொன்று அவதானிக்கப்பட்டது. நடு நில்வள துணை நீர்ப்பிடி நிலத்தில் உரித்துரிமையின் முக்கிய உரித்துரிமை வகை எனப்படும் *'அந்தே'* மற்றும் *'பிரவீனிய'* ஆகியன காணி ஆட்சியின் முக்கியமான வகையாகும். ஊருபொக்க துணை நீர்ப்பிடி நிலத்தில் தனித்து உரித்துரிமையைக் கொண்டுள்ள காணித்துண்டுகளின் சதவீதம் 42 ஆகும். இரண்டாவது மிகவும் முக்கியமான பகுதியாக காணி உடமைகளில் 24 சதவீதத்துடன் '*தட்டுமாறு*' விளங்குகின்றது. நடு நில்வள துணை நீர்ப்பிடி நிலத்தில் *தட்டுமாறு* முறைமை மிகவும் பிரசித்தமானதல்ல. ஊருபொக்க துணை நீர்ப்பிடி நிலத்தில் 21 சதவீதத்திற்கு *பிரவீனிய* வகையிலான உரித்துரிமை வகை கூறுகின்றது.

நடு நில்வள துணை நீர்ப்பிடி நிலத்தில் தாழ்நில உடமைகளின் 71 சதவீதம் 0.5 ஏக்கர்களை விட குறைவான காணியின் அளவு வகுதியினுள் வருகின்றது. இரத்த உறவுகளினுள் துண்டாக்கப்பட்டதன் காரணமாகவே உடமை அளவு குறைவடைந்துள்ளது. ஊருபொக்க துணை நீர்ப்பிடி நிலத்தில் அளவு வகுப்பினுள் வருகின்ற உடமைகளின் சதவீதம் சுமார் 76 ஆகும்.

மொத்த தொழிலாற்றுகின்ற மக்களில் சுமார் 39 சதவீதத்தினர் தமது பிரதான தொழிலாக கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். 65 வயதுக்கு மேற்பட்ட கமக்காரர்கள் நடு நில்வள துணை நீர்ப்பிடி நிலத்தில் 28 சதவீதத்திற்கு வகை கூறுகின்றதுடன், ஊருபொக்க துணை நீர்ப்பிடி நில பகுதிகளில் 31 சதவீதமாகும். மாதிரிப்படுத்தப்பட்ட மக்களில் 20க்கும், 30க்கும் இடைப்பட்ட வயதினரில் ஒரு சதவீதம் மட்டுமே நடு நில்வள வடிநிலத்தில் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன், இது ஊருபொக்க துணை நீர்ப்பிடி நிலத்தில் 2 சதவீதமாகும்.

**விதந்துரைப்புகள்**

i. மானியத்திலான உரத் திட்டத்திற்கு இணைப்பினைக் கொண்டுள்ள அணைக்கட்டு முறைமையில் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு கமக்காரர் பங்கெடுப்பினைப் பெறுவதற்கு முறைமையான நடைமுறைகளைத் தாபித்தல்.

ii. சம்பந்தப்பட்ட கமக்காரர் தாபனங்களுக்கு பராமரிப்பு வேலையின் பொறுப்பை வழங்குகின்ற அதேவேளை, சம்பந்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களினால் ஒரு கிரமமான கண்காணித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. ஈர வலய கம காலநிலை நிலைமைகளில் நோய்களுக்கு தாக்குப்பிடிக்கின்ற அரிசி வகைகள் பகுதியிலுள்ள கமத்தொழில் போதனாசிரியர்களிடமிருந்து பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு மீதான கிரமமான ஆலோசனையுடன் வழங்கப்பட வேண்டும்.

iv. நில்வள வெள்ள பாதுகாப்பு திட்டத்தின் அமுலாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கைவிடப்பட்ட நெற்காணிகளைச் செய்கை பண்ணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

v. பகுதியில் சராசரி நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு உள்ளூர் சூழலுக்கு பொருத்தமான நெல் வகைகள் பயன்படுத்தப்பட முடியும்.

vi. புதிய அணைக்கட்டொன்றை நிருமாணிக்கும் போது பகுதியின் நீர் வரலாற்றியல் சூழலியல் தொடர்பாகவும், நடைமுறையிலான நீர்ப்பாசன வேலைகளின் அமைவிடம் தொடர்பாகவும் கமக்காரர்களின் பாரம்பரிய அறிவையும், புத்தியுடமையையும் பெறுவதற்கு முறைமையான பங்கெடுப்பு அணுகுமுறையொன்று ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

## 2. நிறுவனரீதியான மட்ட மழைநீர் அறுவடையின் பொருளாதார மதிப்பீடு

**ஆராய்ச்சிக் குழாம்:** திரு.எம்.எம்.எம்.அஹியார் - இணைப்பாளர்
திரு. எம்.எ.சி.எஸ்.பண்டார - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

கிட்டிய அண்மைக் காலத்தில் அரசாங்கத்தினதும், அரசாங்க சார்பற்ற தாபனத்தினதும் தலையீடுகளுடனும், மழைநீர் அறுவடைக்கான தொழில்நுட்பங்களின் அதிக ஆராய்ச்சியுடனும் மற்றும் அபிவிருத்தியுடனும் மழை நீர் அறுவடையை நிறுவனரீதிப்படுத்தல் ஊடாக மழைநீர் அறுவடையின் மீட்டுரைத்தல் ஒன்று இருந்தது. நகரக் குடியேற்றங்களிலும் மற்றும் வேறு கட்டிடங்களிலும் மழைநீர் அறுவடையின் ஏற்பாட்டை உள்ளடக்குவதற்காக 1978இன் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டம் 2007இன் இல.36ஆக திருத்தப்பட்டது. வர்த்தகத் துறைகளில் பொறுப்பேற்கப்பட்ட அதிகரித்த நாளாந்த நடவடிக்கைகள் WC மற்றும் சிறுநீர் பெய்த பின்னர் நீர்ப்பீச்சியடித்தல், சலவை செய்தல் மற்றும் சுத்தம் செய்தல் மற்றும் கைத்தொழில் குளிராக்கல் தேவைகள் போன்றவற்றுக்கு அறுவடை செய்யப்பட்ட மழைவீழ்ச்சியைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட முடியும். இது குடிப்பதற்கான நீரின் தரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கான குறிப்பான அவசியம் இல்லை. பதப்படுத்துவதற்கும், கழுவுவதற்கும், குளிராக்குவதற்கும் மற்றும் தூய்மைப்படுத்தல் தேவைகளுக்கும் கணிசமானளவு தொகையை நுகர்கின்ற தொழில் துறைகளுக்கும், சேவைத் துறைக்கும் முக்கியமான பிரச்சனையாக நீரின் தேவை விளங்குவதனால், மழைநீரின் அறுவடையின் உத்தேசமான சாத்தியக்கூறு சரிவர கவனத்தை ஈட்டவில்லை. ஒருசில வர்த்தக முயற்சிகளும், அரசாங்கக் கட்டிடங்களுமே தமது கட்டிட இடப்பரப்புக்களில் பாரிய மூலதனங்களுடன் மழைநீர் அறுவடையை ஒன்றிணைத்துள்ளன.

கைத்தொழில்/வர்த்தகத் துறைக்கும் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கும் மாற்றுவழியிலான விருப்பொன்றாக மழைநீர் அறுவடையின் பொருத்தத்தன்மையை மதிப்பிடுமுகமாகவும், நிறுவனரீதியான மட்டத்தில் மழைநீர் அறுவடையை மேம்படுத்துவதற்கான விதந்துரைப்புகளை செய்யுமுகமாகவும் தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் அமுல்படுத்தப்பட்ட நிறுவனரீதியான மட்ட கூறை நீர் அறுவடைக் கருத்திட்டங்களின் பொருளாதார மதிப்பீடொன்றை நடத்துவதே ஆய்வின் பாரிய நோக்கமாகும். டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் தொழிற்சாலை இடப்பரப்பிலும், சீதுவை பிரண்டிக்ஸ் கஸுவல் வெயார் (பிறைவேற்) லிமிற்றெற்றில் மழை நீர் பாவனை வசதியிலும் மற்றும் மாலம்பே மில்லேனியம் தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் மழைநீர் அறுவடை வசதியிலும் விடய ஆய்வுகள் நடத்தப்பட்டன.

ஆய்வு முடிவுகளின் பிரகாரம் கட்டுப்படுத்தப்பட்ட பொது நீர் விநியோகத்தினாலும், விசேடமாக வரண்ட காலங்களின் போது நிலத்தடி நீர் ஊற்றுக்களில் மட்டுப்படுத்தப்பட்ட நீர் கிட்டுந்தன்மையினாலும் விளைவிக்கப்பட்ட உற்பத்தி நடைமுறையில் அபாயத்தையும், உறுதியற்ற தன்மையையும் குறைப்பதற்கு விடய ஆய்வுப் பகுதிகளில் மழைநீர் அறுவடை உதவியுள்ளது. மழைநீர் உபயோகத்தின் காரணமாக நீர் இறுப்புப்பட்டியலில் அல்லது மாற்று நீர் மூலத்திலிருந்து பெறப்பட்ட நீரின் ஆகுசெலவின் குறைப்பினை பண்டங்கள் சேவைகள் வழங்குனர்கள் அனுபவித்துள்ளார்கள். நிலத்தடி நீர் வளங்கள் மீதான அழுத்தத்தையும், அயல்புறத்தில் பாய்ந்து பெருகுகின்ற வெள்ளத்தின் நிகழ்வுகளையும் குறைப்பதற்கு மழைநீர் அறுவடை நடைமுறை உதவியுள்ளது.

இவ்வறிக்கையில் பரீட்சிக்கப்பட்ட மூன்று விடய ஆய்வுகளில் இரு விடய ஆய்வுகளின் முடிவுகள் திட்டமான பொருளாதார முடிவுகளைக் காட்டுவதுடன், 18 சதவீதம் மற்றும் 11 சதவீதம் கொண்ட IRRஉடன் 7 சதவீத வட்டி வீதத்தில் 7 முதல் 15 வருடங்களினுள் செய்யப்பட்ட மூலதனம் அறவிடக்கூடியதாகும். மழைநீர் சமஅளவில் பெறுமதியான நீர் மூலமாகும். இது சலவை செய்தல், சுத்திகரித்தல், மலசலகூட நீர்ப்பீச்சியடித்தல், கைத்தொழில் குளிராக்கல், வாகனத்தைக் கழுவுதல் மற்றும் மேலதிகமான பரிகரிப்பு ஆகுசெலவின்றி இயற்கை வனப்பூட்டல் ஆகியவற்றின் நோக்கங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு பயனுள்ள விருப்பொன்றாகும். பொருளாதாரச் செயற்றிறனை

சாதிப்பதற்கு மழைநீர் அறுவடை முறைமைகளின் குறைந்த நிருமாண ஆகுசெலவும், பயனுறுதிவாய்ந்த செயற்பாடும் முக்கியமானவையாகும். திட்டமிடல் நடைமுறையின் முன்கூட்டிய கட்டத்தில் மழைநீர் அறுவடை வடிவமைப்பை ஒன்றிணைப்பதன் மூலம் நிருமாண ஆகுசெலவைக் குறைந்தபட்சமாக்குவதை இலகுவில் சாதிக்க முடியும். நாக-அலுமினிய நெளிவளை தகடுகள் போன்ற சிறந்த தரத்திலான கூரைப் பொருட்களுடன் கூரையை வடிவமைப்பதனால் அது சிறந்த தரத்திலான நீரைச் சேகரிப்பதற்கான தகுதியைக் கொண்டிருக்கும். மழைநீர் அறுவடையின் முக்கியத்துவத்தினதும், நன்மைகளினதும் மற்றும் அபாயங்களைக் குறைந்தபட்சமாக்குவதில் மழைநீர் அறுவடையின் உத்தேசமான வகிபங்கினதும், மாற்று நீர் விநியோகங்களின் உறுதியற்ற தன்மையினதும் மீது பொதுசன விழிப்பியலும், அறிவும் இத்தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கினை ஆற்ற முடியும்.

**விதந்துரைப்புகள்**

i. குடிநீர் விநியோகத்திலும், நிலத்தடி நீர் வளங்களின் முகாமைத்துவத்திலும் ஈடுபட்டுள்ள அரசாங்க முகவராண்மைகள் நிறுவனரீதியான மட்டத்தில் மழைநீர் அறுவடையை மேம்படுத்துவதற்காக ஊக்குவிப்புப் பொதியொன்றை உபயோகிப்பாளர்களுக்கு வழங்க வேண்டும்.

ii. பொருத்தமான சட்ட வரைச்சட்டத்தினதும் மற்றும் நிறுவனரீதியான ஒழுங்குகளினதும் ஊடாக அரசாங்க மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு மழைநீர் அறுவடை கட்டாயமாக விளங்க வேண்டும்.

iii. பொருளாதாரச் செயற்றிறனை அதிகரிக்குமுகமாக பாரியளவிலான மழைநீர் அறுவடைக்காக குறைந்த ஆகுசெலவிலான பொருத்தமான தொழில்நுட்பங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

iv. சூழலைப் பேணுவதற்கு மட்டுமன்றி ஆனால், மழைநீர் அறுவடையை நோக்கி நகர்வதற்கு உபயோகிப்பாளர்களை செயல்நோக்கமளிப்பதற்கு நிலத்தடி நீரை மட்டுப்படுத்தலின்றி பெறுவதைக் கட்டுப்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகள் இருக்க வேண்டும் என்பதுடன், 'ஏதாவது எல்லையின்றி சகலருக்கும் நிலத்தடி நீர் இலவசமானது' என்ற கொள்கை மாற்றப்பட வேண்டும்.

v. மழைநீர் அறுவடையை நோக்கி மக்களை ஆதரிப்பதற்கும், ஆதிக்கம் செலுத்துவதற்கும் அறிவையும், விழிப்பியலையும் கட்டியெழுப்புதல் அத்தியாவசியமானதாகும்.

vi. தனியார் துறையின் மத்தியில் CSRஇன் அங்கமொன்றாக மழைநீர் அறுவடையின் கருத்துருவை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

## 3. நீர்ப்பாசன முகாமைத்துவத்தில் அரசாங்க-தனியார் பங்காண்மை: ரிதி-பெந்தி அல கமக்காரர் நிறுவன மாதிரியின் அனுபவங்கள்

**ஆராய்ச்சிக் குழாம்:**

| | | |
|---|---|---|
| திரு.எம்.எம்.எம்.அஹியார் | - | இணைப்பாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ்.பண்டார | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| செல்வி எம்.ரி.பத்மாஜனி | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

நீர்ப்பாசனச் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும், நிலைத்திருத்தல் செயற்பாட்டு பராமரிப்புக்கும் மற்றும் கமக்காரரின் வருமானத்திற்கும் வழிவகையொன்றாக 1980களில் இப்பகுதியின் பின்னர் பங்கெடுப்பு நீர்ப்பாசன முகாமைத்துவத்திற்கு அதிகளவு வலியுறுத்தல் வழங்கப்பட்டது. சகல முயற்சிகளுடனும், கஷ்டமான பணிகளுடனும் கமக்காரர்களின் வாழ்வாதாரத்தையும், உட்கட்டமைப்பின் நிலைத்திருத்தல்தன்மையையும் பொறுத்தளவில் சாதிக்கப்பட்ட மேம்படுத்தல்

ஓரத்திற்குரியதாகும். பங்கெடுப்பு நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ அணுகுமுறையில் பலதரப்பட்ட பின்னடைவுகளை மேற்கொள்ளப்பட்ட செயற்றிறன் மதிப்பாய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. இலாபகரமான பொருளாதார முயற்சிகள் ஊடாக சிறு உடமை பயிர்ச்செய்கைச் சனசமூகங்களின் முழுமையான பொருளாதார மற்றும் சமூக சேமநலனை உறுதிப்படுத்துவதற்கு கமக்காரர் தாபனங்களினால் இயலாமலிருந்தது.

காணிகள் துண்டாக்கப்படுதல், மாறுதலில்லாத பயிர்ச்செய்கை முறை, நீரின் செயற்றறினற்ற உபயோகம் மற்றும் செயற்பாடுகளின் வர்த்தகம் சாராத தன்மை ஆகியன பயிர்ச்செய்கை சனசமூகத்தின் வாழ்க்கைத்திறன்களின் குறைந்த மட்டத்திற்கு பங்களித்துள்ளன. முன்னைய அணுகுமுறைகளின் கலப்பிலான விளைவுகளை கரிசனைக்கு எடுக்கையில், 1997இன் போது நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவத்திற்கு ஒரு புதிய அணுகுமுறையை தேசிய அபிவிருத்தி சபையின் கமத்தொழில் கொள்கை மீதான செயற்குழு விதந்துரைத்தது. அரசாங்க-தனியார் பங்காண்மையுடன் நிறுவனரீதியான ஒழுங்கமைப்பை உருவாக்குவதை தேசிய அபிவிருத்தி சபை முன்மொழிந்தது. இதன்படி தனிப்படுத்தப்பட்ட சிறிய-அளவிலான கமத்தொழில் உற்பத்தியாளர்கள் கமக்காரர் நிறுவனமொன்றில் இணைந்து கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. உச்சமான தன்மையொன்றில் காணி மற்றும் நீர் உட்பட சகல உள்ளீடுகளையும் பயன்படுத்துவதற்கு நிறுவனம் அதிகாரமளிக்கப்பட்டது. இதன் விளைவாக பயிர்ச்செய்கை சனசமூகத்திற்கு முழுமையான நன்மைகளை உறுதிப்படுத்துவதற்காக சந்தை முனைப்பிலான உற்பத்தியிலும், பெறுமதி சேர்ப்பிலும் ஈடுபடுகின்ற அதேவேளை, கமத்தொழில் உற்பத்திக்காக சிக்கனமான காணி மற்றும் நீர் உபயோகத்தை உறுதிப்படுத்துவது என எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்க-தனியார் பங்காண்மையின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட ரிதி-பெந்தி அல கமக்காரர் நிறுவன மாதிரி இலங்கையில் நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவத்தில் பரிசோதிக்கப்பட்ட புதுமையான அணுகுமுறையில் ஒன்றாகும்.

நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறையையும், நிறுவன ரீதியான ஒழுங்கினையும் மற்றும் பாசனத்திலான கமத்தொழிலின் வர்த்தகமயப்படுத்தலையும் ஆய்வதும், அத்துடன் முழுமையான முகாமைத்துவத்தின் கீழ் நிலைத்திருக்கத்தக்க செயற்பாட்டு முகாமைத்துவத்தின் கீழ் செயற்றிறனை மதிப்பிடுவதுமே ஆராய்ச்சியின் ஆரம்பநிலையிலான நோக்கங்களாகும். கமத்தொழில் உற்பத்தியையும், கமக்காரர்களின் வருமானத்தையும் உயர்த்துவதில் அரசாங்க-தனியார் மாதிரியின் வகிபங்கை மதிப்பாய்வதையும் ஆய்வு குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

கடந்த ஒன்பது ஆண்டுகளின் போது தமது செயற்றிறனில் உயர்ச்சியுடனும், வீழ்ச்சியுடனும் பகுதியில் ரிதி-பெந்தி அல கமக்காரர் நிறுவனம் செயற்பட்டதாக ஆய்வின் பாரிய முடிவுகள் குறிப்பிடுகின்றன. கடந்த ஐந்து வருடங்களில் தொடர்ச்சியான இழப்புக்களை நிறுவனம் செய்த போதிலும் பகுதியில் கமக்காரர் நிறுவனத்தின் அவசியத்தையும், பயிர்ச்செய்கை சனசமூகத்திற்கு ஒன்றிணைந்த சேவைகளை வழங்குவதில் அதன் திட்டமான வகிபங்கினையும் 92 சதவீதத்தைக் கொண்ட மாதிரி கமக்காரர் பிரதிநிதிகளும், நோக்குக்குழு கலந்துரையாடல்களின் பெரும்பான்மையிலான பங்கெடுப்பாளர்களும் வலியுறுத்தினார்கள். கமக்காரர் நிறுவனத்தின் அவசியத்தை நிராகரித்த கமக்காரர் நிறுவனங்கள் பிரதானமாக பங்குதாரர்கள் சாராதவையாகும் (75 சதவீதம்). 2007இன் போதும், 2008இன் போதும் நிறுவனத்திலிருந்து பங்குகளை சுமார் 775 புதிய உறுப்பினர்கள் கொள்வனவு செய்துள்ளதுடன், இது செய்யப்பட்ட மூலதனத்திற்காக ஏற்பட்ட நஷ்டங்களின் நிமித்தம் நிறுவனத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

சிறு உடமை கமத்தொழிலின் பரவலாக்கம் மற்றும் குடித்தன வருமானத்தை உயர்த்துதல் என்ற அதன் ஆரம்பநிலையிலான நோக்கங்களில் இரண்டைச் சாதிப்பதற்கு வெற்றியின் பலதரப்பட்ட மட்டங்களில் பெருமளவு முன்னெடுப்புக்களை நிறுவனம் செய்துள்ளது. முறைமை மட்ட கமக்காரர் தாபனத்தின் வாழ்க்கைத்தொழில் கரத்தின் வகிபங்கில் கமக்காரர் நிறுவனம் வெற்றியடைந்துள்ளது.

2000-2004 வரை நீர்ப்பாசன முகாமைத்துவப் பொறுப்புக்களைக் கையாள்வதில் காலத்தின் போது சிறந்ததாக நிறுவனம் விளங்கியது. வரட்சியான காலங்களின் போது கூட அதன் ஆட்சியின் போது கமக்காரர் நிறுவனத்தினால் மேன்மையிலான நீர் மற்றும் பாசன முறைமை

நிருவகிக்கப்பட்டதாக நீர்ப்பாசன செயற்றிறன் காட்டிகளும், பயனாளிகளின் பதிலிறுப்புக்களும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. கமக்காரர் நிறுவனம் மீது நிதிசார் வீரியத்தை வழங்குதல், கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பைத் தாபித்தல் மற்றும் நிறுவனத்துடன் பயனாளிகளை தொடப்பெறாமல் வைத்திருத்தல் ஆகியவற்றின் மூலம் கமக்காரர் நிறுவனத்திற்கு பலங்களை நீர்ப்பாசன பொறுப்புக்களை கையாள்தல் வழங்கியுள்ளது. உள்ளீடுகளை (உரம் மற்றும் கம-இரசாயனங்கள்) வழங்குவதில் கமக்காரர் நிறுவனத்தின் சம்பந்தம் போட்டிக்குரிய சந்தையொன்றை உருவாக்கியுள்ளது. இது உள்ளீடு விலைகளின் குறைப்புக்கும், சந்தையில் தரத்திலான உள்ளீடுகளின் கிட்டுந்தன்மைக்கும் இட்டுச்சென்றுள்ளது. இந்த போட்டிக்குரிய சூழல் இன்று வரை தொடர்கின்றதுடன், நஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும் கமக்காரர் நிறுவனத்தின் இன்றியமையாததன்மைக்கான காரணங்களில் ஒன்றாக விளங்குகின்றது. 5 ஏக்கர் அடிக்கு மேலானதிலிருந்து நீரின் தீர்வை 3 ஏக்கர் அடியை விட குறைவானதற்கு குறைக்கப்பட்டமையும், நீர் கிட்டுந்தன்மையில் தலைவால் குறைக்கப்பட்டமையும் பாரிய சாதனைகளாகும். இவை வரண்ட காலச் செய்கையின் விஸ்தீரணத்தையும், பயிர் உற்பத்தித்திறனையும் மற்றும் கமக்காரர் வருமானத்தையும் அதிகரிப்பதற்கு உதவியுள்ளன.

பகுதியில் கமக்காரர் நிறுவனமொன்றின் அவசியத்தை கமக்காரர்கள் வலியுறுத்தியுள்ள போதிலும், கமக்காரர் நிறுவனச் செயற்பாடுகளின் தீவிரமான பங்கெடுப்பிலிருந்து பெரும்பான்மையிலான பங்காளர்கள் விலகியே இருந்துள்ளார்கள். நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒளிவுமறைவின்மை மற்றும் ஊழல் மற்றும் சில நிறுவன முகாமையாளரினால் தவறான செயல்கள் ஆகியனவே பங்காளர்களினால் அடையாளம் காணப்பட்ட பாரிய பிரச்சனைகளில் ஒன்றாகும். வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளையும், வருடாந்த கணக்குகளில் பயன்படுத்தப்பட்ட பதங்களையும் பங்கெடுப்பாளர்களினால் புரிந்துகொள்ள முடியாதிருக்கின்றது. 2000-2004இன் போது செயற்பாட்டுக்கும், கண்காணித்தலுக்கும் கமக்காரர் தாபனத்திற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செயற்பாட்டு கண்காணித்தல் ஒதுக்கீடு பற்றியும், தனியார் துறை தாபனங்களுடன் நிறுவனம் செய்து கொண்ட ஏனைய கொடுக்கல் வாங்கல் பற்றியும் பெரும்பாலானோர் சந்தேகம் கொண்டிருந்தனர். நிறுவனத்தை நிருவகிப்பதற்கு தோதான நபர்களை ஆட்சேர்ப்பதின் முக்கியத்துவம் பயனாளிகளினால் முனைவுபடுத்தப்பட்ட காரணங்களில் ஒன்றாகும். பங்கெடுப்பாளர்களினால் தெரிவுசெய்யப்பட்ட நிறுவன பணிப்பாளர்களுடனும், வெளிவாரிரீதியாக ஆட்சேர்க்கப்பட்ட முகாமைத்துவப் பணியாளர்களுடனுமான குழப்பநிலை முகாமைத்துவப் பணியாளரின் அறிவினதும் மற்றும் பணிப்பாளர் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தினதும் மோதல் நிலையிலானதாகும். பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் முகாமையாளர்களினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை எதிர்வாதம் புரிவதற்கு அல்லது எதிர்க்கும் மனப்பாங்குடன் விளங்குவதற்கு பணிப்பாளர் சபை அறிவினைக் கொண்டிருக்கவில்லை. மறுபுறத்தில் நிறுவனத்தின் சேவைகளை வழங்குவதில் அல்லது முன்னுரிமைப்படுத்துவதில் விசேடமாக கமக்காரர் நிறுவன அனுசரணையிலான வியாபாரச் செயற்பாடுகளுக்கும், விதைநெல்லைக் கொள்வனவு செய்வதற்கும் மற்றும் கடன் வசதிகளை வழங்குவதற்கும் பயனாளிகளைத் தெரிவுசெய்வதில் பணிப்பாளர் சபையின் சலுகைக்கு ஆதரவளிப்பதற்கு முகாமையாளர்கள் கட்டுப்பட்டிருந்தனர்.

கமக்காரர் நிறுவனம் மீது நம்பிக்கை இழப்பதற்கு பங்கெடுப்பாளர்களை மேற்படி மறுதலையான உண்மைகள் தள்ளியுள்ளன. நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நீர் முகாமைத்துவ பணிகள் மீளப்பெறப்பட்ட பின்னர் நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்ட பெருமளவு நடவடிக்கைகள் விதை நெல் திட்டம், குழுக் கடன் மற்றும் உரங்களின் விநியோகம் ஆகியன தவிர பயிர்ச்செய்கை சனசமூகத்திற்கு நேரடியான நன்மையைக் கொண்டிருக்கவில்லை. தேயிலையை பொதிப்படுத்துதல், அரிசியைக் குற்றுதல், அலங்கார மீன் உற்பத்தி மற்றும் கோழி உற்பத்தி போன்ற வியாபார நடவடிக்கைகளுக்கு ஒன்றுதிரட்டப்பட்ட சக்தியும், முயற்சிகளும் சனசமூகத்தினால் முக்கியமான அம்சங்களாகக் கருதப்படாததினால் நேரமும், மூலவளங்களும் வீணாக காணப்பட்டன.

**கொள்கைத் தாக்கங்கள்/விதந்துரைப்புகள்**

i. கமக்காரர் நிறுவனம் ஒரு சமூக மூலதனம் என்பதுடன், பயனாளி சனசமூகத்திற்கு ஒன்றிணைந்த சேவைகளை வழங்கும் சேவைக் கரம் ஒன்றுமாகும்.

ii. நிலைத்திருக்கும் தன்மையொன்றில் நீர் மற்றும் காணி மூலவளங்களை நிருவகிப்பதற்கு பொருளாதாரரீதியில் சாத்தியமானதும், சமூகரீதியில் சாத்தியமானதும் மற்றும் கலாசாரரீதியில் பொருத்தமானதுமான பொறிமுறையொன்றாக கமக்காரர் நிறுவன மாதிரி விளங்குகின்றது.

iii. பங்கெடுப்பாளர்களுடன் சிறந்த தொடர்பாடல் முறையை வடிவமைத்தல், நிறுவனம் மீது பங்கெடுப்பாளர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், பங்கெடுப்பாளர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் வியாபாரத் திட்டங்களைத் தயாரிப்பதில் பங்கெடுப்பாளர்களின் அக்கறைகளை ஒன்றிணைத்தல் ஆகியவற்றினை கமக்காரர் நிறுவன செயற்பாடுகளில் பங்குதாரர் பங்கெடுப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

iv. மாவட்ட/பிரதேச செயலாளர், நீர்ப்பாசன எந்திரவியலாளர்கள், மாகாண கமத்தொழில் பணிப்பாளர் மற்றும் நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவின் கருத்திட்ட முகாமையாளர் போன்ற சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர்களிலிருந்து நியமிக்கப்பட்ட ஆலோசனை உறுப்பொன்றுடன் கமக்காரர் நிறுவனத்தின் நடவடிக்கைகள் வழிகாட்டப்பட்டு, நுணுக்கமாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

v. பொது முகாமையாளரையும் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணியாளரையும் தெரிவுசெய்வதில் உள்ளூரில் கிட்டுகின்ற சீவியத்தொழில் புரிபவர்களுக்கும்/இளைப்பாறிய தகைமை வாய்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

vi. விளங்காத மொழிகளின் உபயோகத்தையும், தொழில்நுட்ப விடயங்களையும் தவிர்ப்பதன் மூலம் நிறுவன முகாமைத்துவத்திற்கும், பங்குதாரர்களுக்கும் இடையிலான தொடர்பாடல் தடைகள் குறைந்தபட்சமாக்கப்படல் வேண்டும்.

vii. கமத்தொழில் உள்ளீடு விநியோக சந்தையில் போட்டித்தன்மையை உருவாக்குவதிலும், சந்தையை திறமையாகக் கையாள்வதிலிருந்தும், மற்றும் தனியார் துறையினரால் சுரண்டப்படுவதிலிருந்தும் பயிர்ச் செய்கை சனசமூகத்தை பாதுகாப்பதிலும் வெற்றியடைந்த மையமொன்றாக கமக்காரர் நிறுவனம் நிரூபித்துள்ளது.

**தேசிய கருத்தரங்குகளில்/பயிற்சி செயலமர்வுகளில் பங்கெடுப்பு**

1. பேராதனை பல்கலைக்கழக, கமத்தொழில் பட்டத்திற்குப் பிந்திய நிறுவனத்தில் 2009 ஒக்டோபர் 01 அன்று நடைபெற்ற 2009 நீர் சீவியத்தொழில் தினத்தில் திரு.எம்.எம்.எம்.அஹியார் மற்றும் திரு.எம்.எ.சி.எஸ்.பண்டார ஆகியோர் பங்கெடுத்ததுடன், கட்டுரையொன்றையும் சமர்ப்பித்தார்கள்.

2. கொழும்பில் 2009 பெப்ரவரி 22-23 மற்றும் பெப்ரவரி 28, மார்ச் 01 ஆகிய தினங்களில் மத்திய சூழல் அதிகாரசபையினாலும், சூழல் சீவியத்தொழில் நிறுவன சங்கத்தினாலும் நடத்தப்பட்ட மூலோபாய சூழல் மதிப்பீடு மீதான சான்றுப்பத்திர பயிற்சிநெறியில் திரு.எம்.எம்.எம்.அஹியார் மற்றும் திரு.எம்.எ.சி.எஸ்.பண்டார ஆகியோர் பங்கெடுத்தனர்.

## சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை கம-வியாபாரப் பிரிவு

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தின் (ஹெ.க.ஆ.ப.நி.) சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை கம-வியாபாரப் பிரிவு (ச.உ.கொ.க.பி) என அறியப்பட்ட சந்தை ஆராய்ச்சி அலகு 1979இல் USAIDஇன் உதவியுடன் தாபிக்கப்பட்டது. அதன் நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காக 1993-1997 காலத்தின் போது UNDP/FAOஇனால் மேலும் உதவி வழங்கப்பட்டது. அரசாங்க கொள்கைவகுப்போர்களுக்கும், கமக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், நூற்கல்வியாளர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் சந்தை புள்ளிவிபரங்களின் சேகரிப்பையும்,

தொகுப்பையும், பகுப்பாய்வையும் மற்றும் பரப்புதலையும் செய்வதே பிரிவின் பிரதான வகிபங்காகும். தற்போது வாழ்க்கைச் செலவு மதிப்பாய்தல் குழு மீதான அமைச்சுரீதியான உப குழுவுக்கும், ஜனாதிபதி செயலகத்தில் அமைந்துள்ள தேசிய உணவு பாதுகாப்பு குழுவுக்கும், சந்தை விலைகளை ஸ்திரப்படுத்துவதற்கு கொள்கைகளை வகுத்தமைப்பதில் சந்தைத் தகவலை ச.உ.கொ.க.பி. வழங்குகின்றது. கமத்தொழில், வர்த்தக வாணிப மற்றும் பாவனையாளர் அலுவல்கள், சுகாதாரம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்களினதும், இலங்கை மத்திய வங்கியினதும் கொள்கை வகுப்பாளர்களுக்கு சந்தைத் தகவலை ச.உ.கொ.க.பி. வழங்குகின்றது.

மேலதிகமாக, தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் உள்ள அரசாங்கத் திணைக்களங்களுக்கும், வேறு நிறுவனங்களுக்கும், அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கும், வெளிநாட்டு நன்கொடை முகவராண்மைகளுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும், தூதுவராலயங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் தனியார் வர்த்தக நிறுவனங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் தனியார் வர்த்தகர்களுக்கும், அரச சார்பற்ற தாபனங்களுக்கும், ஊடக முகவராண்மைகளுக்கும் மற்றும் கமக்காரர்களுக்கும் சந்தைத் தரவுகளையும், தகவலையும் பிரிவு வழங்குகின்றது. கமத்தொழில் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிகளை நடத்துதல், கமக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் மற்றும் விஸ்தரிப்பு சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சித் திட்டங்களை வழங்குதல் போன்றவை ச.உ.கொ.க. பிரிவினால் ஒரு தொகை வேறு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

## கிரமமான வேலைத் திட்டம்

### உணவுத் தகவல், சந்தை நுண்ணாய்வுக் கருத்திட்டம்

**ஆராய்ச்சிக் குழாம்:**

| | | |
|---|---|---|
| கலாநிதி ரி.எ.தர்மரத்ன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ரோஷினி ரம்புக்வெல | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ருவீனி விதானபத்திரன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.ரி.ஜி.சோமரத்ன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.துமிந்த பிரியதர்ஷன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.என்.பி.ஜி.சமந்த | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.டபிள்யு.எ.என்.விஜேசூரிய | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.இ.எ.சி.பிரியங்கர | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| கலாநிதி வசந்தி விக்ரமசிங்க | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தலின் மூலம்:** திரண்ட நிதியங்கள்

வாராந்த "உணவுப் பண்டங்கள் திரட்டு" (ஆங்கிலம் மற்றும் சிங்களம்), மாதாந்த "உணவுத் தகவல் திரட்டு" (ஆங்கிலம் மற்றும் சிங்களம்) ஆகிய இரு பாரிய பருவகால வெளியீடுகள் ச.உ.கொ.க.பி.இனால் தயாரிக்கப்படுகின்றன. இவை அரசாங்கத்திற்கும், கமக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் விலை புள்ளிவிபரங்களையும் மற்றும் சந்தைத் தகவல்களையும் வழங்குகின்றன. மூலவளங்களை ஒதுக்கிடுதல், கொடுக்கல் வாங்கல் ஆகுசெலவைக் குறைத்தல் கமக்காரர்களின் பேரம்பேசும் நிலையை மேம்படுத்துதல், முழுமையான சந்தை நிலைமைகளின் விழிப்பியலை உயர்த்துதல், பேரம்பேசுதலுக்கு பாவனையாளர்களுக்கு ஆதரவளித்தல்; உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக உணவு கையிருப்புக்களைப் பராமரிப்பதில் கணக்குக்கு எடுப்பதற்காக கொள்கை வகுப்போருக்கு பெறுமதியான புள்ளிவிபரங்களை வழங்குதல் ஆகியவற்றில் பாரிய வகிபங்கொன்றை இந்த திரட்டுக்கள் வகிக்கின்றன.

கொழும்பிலுள்ள 9 சில்லறைச் சந்தைகளிலிருந்தும், புறக்கோட்டை, பாலத்துறை, தெமட்டகொடை, பொரளை, வெள்ளவத்தை, கிருலப்பனை, நுகேகொடை, கடவத்தை, மற்றும் கிரிபத்கொடை போன்ற அயல்புறங்களிலிருந்தும், மற்றும் புறக்கோட்டை (கொழும்பு) மொத்த விற்பனைச்

சந்தையிலிருந்தும் உணவு பண்டங்களின் விலைகளும், சம்பந்தப்பட்ட சந்தைத் தகவலும் சேகரிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பாரிய உணவு உற்பத்தி மாவட்டங்களிலும், உணவு நுகர்வு மாவட்டங்களிலும் 20 சந்தைகளில் இருந்து தரவுகளும், தகவலும் சேகரிக்கப்பட்டன.

2009ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்ட வெளியிடத்து சந்தைகள் வருமாறு: குருநாகல், நிக்கவரட்டிய, தம்புள்ள, அனுராதபுரம், தம்புத்தேகம, பொலன்னறுவை, நுவரெலியா, கண்டி, பதுளை, கெப்பட்டிபொல, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய, ஹம்பாந்தோட்டை, திஸ்ஸமகரகம, மாத்தறை, காலி, களுத்துறை, மொனராகலை, தெகியத்தகண்டிய, புத்தளம், மீகொட, மற்றும் மரதன்கடஹமுல்ல. புறக்கோட்டை, கண்டி, தம்புள்ள, நுரைச்சோலை, மரதன்கடஹமுல்ல மற்றும் மீகொட சந்தைகளிலிருந்து உணவுப் பண்டங்களின் விலைகள் நாளாந்தம் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகள் நேரத்திற்கு பிரதான மொத்த விற்பனைச் சந்தைகளில் பண்டங்களின் விலைகளை அறிவதற்காக உற்பத்தியாளர்களையும், வர்த்தகர்களையும் இயலச்செய்வதற்காக இலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக நாளாந்தம் பரப்பப்பட்டன.

கொழும்பிலும், வெளியிடங்களிலும் மொத்த விற்பனை விலைகளையும், சில்லறை விலைகளையும், பாரிய உற்பத்திப் பகுதிகளில் உற்பத்தியாளர் விலைகளையும் பகுப்பதன் மூலம், வாராந்த உணவுப் பண்டத் திரட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெளியிடப்படுகின்றது. சேகரிக்கப்பட்ட விலைகளின் பிரதான பண்டங்கள் வருமாறு: அரிசி, மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, மரக்கறி, பழங்கள், முட்டை, மீன் மற்றும் கருவாடு. மேலதிகமாக முற்போந்த வாரத்தினதும், ஆண்டினதும் வீச்செல்லைகளினதும், சராசரிகளினதும் விலை ஒப்பீட்டினதும் புள்ளிவிபர விவரணமொன்றை திரட்டு வழங்குகின்றது.

ஆராய்ச்சிப் பணியாளருக்கு நடைமுறையிலான விழிப்பியல் சேவைகளை வழங்குவதற்கு, நடைமுறையிலான சஞ்சிகைகளின் உள்ளடக்கப் பக்கங்கள் பரிசீலிக்கப்பட்டு, தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்களுக்கு ஈமெயில் செய்யப்பட்டது.
ஆராய்ச்சிப் பணியாளருக்கு சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட விடயங்கள் மீதான செய்திப் பத்திரிகைக் கட்டுரைகளின் சேகரிப்பு ஆண்டின் போது கிரமமான செயற்பாடொன்றாகும்.

**நூலகங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு**

கமத்தொழில் நூலகங்கள் தகவல் வலைப்பின்னலின் (AGRINET) உறுப்பாக நூலகம் விளங்குவதுடன், க.ஆ.கொ.ச. நூலகமே குவியப் புள்ளியாகும். வருடத்தின் போது AGRINET SDCP திட்டத்தில் நூலகம் தொடர்ந்தும் பங்கெடுத்தது. ஏனைய அங்கத்துவ நூலகங்கள் 11 சஞ்சிகைகளின் 218 பொருளடக்கப் பக்கங்களையும், 07 சஞ்சிகைகளின் புகைப்படப் பிரதிகளையும்

கோரியிருந்ததுடன், நிறுவகத்தின் ஆராய்ச்சி பணியாளரின் வேண்டுகோளின் பேரில் 6 சஞ்சிகைகளின் 23 பொருளடக்கப் பக்கங்களை பெற்றது.

**வெளியீட்டு பரிமாற்றம் செய்திட்டம்**

வெளியீடுகள் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் வேறு நூலகங்களுக்கு நிறுவகத்தின் 20 நூல்களும், மற்றும் 20 சஞ்சிகைகளும் அனுப்பப்பட்டதுடன், வெளி நிறுவனங்களிலிருந்து 45 வெளியீடுகள் கிடைத்தன.

## வெளியீட்டு அலகு

பிரதிப் பணிப்பாளரின் (ஆராய்ச்சி) நோக்கெல்லையின் கீழ் தொழிற்படும் வெளியீட்டு அலகு சகல மூன்று மொழிகளிலும் ஆராய்ச்சி அறிக்கைகள், இடையீந்த கட்டுரைகள், சஞ்சிகைகள், செய்திக் கடிதங்கள், செய்தித்திரட்டுகள், கையேடுகள், சிற்றேடுகள், மற்றும் வேறு தகவல் சாதனங்கள் ஆகியவற்றைப் பதிப்பித்தலிலும், வெளியிடுவதிலும் ஈடுபட்டுள்ளது.

ஆண்டின் போது ஆராய்ச்சியினதும், பயிற்சியினதும் தொடர்பான பின்வரும் வெளியீடுகள் விடுவிக்கப்பட்டன:

1. இலங்கையின் நெல் புள்ளிவிபரம், 2006-2007
2. இலங்கையில் வேறுபட்ட நீர் உபயோகத் துறைகள் மத்தியில் நீரின் ஒதுக்கீடு: அனுபவத்தின் பாடங்கள்
3. இலங்கையில் கிராமிய அபிவிருத்திக்கும், வறுமையைக் குறைப்பதற்கும் நீர்வாழ்விருத்தி: ஆற்றலளவுகளினதும், மட்டுப்படுத்தல்களினதும் ஒரு மதிப்பீடு
4. மலைநாட்டு மரக்கறி உற்பத்தியில் இயற்கை வள முகாமைத்துவ மனத்தோற்றப்பாடுகள்: கமக்காரர்களின் அறிவு, போக்குகள், மற்றும் பதிலிறுப்புகள்.
5. இலங்கையின் சிறிய கிராமக் குள முறைமைகள்: அவற்றின் கூர்ப்பு, பின்னணி, பங்கீடு மற்றும் அவசியமான பணிகள்
6. கிராமிய அபிவிருத்தியிலும், வறுமையைத் தணிப்பதிலும் சவால்கள்
7. தேசிய ஆதார வகா அங்ஷய கெரஹி பலாத் சபா கிரமய பலபாம
8. ஸ்ரீ லங்காவே குருஷிகர்மீக வகா ரக்ஷனய பிலிபந்த அத்தியனய, மொழிபெயர்ப்பு இல.2, 2009 பெப்பரவரி.
9. குருஷிகர்மீக பரியேஷனய ஹா நிஷ்பாதன சஹதாரவருன்கே காரிபாரய: வத்மன் தத்வய ஹா அனகத விபர தாவன்

ஆண்டின் போது விடுவிக்கப்பட்ட கிரமமான வெளியீடுகள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

1. ஆண்டு அறிக்கை - 2007 (சிங்களம்)
2. ஆண்டு அறிக்கை - 2007 (தமிழ்)
3. ஆண்டு அறிக்கை - 2008 (சிங்களம்)
4. ஆண்டு அறிக்கை - 2008 (ஆங்கிலம்)
5. ஆண்டு அறிக்கை - 2008 (தமிழ்)
6. Sri Lanka Journal of Agrarian Studies, தொகுதி 12, இல. 2, 2008

7. கொவிகட்டயுது அட்யனய - தொகுதி 7, 2008 இதழ் 1 மற்றும் 2
8. "கொவிஜனதா" இதழ் 12 ஒக்-டிசம்பர், 2008
9. "கொவிஜனதா" இதழ் 13 விசேட இதழ் (37ஆவது ஆண்டு நிறைவு) 21 பெப்ரவரி 2009
10. "கொவிஜனதா" இதழ் 13 முதலாவது இதழ் ஜன-மார்ச் 2009
11. "கொவிஜனதா" இதழ் 13 இரண்டாவது இதழ் ஏப்ரல்-ஜூன் 2009
12. "கொவிஜனதா" இதழ் 13 மூன்றாவது இதழ் ஜூலை-செப். 2009
13. "கொவிஜனதா" இதழ் 14 நான்காவது இதழ் ஒக்-டிசம்பர், 2009

கரிசனையிலான காலத்தின் போது, பின்வரும் பொருட்காட்சிகளில் அலகு பங்கெடுத்தது:

i. "தயட்ட கிருள", ப.ஞா.ச.ம.ம., பெப்ரவரி 4-9
ii. கமத்தொழில் கால்நடை, மற்றும் மீன்பிடித்தொழில் (SMEDX) 2009, ப.ஞா.ச.ம.ம., நொவம்பர் 20-22.

## 2009 டிசம்பர் 31இல் உள்ளவாறு பதவியணியினர் நிலை

| | 31.12.2008ல் உள்ளவாறு நிலை | வருடத்தின் போது பதவி நீக்கம்/ ராஜினாமா | நியமனம் | 31.12.2009ல் உள்ளவாறு நிலை |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் | 01 | - | - | 01 |
| பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 01 | - | - | 01 |
| பிரிவுகளின் தலைவர்கள் ஆராய்ச்சி | 04 | 01 | - | 03 |
| உத்தியோகத்தர்கள் | 26 | 04 | 06 | 28 |
| நிருவாகப் பதவியணியினர் | 07 | 01 | - | 06 |
| நூலகத்தின் சிரேஷ்ட பதவியணியினர் | 02 | - | - | 02 |
| தரவு அபிவிருத்தி அலகு | 01 | - | - | 01 |
| கணனி அலகு | 02 | - | - | 02 |
| வெளியீட்டு அலகு | 01 | - | 01 | 02 |
| புள்ளிவிபரப் பதவியணியினர் | 20 | 01 | - | 19 |
| தொழில்நுட்பப் பதவியணியினர் எழுதுவினைஞர், செயலாளர், | 01 | - | - | 01 |
| இணைந்த தரத்தினர் | 52 | 04 | 03 | 51 |
| இயக்குதல், இணைந்த தரத்தினர் | 36 | 01 | 02 | 37 |
| **மொத்தம்** | **154** | **12** | **12** | **154** |

# பதவியணியினரின் முன்னேற்றம்

**பட்டப்பின் படிப்பு செயல்திட்டங்கள்**

பின்வரும் ஆராய்ச்சி, பயிற்சி உத்தியோகத்தர்கள் பட்டப்பின்படிப்பு கற்கைகளில் ஈடுபட்டிருந்தனர்:

| | | |
|---|---|---|
| திரு.பி.சி.ஜே.டீ சில்வா | - | ஹுசா கொங் விஞ்ஞான தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் மனித வள முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி (2007 முதல் 2010 வரை) |
| திரு.டபிள்யு. எச்.எ.சாந்த | - | சூழல் விஞ்ஞான, தொழில்நுட்பத்தில் எம்.எஸ்சி, கமத்தொழில் பீடம், ரையு குஸ் பல்கலைக்கழகம், ஜப்பான் (2008 ஏப்ரல் முதல் 2011 மார்ச் வரை) |
| திரு.எம்.டி.எல்.செனரத் | - | தகவல் தொழில்நுட்பத்தில் எம்.எஸ்சி, தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், மொறட்டுவைப் பல்கலைக் கழகம் (2008 செப்ரெம்பர் முதல் 2009 ஓகஸ்ட் வரை) |
| செல்வி எம்.கே.என்.தமயந்தி | - | அரசாங்கக் கொள்கை மற்றும் ஆட்சியில் எம்.எஸ்சி வட தெற்கு பல்கலைக்கழகம் டாக்கா, பங்களாதேஷ் (2009 ஓகஸ்ட் முதல் 2011 ஜூலை வரை). |

**சர்வதேச பயிற்சிச் செய்திட்டங்கள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள்/மகாநாடுகள்/கூட்டங்கள் ஆகியவற்றில் பங்கெடுப்பு**

திரு.வி.கே.நாணயக்காரா - பணிப்பாளர், 2009 ஏப்ரல் 27 முதல் 30 வரை மலேஷியா, லங்கவியில் நடைபெற்ற CIRDAPஇன் 3ஆவது பிராந்திய கொள்கைக் கலந்தாய்வில் (RPD - 3) பங்கெடுத்தார்.

திரு.ஜே.கே.எம்.டி. சந்திரசிறி - ஆராய்ச்சித் துணையாளர், 2009 மே 25 முதல் ஜூன் 3 வரை இந்தியா, ஹைதராபாத்தில் உள்ளடங்கலான கிராமிய வளர்ச்சிக்கான கிராமிய தொழில்நுட்பங்கள் மீதான பிராந்திய பயிற்சித் திட்டத்தில் பங்கெடுத்தார்.

திரு.எம்.எ.சி.எஸ்.பண்டார - ஆராய்ச்சி உத்தியோகத்தர், 2009 ஜூன் 15 முதல் 24 வரை இந்தியா ஹைதராபாத்தில் நடைபெற்ற கிராமிய அபிவிருத்தியில் ICT மற்றும் GISஇல் புதுமாற்றத்திலானதும், சிறந்ததுமான நடைமுறைகள் மீதான பிராந்திய கற்கை வருகை தரல் சக பயிற்சித் திட்டத்தில் பங்கெடுத்தார்.

கலாநிதி எல்.பி.ரூபசேன - பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி), 2009 ஜூலை 25 முதல் 29 வரை ஈரான், தெஹ்ரானில் நடைபெற்ற CIRDAP தொழில்நுட்ப குழுவின் 25ஆவது கூட்டத்தில் (C-25) பங்கெடுத்தார்.

திரு.எம்.எம்.எம்.அஹியார் - ஆராய்ச்சி இணையாளர், 2009 செப்ரெம்பர் 20 முதல் 24 வரை அவுஸ்திரேலியா பிறிஸ்பேனில் நடைபெற்ற 12ஆவது சர்வதேச ஆறு கருத்தரங்கில் பங்கெடுத்தார்.

திருமதி கே.வை.பி.வீரரத்ன - உதவி நூலகர், 2009 டிசம்பர் 7 முதல் 12 வரை, புது டில்லியில் நடைபெற்ற நூலக, தகவல் வாழ்க்கைத் தொழில்புரிபவர்களுக்கான SAARC - உயர்தர WINISIS திட்டத்தில் பங்கெடுத்தார்.

## ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
## 2009 டிசம்பர் 31இல் உள்ளவாறு ஐந்தொகை

| | | 31.12.2009 | | 31.12.2008 | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பு | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்**<br>**நடைமுறைசாரா சொத்துக்கள்**<br>ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் | 2 | 38,282,861.09 | | 38,002,336.54 | |
| மூலதனங்கள்-நிலையான வைப்புக்கள் | 3 | 20,281,414.73 | | 17,534,769.99 | |
| திறைசேரி உண்டியல்கள் | | 8,699,757.00 | | 6,553,767.50 | |
| பதவியணியினர் முன்னேற்றம் | 4 | 20,445,068.72 | | 20,272,327.22 | |
| | | | **87,709,101.54** | | **82,363,201.25** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| கையிருப்புக்கள் | 5 | 3,023,420.55 | | 2,570,552.53 | |
| கடன்தருனர்கள் | 6 | 26,692,371.44 | | 27,187,918.33 | |
| வைப்புக்கள் | 7 | 662,070.00 | | 612,070.00 | |
| முற்கொடுப்பனவுகளும் கிடைக்க வேண்டிய கணக்குகளும் | 8 | 624,335.91 | | 672,835.70 | |
| முற்பணம் | 9 | 90,342.12 | | 79,041.10 | |
| வங்கியில் பணம் | 10 | 1,644,304.23 | | 2,751,717.76 | |
| கையிலுள்ள பணம் | | 10,000.00 | | 10,000.00 | |
| | | | 32,746,844.25 | | 33,884,135.42 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 120,455,945.79 | | 116,247,336.67 |
| **ஒப்புரவும், பொறுப்புக்களும்**<br>**மூலதன ஒதுக்கீடு** | | | | | |
| அரசாங்க மான்யம்-மூலதனம் | 11 | 122,382,500.00 | | 113,341,900.00 | |
| சேமிப்புக்களிலிருந்து பங்களிப்பு | | 1,102.372.79 | | 1,102.372.79 | |
| அமைச்சிலிருந்து மொத்தப் பங்களிப்பு | | 2,342,835.00 | | 2,342,835.00 | |
| கருத்திட்ட மூலதன நிதியம் | 12 | 14,886,206.09 | | 14,886,206.09 | |
| மூலதன ஒதுக்கு | | 3,242,284.40 | | 3,242,284.40 | |
| கருத்திட்ட பொது ஒதுக்கு | 13 | 16,301,977.47 | | 16,301,977.47 | |
| ஊக்குவிப்பு நிதியம் | | 137,061.91 | | 137,061.91 | |
| ஊக்குவிப்பு நிதியம்-கருத்திட்டங்கள் | | 324.14 | | 160,456.72 | |
| பயிற்சி நிதியம்-கருத்திட்டங்கள் | | 396,261.91 | | 396,261.91 | |
| பயிற்சி நிதியம்-நிறுவகத்தின் பங்கு | | 2,016,751.85 | | 590,819.86 | |
| முன்காவப்பட்ட நிகர பற்றாக்குறை | 14 | (81,830,476.61) | | (78,182,970.35) | |
| | | | 80,978,098.95 | | 74,319,205.80 |
| **பொறுப்புக்கள்**<br>**நடைமுறைசாராப் பொறுப்புக்கள்** | | | | | |
| பணிக்கொடை ஏற்பாடு | | 28,488,496.00 | | 30,101,245.75 | |
| | | | 28,488,496.00 | | 30,101,245.75 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| கடன்வழங்குனர்கள் | 15 | 8,130,575.59 | | 8,444,849.48 | |
| திரண்ட செலவினங்கள் | | 2,858,775.25 | | 3,382,035.64 | |
| | | | **10,989,350.84** | | **11,826,885.12** |
| **மொத்த ஒப்புரவும், பொறுப்புக்களும்** | | | **120,455,945.79** | | **116,247,336.67** |

(ஒப்பமிடப்பட்டுள்ளது) **தலைவர்**

(ஒப்பமிடப்பட்டுள்ளது) **பணிப்பாளர்**

(ஒப்பமிடப்பட்டுள்ளது) **உதவிக் கணக்காளர்**

## ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
## 2009 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
## வருமான, செலவினக் கணக்கு

| | குறிப்பு | 31.12.2009 ரூபா | 31.12.2008 ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| பொது திறைசேரியிலிருந்து நிதியங்கள் | | 87,600,000.00 | 96,200,000.00 |
| விடுதி, மகாநாட்டு மண்டப கட்டணங்கள் | 16 | 7,002,645.42 | 5,747,748.05 |
| வெளியீடுகளின் விற்பனை | | 120,664.50 | 192,561.50 |
| மூலதனங்கள் மீதான வட்டி | | 3,574,611.19 | 4,784,751.04 |
| பதவியணியினர் கடன்கள் மீதான வட்டி | | 934,455.41 | 957,221.98 |
| கருத்திட்டங்களிலிருந்து மீளவரும் உதவு தொகை | 17 | 1,970,411.45 | 2,092,118.49 |
| நானாவித வருமானம் | 18 | 3,370,804.92 | 1,125,416.30 |
| | | 104,573.592.89 | 111,099,817.36 |
| | | | |
| **செலவினம்** | | | |
| நிருவாக, தாபனச் செலவினம் | 19 | (100,194,572.28) | (103,819,651.60) |
| ஆராய்ச்சி, மற்றும் பயிற்சி செயற்பாடுகள் | | (8,336,366.97) | (12,486,127.18) |
| ஏற்பாட்டின் கீழ் கிடைக்காத கடன் | | 9,969.98 | 1,102,636.06 |
| | | | |
| நிதிப்படுத்தல் ஆகுசெலவின் முன் தொழிற்பாடுகளிலிருந்து | | | |
| நிகர வருமானம் | | (3,947,376.38) | (4,103,325.36) |
| நிதிப்படுத்தல் ஆகுசெலவு | | (26,750.00) | (25,090.80) |
| | | | |
| **வரிவிதிப்பின் முன் நிகர பற்றாக்குறை** | | (3,974,126.38) | (4,128,416.16) |
| வரிவிதிப்பு | | - | - |
| | | | |
| **வரிவிதிப்பின் பின்னரும், அதிவிசேட விடயங்களின் முன்னரும் நிகர வருமானம்** | | | |
| அதிவிசேட விடயங்கள் - வாகனங்களினதும், கழிவுகளினதும் விற்றுத்தீர்தல் மீதான இலாபம் | | 326,620.12 | 2,544,706.95 |
| **வருமானத்தை மீறிய செலவினம்** | | (3,647,506.26) | (1,583,709.21) |

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
**தலைவர்**

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
**பணிப்பாளர்**

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
**உதவிக் கணக்காளர்**

## ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
## 2009 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பணப் புழக்கக் கூற்று

| | குறிப்புகள் | ரூபா | |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | | |
| **ஆண்டுக்கான நிகர பற்றாக்குறை** | | | (3,647,506.26) |
| **பின்வருவனவற்றுக்கு சீராக்கல்கள்:** | | | |
| மதிப்பிறக்கம் | | 6,907,471.03 | |
| வாகனத்தையும், கழிவுகளையும் விற்றுத்தீர்த்தல் | | (326,620.12) | |
| மூலதன வருமானம் | | (3,574,611.19) | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 1,414,320.25 | |
| பணிக்கொடையின் கொடுப்பனவு | | (3,027,070.00) | 1,393,489.97 |
| | | | |
| தொழிலாற்றும் மூலதன மாற்றங்களின் முன் | | | (2,254,016.29) |
| தொழிற்படுத்தல் நஷ்டம்/இலாபம் | | | |
| | | | |
| **தொழிற்படுத்தல் மூலதன மாற்றங்கள்** | | | |
| கையிருப்புக்கள் | | (452,868.02) | |
| கடன்தருனர்கள் | | 495,546.89 | |
| வைப்புக்கள் | | (50,000.00) | |
| முற்கொடுப்பனவுகள், கிடைக்க வேண்டிய கணக்குகள் | | 48,499.79 | |
| முற்பணங்கள் | | (11,301.02) | |
| கடன்வழங்குனர்கள் | | (314,273.89) | |
| திரண்ட செலவினங்கள் | | (523,260.39) | (807,656.64) |
| | | | |
| **தொழிற்பாடுகளிலிருந்து நிகர பணம்** | | | (3,061,672.93) |
| | | | |
| **மூலதனச் செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | | |
| ஆதனம், பொறி, சாதனங்களின் கொள்வனவு | | (7,187,995.58) | |
| மூலதன வருமானம் | | 3,574,611.19 | |
| பதவியணியினர் முன்னேற்ற ஆகுசெலவு | | (172,741.50) | |
| | | | |
| **மூலதனச் செயற்பாடுகளில் இருந்து பயன்படுத்தப்பட்ட நிகர பணம்** | | | (3,786,125.89) |
| | | | |
| **நிதிப்படுத்தல் செயற்பாடுகளில் இருந்து பணப்புழக்கம்** | | | |
| அரசாங்க உதவு தொகை-மூலதனம் | | 9,040,600.00 | |
| கருத்திட்ட மூலதன நிதியம் | | | |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு - கருத்திட்டங்கள் | | (160,132.58) | |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு - நிறுவனத்தின் பங்கு | | 1,425,931.99 | |
| கழிவுகளினதும், வாகனத்தினதும் விற்றுத்தீர்த்தல் | | 326,620.12 | |
| | | | |
| **நிதிப்படுத்தல் செயற்பாடுகளில் இருந்து நிகர பணம்** | | | 10,633,019.53 |
| **பணம், பணச் சமப்படுத்தல்களில் நிகர அதிகரிப்பு** | | | 3,785,220.71 |
| காலத்தின் ஆரம்பத்தில் பணம், பணச் சமப்படுத்தல்கள் | I | | 26,850,255.25 |
| காலத்தின் முடிவில் பணம், பணச் சமப்படுத்தல்கள் | II | | 30,635,475.96 |
| **குறிப்புகள்:** | | | |
| **பணம், பணச் சமப்படுத்தல்கள்** | | I | II |
| | | **01.01.2009** | **31.12.2009** |
| மூலதனங்கள் - நிலையான வைப்புகள் | | 17,534,769.99 | 20,281,414.73 |
| திறைசேரி உண்டியல்கள் | | 6,553,767.50 | 8,699,757.00 |
| வங்கியில் பணம் | | 2,751,717.76 | 1,644,304.23 |
| கையிலுள்ள பணம் | | 10,000.00 | 10,000.00 |
| மொத்தம் | | 26,850,255.25 | 30,635,475.96 |

## 2009 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று

| | அரசாங்க உதவு தொகை மூலதனம் ரூபா | சேமிப்புகளில் இருந்து உதவு தொகை ரூபா | அமைச்சிலிருந்து மூலதன உதவு தொகை ரூபா | கருத்திட்ட மூலதன நிதியம் ரூபா | மூலதன ஒதுக்கு ரூபா | கருத்திட்ட பொது ஒதுக்கு ரூபா | ஊக்குவிப்பு நிதியம் ரூபா | ஊக்குவிப்பு நிதியம் கருத்திட்டங்கள் ரூபா | பயிற்சி நிதியம் கருத்திட்டங்கள் ரூபா | ஊக்குவிப்பு நிதியம் நிறுவக பங்கு ரூபா | திரண்ட வருமானம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01/01/2009இல் மீதி | 113,341,900.00 | 1,102,372.79 | 2,342,835.00 | 14,886,206.09 | 3,242,284.40 | 16,301,977.47 | 137,061.91 | 160,456.72 | 396,261.91 | 590,819.86 | (78,182,970.35) | 74,319,205.80 |
| திறைசேரியிலிருந்து கிடைத்த நிதியங்கள் | 9,040,600.00 | - | - | - | - | - | - | - | - | - | - | 9,040,600.00 |
| கருத்திட்டப் பங்களிப்புகள் | - | - | - | | - | - | - | - | - | 1,425,931.99 | - | 1,425,931.99 |
| வருமானமும், செலவினமும் | - | - | - | - | - | - | - | (160,132.58) | - | - | (3,647,506.26) | (3,807,638.84) |
| மொத்தம் | 122,382,500.00 | 1,102,372.79 | 2,342,835.00 | 14,886,206.09 | 3,242,284.40 | 16,301,977.47 | 137,061.91 | 324.14 | 396,261.91 | 2,016,751.85 | (81,830,476.61) | 80,978,098.95 |

## நிதிசார் கூற்றுக்கான குறிப்புகள்
## 31 டிசம்பர் 2009இல் முடிவடைந்த ஆண்டுக்குரியது

## 1. கணக்கிடல் கொள்கை

### 1.1 பொது

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கிடல் கோட்பாடுகளுக்கும், கணக்கிடல் நியமங்களுக்கும் இணங்க சரித்திரபூர்வ ஆகுசெலவு மாற்றீட்டின் கீழ் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

### 1.2. சொத்துக்களின் மதிப்பு

**(i) ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள்**

திரண்ட மதிப்பிறக்கம், கழிக்கப்பட்டு ஆகுசெலவில் ஐந்தொகையின் மீது ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆண்டொன்றுக்கு பின்வரும் வீதங்களில் நேர்கோட்டு முறை மீது மதிப்பிறக்கம் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| காணி | மதிப்பிறக்கம் | இல்லை |
| கட்டிடங்கள் | வருடத்திற்கு | 2 $^{1}/_{2}$% |
| உபகரணங்கள்/மரத்தளபாடங்கள் | வருடத்திற்கு | 10% |
| கணனி | வருடத்திற்கு | 20% |
| நலன்புரி உபகரணங்கள் | வருடத்திற்கு | 10% |
| நூல்கள் | வருடத்திற்கு | 10% |
| வாகனங்கள் | வருடத்திற்கு | 20% |

கொள்வனவு வருடத்தில் ஒரு முழு வருடத்தின் மதிப்பிறக்கம் சுமத்தப்படுகிறது.

பராமரிப்பும், பழுதுபார்த்தல்களும் ஏற்பட்டதாகச் செலவினமாகக் காட்டப்பட்டுள்ள அதேவேளை பாரிய மேம்படுத்தல்கள் மூலதனமாக்கப்பட்டுள்ளன.

**(ii) கடன்தருனர்கள்**

தேறுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகளில் கடன்தருனர்கள் குறிப்பிடப் படுகின்றனர். கிடைக்காததும், ஐயுறவிலானதுமான கடன்களுக்கு கணக்குகளில் போதியளவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஐயுறவுக் கடன்களுக்கான ஏற்பாடு அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு நிகர கடன்களின் 4%இல் செய்யப்பட்டுள்ளது.

**(iii) கையிருப்புக்கள்**

பாவனைக்குரிய கையிருப்புக்கள் ஆகுசெலவில் மதிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய கையிருப்புக்கள் குறைந்த ஆகுசெலவிலும் நிகர தேறக்கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளது. கையிருப்புக்களின் பெறுமதி FIFO முறையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

## 1.3 பணிக்கொடை

1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடையின் கொடுப்பனவின் கீழ் கொடுப்பனவுக்குரிய பணிக்கொடைக்கான கொடுப்பனவு நிதிசார் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 1.4 வருமான செலவினக் கணக்கு

பின்வருவனவற்றுக்குப் பின்னர் செலவினத்திற்கு மேலான வருமானம் (வருமானத்திற்கு மேலான செலவினம்) குறிப்பிடப்பட்டுள்ளது:

அ. நிறுவகத்தின் நாளாந்த தொழிற்பாட்டில் கிடைக்காத மற்றும் சந்தேகத்திற்குரிய கடன்களுக்கும், சகல எதிர்பார்க்கப்படும் எதிர்காலச் செலவினங்களுக்கும், ஆதனம், பொறிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றைச் செயற்றிறனான நிலையில் பராமரிப்பதற்கும் வழங்குதல்

ஆ. ஆண்டில் ஏற்படும் சகல செலவினங்களையும் சுமத்துதல்

# 2 - சொத்துக்களின் மதிப்பிறக்கத்தின் அட்டவணை - 2009

| விபரங்கள் | 01.01.2009இல் உள்ளவாறு ஆகுசெலவு ரூபா | 2009ஆம் ஆண்டின் போது மேலதிகங் கள்/(விற்றுத்தீர்த் தல்கள்) ரூபா | 01.01.2009இல் உள்ளவாறு மொத்த ஆகுசெலவு ரூபா | 01.01.2009இல் உள்ளவாறு திரட்டல்/ மதிப்பிறக்கம் ரூபா | 2009ஆம் ஆண்டுக்கான மதிப்பிறக்கம் ரூபா | 31.12.2009இல் முடிவடைந்த ஆண்டு க்கான திரட்டல்/ மதிப்பிறக்கம் ரூபா | 31.12.2009இல் நிகர மதிப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| காணி | 1,716,667.00 | - | 1,716,667.00 | - | - | - | 1,716,667.00 |
| கட்டிடங்கள் | 24,141,627.12 | 2,110,217.19 | 26,251,844.31 | 9,141,166.13 | 656,296.11 | 9,797,462.24 | 16,454,382.07 |
| உபகரணங்கள்/ மரத்தளபாடங்கள் | 27,618,144.73 | 4,044,144.03 | 31,662,288.76 | 19,237,335.38 | 1,061,273.67 | 20,298,609.05 | 11,363,679.71 |
| கணனி நிறுவுகை | 16,718,053.58 | 820,330.00 | 17,538,383.58 | 14,331,247.25 | 706,190.12 | 15,037,437.37 | 2,500,946.21 |
| மோட்டார் வாகனங்கள் | 12,668,988.06 | | | 7,348,739.06 | | | |
| | | (360,000.00) | 12,308,988.06 | (360,000.00) | 1,343,400.00 | 8,332,139.06 | 3,976,849.00 |
| நூல்கள் | 9,483,415.09 | 213,304.36 | 9,696,719.45 | 4,286,072.22 | 3,140,311.13 | 7,426,383.35 | 2,270,336.10 |
| நலன்புரி சாதனங்கள் | 3,734.55 | - | 3,734.55 | 3,733.55 | - | 3,733.55 | 1.00 |
| மொத்தம் | 92,350,630.13 | 6,827,995.58 | 99,178,625.71 | 53,988,293.59 | 6,907,471.03 | 60,895,764.62 | 38,282,861.09 |

| குறிப்புகள் | 31.12.2009 |
|---|---|
| **3. ஹெ.க.ஆ.ப.நி. மூலதனங்கள் - நிலையான வைப்புக்கள்** | |
| அரச அடமான, மூலதன வங்கியில் நிலையான வைப்புக்கள் | 5,535,500.00 |
| அரச அடமான, மூலதன வங்கியில் நிலையான வைப்புக்கள் (வீடமைப்பு கடன் திட்டம்) | 679,664.08 |
| அழைப்பு வைப்புகள் | 14,066,250.65 |
| | **20,281,414.73** |
| **4. பதவியணியினரின் முன்னேற்றம்** | |
| 01.01.2009இல் உள்ளவாறு மீதி | 20,272,327.22 |
| வருடத்திற்கான சீராக்கல்கள் | 172,741.50 |
| | **20,445,068.72** |
| **5. கையிருப்புக்கள்** | |
| வெளியீடுகள், சஞ்சிகைகள் | 1,373,322.00 |
| விநியோக பாவனைக்குரியவை | 1,284,629.55 |
| விற்பனை நிலையம் | 365,469.00 |
| | **3,023,420.55** |
| | |
| **6. கடன்தருனர்கள்** | |
| **பதவியணி கடன்தருனர்கள்** | |
| வீடமைப்புக் கடன் | 1,646,149.31 |
| திரண்ட கடன் | 21,987,239.32 |
| விசேட முற்பணம் | 2,250.00 |
| பண்டிகை முற்பணம் | 163,910.00 |
| இடம்பெயர்ந்த ஆட்களிடம் இருந்து வருமதி | 6,723.32 |
| சம்பள முற்பணம் | 939,885.04 |
| புலமைப்பரிசில் கடன்தருநர்கள் | 23,730,724.22 |
| | **48,476,881.21** |
| **வேறு கடன்தருனர்கள்** | |
| விடுதி/கேட்போர்கூடம்/மாநாட்டு மண்டபம் | 199,020.00 |
| கிடைக்கவேண்டிய மூலதன வருமானம் | 925,067.31 |
| நானாவித கடன்தருனர்கள் | 194,881.75 |
| உள்ளகப் பயிற்சி நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டியவை | 6,806.38 |
| கே.என்.யு.குணசேகரவிடமிருந்து கிடைக்க வேண்டியவை | 12,100.00 |
| அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டியவை | 85,527.16 |
| பதவி விலகிய பதவியணியினரிடமிருந்து கிடைக்க வேண்டியவை | 1,499,182.57 |
| விற்பனை நிலையம் | 27,397.25 |
| CIRDAP.இலிருந்து கிடைக்கவேண்டியவை | 49,686.77 |
| வாகனங்களுக்காக கிடைக்கவேண்டிய காப்புறுதிக் கோரல் | 173,700.00 |
| | **3,173,369.19** |
| மொத்த கடன்தருனர் - மொத்தம் | **51,650,250.40** |
| **கழிக்குக:** | |
| கிடைக்காத, சந்தேகத்திற்குரிய கடன்தருனர்களுக்கான ஏற்பாடு | (1,116,781.05) |
| கடன்தருனர்களுக்கான ஏற்பாடு (முறி) | (110,373.69) |
| புலமைப்பரிசில்களுக்கான ஏற்பாடு | (23,730,724.22) |
| | **26,692,371.44** |
| | |
| | |

| | |
|---|---|
| 7. **வைப்புக்கள்** | ரூபா |
| நிலையான - சிற்றுண்டியாளர் | 70,000.00 |
| நிலையான - காசாளர் | 1,500.00 |
| சில்லறை - பீலிக்ஸ் பெரேரா அன்ட் சன்ஸ் | 147,500.00 |
| சில்லறை - ஸ்ரீ லங்கா ரெலிகொம் (இன்ரர்நெற் வசதி) | 3,125.00 |
| சில்லறை - தபால் மா அதிபர் | 24,945.00 |
| சில்லறை - கொழும்பு காஸ் அன்ட் வோட்டர் கோ | 4,750.00 |
| சில்லறை - நீர் விநியோக, வடிகால் சபை | 500.00 |
| சில்லறை - செல்டெல் லங்கா லிமிற்றெற் | 3,500.00 |
| சில்லறை - இலங்கை மின்சார சபை | 406,250.00 |
| | **662,070.00** |
| 8. **முன்-கொடுப்பனவுகளும், கிடைக்கவேண்டிய தொகைகளும்** | |
| முன்-கொடுப்பனவுகள் | 624,335.91 |
| | **624,335.91** |
| 9. **முற்பணங்கள்** | |
| கொள்வனவுகளுக்கான முற்பணங்கள் | 71,097.12 |
| வேறு முற்பணம் | 19,245.00 |
| | **90,342.12** |
| 10. **வங்கியில் பணம்** | |
| இலங்கை வங்கி கணக்கு இல. - 2323293 | 136,780.91 |
| இலங்கை வங்கி கணக்கு இல. - 2323292 | 893,891.80 |
| இலங்கை வங்கி கணக்கு இல. - 2323317 | 431,393.53 |
| இலங்கை வங்கி கணக்கு இல. - 2323315 | 182,237.99 |
| | **1,644,304.23** |
| 11. **அரசாங்க மான்யம் - மூலதனம்** | |
| 01.01.2009இல் உள்ளவாறு மீதி | 113,341,900.00 |
| ஆண்டின் போது பங்களிக்கப்பட்ட மூலதனம் | 9,040,600.00 |
| | **122,382,500.00** |
| 12. **கருத்திட்ட மூலதன நிதியம்** | |
| 01.01.2009இல் உள்ளவாறு மீதி | 14,886,206.09 |
| ஆண்டின் போது மேலதிகங்கள் | - |
| | **14,886,206.09** |
| 13. **கருத்திட்ட பொது ஒதுக்கு** | |
| 01.01.2009இல் உள்ளவாறு மீதி | 16,301,977.47 |
| ஆண்டின் போது மேலதிகங்கள் | - |
| | **16,301,977.47** |
| 14. **நிகர குறைவுபாடு** | |
| 01.01.2009இல் உள்ளவாறு மீதி | (78,182,970.35) |
| 2009ஆம் ஆண்டுக்கான வருமானத்தை மிஞ்சிய செலவினம் | (3,647,506.26) |
| | **(81,830,476.61)** |
| 15. **கடன்வழங்குனர்கள்** | |
| மீளளிக்கக்கூடிய கேள்வு வைப்புக்கள் | 107,962.20 |
| மீளளிக்கக் கூடிய உணவு விடுதி வைப்புக்கள் - உபதிஸ்ஸ பரணமான | 50,000.00 |
| கொடுப்பனவு செய்யப்படாத செலவினம் | 15,994.15 |
| ராஜினாமா செய்த ஊழியர்களுக்கு கொடுப்பனவுக்குரியவை | 150,015.00 |
| ஊழியர் மற்றும் உணவக வைப்பு | 13,084.50 |
| கொடுப்பனவு செய்யவேண்டிய முத்திரை கட்டணங்கள் | 5,050.00 |
| ஏ.எல்.பி.பெரேரா | 36,736.62 |
| தடுத்துவைத்தல் | 114,741.25 |
| **கருத்திட்டங்களுக்கு எதிரான கடன்வழங்குனர்கள்** | |
| அரிசி உற்பத்தி மீதான நூல் | 824,767.68 |

| | |
|---|---|
| R-300 - சமுர்த்தி மற்றும் சமுர்த்தி சாரா நுண்-வியாபார முயற்சிகளின் | |
| ஒப்பீட்டுப் பகுப்பாய்வு | 234,996.50 |
| R-322 - வாரியப்பொலவில் அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார நிலையமொன்றை தாபிப்பதற்கான சாத்தியவளத்தை ஆய்வதற்கான முன்மொழிவு | 26,119.08 |
| R-324 - குடித்தன மட்டத்தில் அரிசி பதப்படுத்தலின் பொருளாதார சாத்தியவளம் | 42,568.10 |
| R-332 - மேல் மாகாணத்தில் சந்தைகளின் மேம்படுத்தல் மீதான ஆய்வு | 1,535,452.72 |
| T-294 - FIVIMS | 217,946.87 |
| R-318 - இலங்கையில் உணவுப்பாதுகாப்பு ஊறுபடுந்தன்மை தகவல் படவரைவு முறைமை | 22,450.07 |
| R-334 - சாத்தியவள ஆய்வு - பலாங்கொடையில் உத்தேசமான பொருளாதார நிலையம் | 24,048.32 |
| R-371 - அனுராதபுரம், திருகோணமலை மாவட்டங்களில் உத்தேசமான கரும்பு கருத்திட்டத்தின் முன்-சாத்தியவள ஆய்வு | 878,184.35 |
| T-228 - மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி வேலைக்கான மூலோபாயங்கள் மீதான செயலமர்வுகள் | 613,680.24 |
| R-359 - இலங்கையில் வறுமை சார்பு கொள்கையை வகுத்தமைக்கின்ற கலந்தாய்வு | 808,926.55 |
| R-330 - சாத்தியவள ஆய்வு - குருந்துவத்தையில் உத்தேசமான பொருளாதார நிலையம் | 163,945.94 |
| R-356 - உத்தேசமான மொனராகலை, சியம்பாண்டுவ சீனி கருத்திட்டத்தின் முன் - சாத்தியவள ஆய்வு | 21,304.81 |
| T-226 - பரிந்துரைத்தல் செய்திகளின் விழிப்பியலை உருவாக்குவது மீது சனசமூக அடிப்படையிலான தலைவர்களுக்கான திட்டம் | 387,068.94 |
| T-239 - கமத்தொழில் சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு மீதான உள் - நாட்டு பயிற்சி செயல் திட்டம் | 461,285.95 |
| T-236 - இலங்கை நீர் அபிவிருத்தி அறிக்கை மீதான உசாவுகை செயலமர்வு | 41,749.05 |
| T-232 - பயிற்சிச் செயல்திட்டம் | 443,078.38 |
| T-245 - வறுமைத் தணிப்பை கவனத்திற்கெடுப்பதற்காக கிராமிய அபிவிருத்தியில் புதியதும், தோன்றுகின்றதுமான சவால்கள் மீதான பிராந்திய பயிற்சித் திட்டம் | 889,418.32 |
| | **8,130,575.59** |
| | |
| **16. கேட்போர்கூட, மகாநாட்டு மண்டப, விடுதிக் கட்டணங்கள்** | |
| கேட்போர்கூட, மகாநாட்டு மண்டபக் கட்டணங்கள் | 3,489,702.50 |
| விடுதிக் கட்டணங்கள் | 3,512,942.92 |
| | **7,002,645.42** |
| | |
| **17. கருத்திட்ட வருமானம்** | |
| நிருவாகச் செலவினம் மற்றும் கருத்திட்ட வருமானம் | 1,970,411.45 |
| | |
| | |
| **18. நானாவித வருமானம்** | |
| விடுதிக் கட்டணம், அறை வாடகை | 50,655.60 |
| பெல்விஹார அறை வாடகை | 22,400.00 |
| கணனி வருமானம் | 14,073.10 |
| கேள்வுக் கட்டணங்கள் | 211,200.00 |
| ஏனைய வருமானம் | 3,072,476.22 |
| | **3,370,804.92** |
| | |
| **19. நிருவாக, தாபனச் செலவினம்** | |
| நிரந்தரப் பதவியணியினர் | 44,747,719.21 |
| சமயாசமய பதவியணியினர் | 5,188,828.06 |
| ஊ.சே.நி. | 7,254,353.39 |
| ஊ.ந.நி. | 1,457,642.10 |
| மேலதிக நேர வேலை | 1,659,332.58 |
| விடுமுறைக் கொடுப்பனவு | 12,794.00 |
| பணிக்கொடை | 1,414,320.25 |

| | |
|---|---|
| வாழ்க்கைச் செலவு படி மற்றும் வேறு | 12,668,045.12 |
| உள்ளூர் உணவுப் படி | 319,376.71 |
| உள்ளூர் போக்குவரத்து | 240,164.67 |
| வெளிநாட்டுப் பிரயாணப் படி | 358,315.17 |
| காகிதாதி மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 580,660.38 |
| வேறு நுகர்வன | 320,952.80 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | 1,013,837.65 |
| சீருடைகள் | 165,352.07 |
| வாகனப் பழுதுபார்த்தல்கள் | 1,348,481.55 |
| பொறி, இயந்திராதிகள், சாதனங்களின் பழுதுபார்த்தல் | 957,773.89 |
| மதிப்பிறக்கம் | 6,907,471.03 |
| கட்டிடப் பழுதுபார்த்தல்கள் | 813,839.02 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 1,701,749.71 |
| மின்சாரம் | 3,110,889.09 |
| நீர் சிட்டைகள் | 577,157.84 |
| உள்ளூராட்சிச் சபைகளுக்கான வரிகள் | 282,041.30 |
| தபால் கட்டணங்கள் | 507,721.50 |
| போக்குவரத்து | 359,830.50 |
| சட்ட ஆலோசகர் | 120,000.00 |
| கணனி ஆலோசகர் | 128,000.00 |
| வாகன ஆலோசகர் | 90,000.00 |
| செய்திப்பத்திரிகைகள் | 213,667.00 |
| உத்தரவுப்பத்திரம் மற்றும் காப்புறுதி | 499,881.98 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 1,572,560.04 |
| சுத்திகரித்தல் சேவைகள் | 457,627.83 |
| சலவைச் சேவைகள் | 226,635.00 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 150,000.00 |
| மருத்துவக் கட்டணங்கள் | 14,813.15 |
| உணவகக் கட்டணங்கள் | 145,101.15 |
| தகவலைப் பரப்புதல் | 701,895.24 |
| நானாவிதச் செலவினங்கள்- வேறு | 400,120.00 |
| சட்டக் கட்டணங்கள் | 334,490.00 |
| நலன்புரி | 432,145.00 |
| விளம்பரம் | 435,045.96 |
| நேர்முகங்காணல் கட்டணங்கள் | 4,000.00 |
| ஆளுனர் சபை | 71,000.00 |
| அச்சிடுதல், வெளியீடுகள் | 217,660.10 |
| பொழுதுபோக்கு | 11,280.24 |
| | **100,194,572.28** |
| **20. காலத்தின் ஆரம்பத்தில் பணமும் பணச் சமப்படுத்தலும்** | |
| முலதனம் - நிலையான வைப்புக்கள் | 17,534,769.99 |
| திறைசேரி உண்டியல்கள் | 6,553,767.50 |
| வங்கியில் பணம் | 2,751,717.76 |
| கையில் பணம் | 10,000.00 |
| | **26,850,255.25** |
| | |
| **21. காலத்தின் இறுதியில் பணமும் பணச் சமப்படுத்தலும்** | |
| முலதனம் - நிலையான வைப்புக்கள் | 20,281,414.73 |
| திறைசேரி உண்டியல்கள் | 8,699,757.00 |
| வங்கியில் பணம் | 1,644,304.23 |
| கையில் பணம் | 10,000.00 |
| | **30,635,475.96** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனதுஇல / My No: ஏஎப்/டீ/எச்ஏஆர்ரீஜ/எவ்ஏ/2009

ඔබේ අංකය / உமது இல / Your No.:

දිනය / திகதி / Date: 2010 யூன் 09

தலைவர்,

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்

**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 05 ஆம் இலக்க ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2010 ஏப்ரல் 06 ஆம் திகதி நிறுவகத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமாப்பிக்கப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA
දුරකථනය / தொலைபேசி / Telephone. 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் ஆதாரப்படுத் தத்தக்க சான்றுகளைப் பரிசீலித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் முகாமையால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள், குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள், போன்றவற்றை மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டு மொத்தமான முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அவசியமானதென எனது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றும் எனது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கினதென்றும் நான் நம்புகின்றேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளைப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைப்பாட்டினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2:2. நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2:2:1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளி நிறுவகங்களில் இருந்து பெறப்படவேண்டிய ரூபா 1,074,978 தொகை நிதிக்கூற்றுக்களில் ஆராய்ச்சிக் கடன்பட்டோராகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் பெறுமதி அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சேவையில் இருந்து நீக்கப்பட்டிருந்த புலமைப்பரிசு பெற்ற கடன்பட்டோரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 790,411 தொகை

நிதிக்கூற்றுக்களில் புலமைப்பரிசு பெற்ற கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அக் கடன்பட்டோரின் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 1984 மற்றும் 1988 ஆகிய இரு ஆண்டுகளின் போதும் நீர்ப்பாசன அமைச்சில் இருந்து நிறுவகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த ஆனால் உரிமை மாற்றம் செய்யப்பட்டிராத 2 வாகனங்கள் நிறுவகச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக் கிரயம் ரூபா 1,116,500 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகத்தின் 10 மோட்டார் வாகனங்களினதும் 07 மோட்டார் சைக்கிள்களினதும் கிரயம் ரூபா 5,951,968 ஆனதுடன் இம் மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 15 வருடமளவிலான நீண்ட காலம் கடந்திருந்த போதிலும், தற்போதும் நிறுவகத்தினால் பயன்படுத்தப்படுவதனால் மீள்பெறுமதியிடப்பட்டு அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணனி மற்றும் உதிரிப்பாகங்களின் கீழ் காண்பிக்கப்பட்ட பெறுமதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணனிகளின் பெறுமதி ரூபா 12,133,274 ஆனதுடன் அவையும் மீள்பெறுமதியிடப்பட்டிராததுடன் இதன் காரணத்தினால் கணனி மற்றும் உதிரிப்பாகங்களாக நிதிக்கூற்றுக்களில் பாரிய பெறுமதி காண்பிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2009 ஆம் ஆண்டின் போது நூலகப் புத்தகங்களின் பெறுமானத்தேய்வு சதவீதம் மாற்றப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பான தாக்கம் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்களை அவற்றின் எதிரே காண்பிக்கப்பட்ட சான்றாதாரங்கள் இன்மையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணப் பெறுமானத்தேய்வு | 1,061,274 | 2002 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகள் |
| (ஆ) | நிலையான வைப்புக்கள் | 20,281,415 | திறைசேரி அங்கீகாரம் |

### 2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புலமைப் பரிசில் பெற்ற 10 கடன்பட்டோர்கள் தொடர்பாக தற்போது நீதிமன்றத்தின் வழக்குகள் விசாரணைக்குட்படுத்தப்படுவதுடன் அக் கடன்பட்டோரிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 17,469,949 தொகை அறவிடப்படவேண்டி இருந்தது. இக் கடனபட்டோரில் 06 கடன்பட்டோரிடம் இருந்து 11 ஆண்டுகளுக்கு மேலான காலமாக கடன் தொகை அறவிடப்படுவதற்கான வழக்கு விசாரணையில் உள்ளதுடன் அவர்களிடம் இருந்து ரூபா 11,468,645 தொகையை அறவிடப்பட வேண்டி இருந்தது.

(ஆ) நீதிமன்றத்தில் வழக்கு முடிவுற்றுள்ள புலமைப்பரிசில் பெற்ற 03 கடன்பட்டோர்களிடம் இருந்து கடன் தொகை பகுதியளவில் அறவிடப்படுவதுடன் அந் நபர்களிடம் இருந்து 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,130,487 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது.

(இ) 2003 ஆம் ஆண்டின் போது சேவையை விட்டு விலகிச் சென்ற புலமைப்பரிசில் பெற்ற கடன்பட்டோருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்காக சட்டமாஅதிபர் திணைக்களத்திடம் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் இது வரை வழக்கு தொடரப்பட்டிராததுடன் அந் நபர்களிடம் இருந்து 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,619,110 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது.

(ஈ) சேவையில் இருந்து விலக்கப்பட்ட புலமைப்பரிசில் பெற்ற கடன்பட்டோரிடம் இருந்து ரூபா 790,411 தொகை அறவிடப்பட வேண்டி இருந்ததுடன் இக் கடன்பட்டோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருக்கவில்லை.

(உ) வெளித் தரப்பினர்களிடம் இருந்து நிதியினைப் பெறுவதனூடாக மேற்கொள்ளப்படும் ஆய்வுச் செயற்திட்டத்திற்காக 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் வெளித்தரப்பினரிடம் இருந்து பெறப்பட வேண்டிய தொகை ரூபா 1,074,978 ஆனதுடன் அத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு 2009 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) விடுதி வசதிகள் வழங்கப்படுவது மற்றும் மண்டப வசதிகள் வழங்கப்படுவதற்காக வெளித்தரப்பு அரச நிறுவகங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 199,020 தொகையான கட்டணப் பெறுமதி 4 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த போதிலும் அத் தொகையினை நடப்பாண்டின் போதும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நானாவித கடன்பட்டோரின் கீழ் நிறுவகங்கள் மற்றும் 09 நபர்களிடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 187,882 தொகை 4 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | காரியாலயக் கட்டளைகள் 163 இன் 7.7.1 ஆம் பிரிவு | உத்தியோகத்தர் எவரும் விலகிச் செல்ல முன்னர் கடனாளியினால் மிகுதிக் கடன் தொகை முற்றாகச் செலுத்தப்பட்டு தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அக் கடன் அறவிடப்படாது உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சிறந்த ஆளுகை தொடர்பான வழிகாட்டி நடைமுறைக் கோவை | |
| | (i) 9.2 ஆம் பிரிவு | நிறுவகத்தின் ஒழுங்கமைப்புக் குறிப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிந்திருக்கவில்லை. |
| | (ii) 9.3.1 ஆம் பிரிவு | நிறுவகத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்காக திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3:1. நிதிசார் மீளாய்வு

### 3.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 3,647,506 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,583,709 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,063,797 தொகையால் பற்றாக்குறையில் ஓர் முன்னேற்றத்தைக் காண்பித்தது.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 செயற்பாடு

ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 8,557,510 தொகையான 09 ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் செயற்பாடுகள் 2009 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்தப்பட வேண்டி இருந்த போதிலும் தொடர்ந்தும் செயற்படு நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட வேண்டிய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,103,603 தொகையான 03 ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் வரைபு அறிக்கை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் இறுதி அறிக்கை கணக்காய்வுத் தினமாகிய 2010 மார்ச் 10 ஆம் திகதியில் உள்ளவாறும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டுத்திட்டத்தினூடாக 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 900,000 தொகையான ஆராய்ச்சிச் செயற்திட்டமும் மதிப்பீட்டுப்

பெறுமதி ரூபா 1,100,000 தொகையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 02 உம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி என்பன ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் சிபாரிசு, பிரேரனை மற்றும் மதிப்பீட்டிலேயே செயற்படுவதாயினும் 2009 ஆம் ஆண்டின் போது அத்தகைய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் போது வெளித் தரப்பினரால் நிதி வழங்கப்பட்டிருந்த 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் பூர்த்தியெய்தியிருந்த 07 ஆராய்ச்சிச் செயற்திட்டங்களுக்காக எஞ்சியிருந்த ரூபா 730,930 தொகையும் 2009 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்தியான 02 ஆராய்ச்சிச் செயற்திட்டங்களுக்காக எஞ்சியிருந்த ரூபா 1,556,758 தொகையும் காரியாலயக் கட்டளை இல. 330 இன் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தின் சேவையில் இருந்து விலகிச் சென்றிருந்த 21 உத்தியோகத்தர்களிடம் இருந்து சில வருட காலமாக அறவிட வேண்டிய நிலையில் உள்ள ரூபா 471,181 தொகையான கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) நிறுவகத்தின் சேவையில் இருந்து நீக்கப்பட்ட 02 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 234,732 தொகையை அறவிடுவதற்கு காரியாலயக் கட்டளை 163 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தில் நிர்வாகப் பிரிவு ஒன்று இருக்கையில் சம்பள முரண்பாட்டுக் குழுவின் விசாரணை அல்லது திறைசேரியின் அங்கீகாரம் இன்றி வெளி

உத்தியோகத்தர்கள் மூவர் நியமிக்கப்பட்டு சம்பள முரண்பாட்டுக்குழு ஸ்தாபிக்கப்பட்டு அவ் உத்தியோகத்தர்கள் இருவருக்கும் ரூபா 20,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கமநல அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சினால் 2002 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த "பொலரோ" வகையான 05 மோட்டார் வாகனங்களை சட்டரீதியான உரித்துடைய நிறுவகங்களுக்கு கையளிப்பதற்கோ அல்லது அது தொடர்பாக வேறு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கோ 2009 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வறுமைக் குறைப்பு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் போது முகம் கொடுக்கப்படும் சவால்கள் தொடர்பாக பிராந்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 2,492,050 செலவிடப்படக் கூடும் என மேலதிகமதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அம் மதிப்பீட்டின் பிரகாரம் பொது நல்வாய பிரதான செயலாளர் காரியாலயத்தில் இருந்து ரூபா 1,915,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உரிய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 1,025,581 ஆனதுடன் நிறுவகம் உரிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட வேண்டிய தொகையும் அத் தொகையில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் சகல செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து ரூபா 889,418 தொகை எஞ்சியிருந்தது. இம் மேலதிகத் தொகை உரிய நிறுவகத்திற்கு அனுப்பிவைக்கப்படாது பிடித்து வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.2.3 விளைவற்ற சொத்துக்கள்

காகிதாதிகள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் இருப்பில் 03 ஆண்டுகளுக்கு மேலான காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத ரூபா 87,650 தொகையான இருப்பு ஒன்று காணப்பட்டதுடன் இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.4 வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

நிறுவகத்தின் 32 – 4671 ஆம் இலக்க வாகனம் சகநல அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சிற்கு 2008 பெப்ரவரி மாதத்தின் போது கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2010 பெப்ரவரி 28 ஆம் திகதியில் உள்ளவாறும் அவ் வாகனத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினத்திற்கு இடையே கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக ஈடுபடுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறுவகத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை பேணல்.

(இ) ஊழியர் கடன்

ஒப்பம். எஸ். ஸ்வர்ணஜோதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.
*ms/v*